# புகழ் மாலை

கி. வா. ஜகந்நாதன்



**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✱✱✱

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✱✱✱

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# புகழ் மாலை

[திருவண்ணாமலை யோகி ஸ்ரீ ராம்சுரத்குமார் மீது பாடியவை]

கி. வா. ஜகந்நாதன்

*

கிடைக்கும் இடம் :

**காந்தமலை**

2, நார்ட்டன் முதல் தெரு, சென்னை-600 028

புகழ் மாலை

முதல் பதிப்பு—நவம்பர், 1981

ஹோர் அண்டு கோ அச்சகம்
சென்னை - 600 001

# முன்னுரை

"ஞானத் தபோதனரை வாவென், றழைக்கும் மலை அண்ணுமலை" என்பதற்கிணங்க, நெடுங் காலமாகத் திருவண்ணுமலையில் பல ஞானிகள் இருந்து வருகிருர்கள். குகை நமசிவாயர், குரு நமசிவாயர், சேஷாத்திரி சுவாமிகள், ரமண மகரிஷி, ஈசுவர சுவாமிகள் முதலியவர்கள் அத்தலத்தில் இருந்து அதன் புனிதத்தை மிகுதிப் படுத்தியிருக்கிருர்கள்.

இப்போது **யோகி ஸ்ரீ ராம்சுரத்குமார்** என்னும் பெரியவர் அங்கே தங்கி வருபவர்களுக்கு அருள் பாலித்து வருகிருர். காவி உடை இல்லை; மொட்டைத் தலை இல்லை. என்ருலும் உண்முக நோக்கமுடைய மகா யோகியாக அவர் விளங்குகிருர். பல அன்பர்கள் வந்து அவரைத் தரிசித்து நலம் பெறுகிருர்கள். அவர் சித்துவிளையாட்டு ஒன்றும் செய்வதில்லை. பெரிய உபதேசங்களைச் செய்வதில்லை, ஆனுலும் அவர் முன் அமர்ந்தால் மனம் ஒருமைப் படுகிறது. நேரம் போவது தெரியாமல் அப்படியே உட்கார்ந்திருக்க முடிகிறது.

அவரைத் தரிசிக்கச் சென்ற பொழுதெல்லாம் வாய் மொழியாகவே பல பாடல்களை எளியேன் பாடுவதுண்டு. அவற்றைப் பதிவு செய்து பிறகு படியெடுத்துக் கொடுக்க, செப்பம் செய்து புத்தகமாக வெளியிட முடிந்தது. இப்படி மூன்று புத்தகங்கள் வெளி வந்திருக்கின்றன. '**புகழ் மாலை**' என்ற இது நான்காவது புத்தகம். எந்த எந்தத் தேதியில் இவை பாடப் பெற்றன என்றும் குறித்திருக்கிறேன். இறுதியில் சில பாடல்கள் எழுதியவை.

குழந்தைபோல உடம்பு குலுங்கச் சிரிக்கும் அப் பெருமானை அணுகி வணங்குபவர்கள் சிறிது நேரமாவது மனம் ஒருமித்து அமர்ந்து விடுகிறார்கள். உண்மை ஞானிகளின் சந்நிதியில் இப்படி நிகழ்வது இயல்பு.

இந்தப் பாடல்களில் நான் அறிந்த வகையில், சுவாமிகளது கோலத்தையும், இயல்பையும், அநுபவ நிலையையும், அன்பர்கள் அடையும் இன்பத்தையும் ஒருவாறு சொல்ல முயன்றிருக்கிறேன், முன் வெளியான புத்தகங்களைப் படித்தவர்களில் சிலர் திருவண்ணாமலை சென்று இந்த யோகியைத் தரிசித்து நலம் பெற்றிருக்கிறார்கள்.

முருகன் திருவருளால் இந்த நான்காவது புத்தகம் வெளியாகிறது. இந்த நூல்களை வெளியிடுவதில் மிக்க ஊக்கம் காட்டும் சகோதரர் சிரஞ்சீவி **ஞானகிரி கணேசனுடைய** ஆர்வம் எல்லை காண இயலாதது. இவற்றை வெளியிட்டுப் பலரும் பாடி மகிழவேண்டுமென்பது அவர் நோக்கம்.

உணர்ச்சி விஞ்சும்போது பாடல் எழுகிறது அது எப்போது நிற்குமென்று சொல்ல இயலாது. ஒரே சமயத்தில் அறுபது, எழுபது என்று கூடப் பாட முடிகிறது.

இந்தப் பாடல்களைப் பாடக் கேட்டு மகிழ்ந்து ஆசி கூறுவார் சுவாமிகள். அதைவிட இவற்றிற்கு வேறு பயன் என்ன வேண்டும்?

'காந்தமலை'
26—11—81

**கி. வா. ஜகந்நாதன்**



வினை வீசும் விசிறியினன்

# புகழ் மாலை

### (எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

பண்டாய நான்மறைகள் பாடும் கோவைப்
பலசமயம் தலைவன்இவன் என்னும் தேவை
உண்டாமற் றில்லையா என்றே சில்லோர்
உள்ளத்தில் ஐயம்கொள் பெரிய தேவைக்
கண்டாலும் கேட்டாலும் அன்பர் உள்ளம் 1
களிக்கின்ற பெருமானைக் கருத்தில் வைத்தான்
திண்டாடும் மனமடக்கும் வித்தை தேர்ந்த
ராமசுரத் குமாரனெனும் சிறந்த யோகி.

### (அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணியெண்ணி
ஏங்கிநித்தம் இடரில் வீழ்ந்து
பண்ணாத பாவமெலாம் பண்ணினோம்
எனஇரங்கிப் பரித விப்பீர்
அண்ணாவில் எம்பெருமான் திருமுன்னர் 2
வந்தன்பில் அணைந்து பின்னர்
விண்ணாளும் ராமசுரத் குமார்பாலே
வந்தணைமின் மேன்மை காண்பீர்.

சொல்லாலே சொலற்கரிய பெரும்புகழான்,
மனமடக்கும் சூழ்ச்சி தன்னை
எல்லாரும் அறியுமா காட்டுகின்ற
மோனநிலை இசைப்பான்; என்றும்
வெல்லாத ஐம்பொறியை வெல்லுகின்றான், 3
ஞானமெனும் விரகு தேர்ந்தான்,
கல்லாதார் தமக்கிரங்கும் ராமசுரத்
குமாரென்னும் கனவான் கண்டீர்.

ஓமென்னும் எழுத்துக்குள் ஒருபொருளாய்
 நுட்பமாம் ஒன்றை உன்னி
நாமென்றும் காணுதற்கு வலியில்லேம்;
 என்றாலும் நடலை நீக்கி
ஆமென்று சொல்வதற்கோர் ஞானியுளான்;
 அவன்தான்அண் ணாமலைக்கண்
சேமமுறும் ராமசுரத் குமாரனெனும்
 திருப்பெயர்கொள் சிறந்த ஞானி. 4

கண்டாலும் கேட்டாலும் கண்டறியார்
 மிகவிரிந்த காசினிக்கண்
விண்டாலும் தேறறியார்; அவர்கண்டால்
 வியப்புள்ளே வீழ்ந்து மூழ்கிச்
சண்டாளத் தகைமையெல்லாம் போகநின்று
 சாந்தநிலை சார்வார் அன்றோ?
விண்டாரால் அறியலுறும் ராமசுரத்
 குமார்செய்யும் வித்தை இஃதே. 5

வந்தார்க்குத் தாய்போலப் பால்தருவான்;
 பழம்தருவான்; மனம்அடக்கக்
கந்தாகும் விரகென்னும் அன்பினையே
 சொல்கின்றான்; காதல் செய்மின்;
எந்தாயாய் எந்தையாய்க் குருவாகித்
 தெய்வமாய் இருக்கும் அப்பன்,
கந்தாடும் பொருளறிந்த ராமசுரத்
 குமாரென்னும் கவினார் யோகி. 6

நாடாத நாட்டமெல்லாம் நாடுகின்றீர்;
 எந்நாளும் ஞாலம் தன்னில்
ஆடாத ஆட்டமெல்லாம் ஆடுகின்றீர்;
 அதனாலே அமைதி உண்டோ?

பாடாத பாட்டெல்லாம் பாடுகின்ற
தன்மையிலே பதிந்த தைக்கண்
கூடாகக் காட்டுகின்றான் ராமசுரத்
குமாரென்னும் கோமான் அம்மா! 7

காதலித்து மனைவணங்க இல்லறத்தில்
வாழ்வாரும் கண்டே இன்பம்
ஆதரித்தே அவனடியை வணங்கினாற்
குழந்தையாய் அருள்செய் வான்காண்;
பேதமுற்ற மனமடக்கி ஒன்றாகி
நிற்கின்ற பெற்றி செய்வான்;
யாதெவர்க்கு வேண்டிடினும் கொடுத்தருளும்
ராமசுரத் குமாராம் எம்மான். 8

கல்லாரும் மனமுருகக் கற்கின்றார்;
இறைவன்பால் கனத்த அன்பை
ஒல்லாத படியெல்லாம் செய்தற்கே
உரைக்கின்றான்; ஓமென் றோரும்
சொல்லாலே விளங்குகின்ற பெரும்பொருளைத்
தன்மனத்தே சுடரச் செய்தான்;
வல்லாளன் ராமசுரத் குமாரென்னும்
யோகியினை வந்தே காண்பீர். 9

நண்ணாதார் பலர்வந்து நண்ணுகின்றார்;
மனம்திறந்து நாடு கின்றார்;
அண்ணாதார் இவன்பாலே அண்ணுகின்றார்;
திருவண்ணா மலையில் ஆர்ந்தே
உண்ணாடும் எழிலுடைய பெருமானை
ராமசுரத் குமாராம் உள்ளத்
திண்ணாளும் யோகியினைக் கண்டார்கள்
உபசாந்தி சேர்வார் தாமே. 10

பூவினிலே மணமிருக்கும் தகைபோலத்
　தண்ணீரில் பொற்பார் தண்மை
மேவிநிற்கும் அதுபோல அனலினிலே
　வெம்மையுள்ள விரகு போலத்
தாவிநிற்கும் மனமடங்கச் சாந்தம்எனும்
　மணம்பரப்பித் தயைசெய் வான்காண்
ஆவலினை மிகப்பெற்றோர் புகழ்கின்ற
　ராமசுரத் குமாராம் அண்ணல். 11

காலத்தை வென்றவர்கள் காலனையும்
　வெல்லலாம் கடிதி லென்னும்
சீலத்தை மிகப்போற்றி வாழ்கின்றார்;
　அவரெல்லாம் சிறந்து வந்தே
ஆலத்தை அமுதாக்கும் பெருமான்தான்
　இவனென்றே அணைந் திறைஞ்சிச்
சாலத்தான் இன்புறுவார்; ராமசுரத்
　குமார்பாலே சரணென் பீரே. 12

பொருளெல்லாம் பொருளன்று மயலுழந்து
　பூவினிலே பொருந்தி நின்று
தெருளறியா மாந்தரெலாம் இங்கேவந்
　தால்சற்றே தெளிந்து நிற்பார்;
உருளெனவே ஓடுகின்ற மனந்தன்னை
　ஓரிடத்தே உற்று நிற்கப்
பொருளளிப்பான் ராமசுரத் குமாரென்னும்
　திருநாமப் பொற்புத் தேவன். 13

இடத்தாலே அடங்காது; காலத்தால்
　அடங்காதாம்; எண்ணுக் குள்ளே
படத்தாலும் அடங்காது, பரப்பிரமம்
　என்றுசொல்லும் பரமன் பாலே

கடத்தாரும் தண்ணீர்போல் உளத்தினிலே
திருவருளைக் காட்டுகின்றான்
சடத்தாரும் இருளில்லா ராமசுரத்
குமாரென்னும் தலைவன் தானே. 14

தானாகி எல்லாமாய் எப்பொருளும்
சார்ந்திருக்கும் தவம்சேர் அண்ணல்
தேனாகி அமுதாகிச் சர்க்கரையாய்த்
தித்திக்கும் சிறப்புச் சேர்வான்;
வானாகி மண்ணாகி வளியாகி
ஒளியாகி வயங்கும் அப்பன்,
ஏனோர்பால் வந்திலான்; இவன்பாலே
வந்துள்ளான் என்னக் காண்பீர். 15

திருவண்ணா மலைதன்னில் முனிவோர்கள்
பலர்இருந்தார்; சேய்போல் அன்னார்
உருவெண்ணி இறைஞ்சிநித்தம் இன்புறுவார்
பலர்என்றே ஓர்ந்து நின்றேம்.
மருவொன்றும் மலர்போலத் திருப்பாதம்
காட்டுகின்ற மாண்பார் ஞானி,
கரவறியா ராமசுரத் குமாரென்னும்
யோகியினைக் காண்பீர் வந்தே. 16

ஒன்றாகி இலங்குகின்ற பரப்பிரமம்
தனைநெஞ்சில் உறுத்தி வைத்தே
ஒன்றாகச் சிந்தைசெய்தே பொறியடக்கி
வாழ்வார்கள் உயர்ந்து நிற்பார்;
ஒன்றாகும் முத்தியினைப் பெறுவார்கள்
என்றென்றே உரைக்கும் வாய்மை
ஒன்றாகும் ராமசுரத் குமார்தன்னைக்
கண்டவர்கள் உய்வார் நன்றே. 17

இரண்டாகும் பொருளில்லை, இரண்டுகண்ணும்
ஒன்றனையே எய்தி நோக்கும்;
இரண்டாகும் சிவசக்தி என்றாலும்
அவையெல்லாம் இயைந்த ஒன்றும்;
இரண்டாகும் நாட்டமிலா தொன்றாக
இருப்பதற்கே எண்ணும் என்றே
இரண்டறுக்கும் ராமசுரத் குமார்யோகி
எஞ்ஞான்றும் இசைப்பான் அன்றே. 18

மூன்றுகண்ணன் போலஇவன், அமுதளிப்பான்,
பாலளிப்பான்; முயன்று நிற்பார்
ஊன்றுகின்ற நெஞ்சகத்தே உறைகின்றான்
எனஎண்ணி உண்மை காணீர்;
தோன்றுகின்ற பொருளெல்லாம் சத்தியமாய்
மயங்குகின்ற தோற்றம் கண்டீர்;
ஏன்றபெரு ஞானியாம் ராமசுரத்
குமார்பாலே எய்து வீரே. 19

நான்காகும் யோகத்தின் நற்பொருளை
மனத்தாலே நாட கில்லாச்
சான்றரிய பெரும்பொருளைப் பரப்பிரமம்
எனும்பொருளைத் தனித்து நோக்கி
யான்பிரமம் எனநிற்கும் பெரியோர்போல்
இவனிருக்கும் இயல்பு காணீர்;
தேன்புகலும் ராமசுரத் குமாரென்னும்
யோகியிடம் செல்வீர் நீரே. 20

அஞ்சுபொறி தமையடக்க வழிகாணார்,
ஆறுபகை யடக்க மாட்டார்;
விஞ்சுகின்ற மயலுழப்பார்; என்றாலும்
இவன்பாலே மேவி நின்று

தஞ்சமடை கின்றவர்க்கு ஞானத்தைச்
சொல்கின்றான்; சார்ந்தி றைஞ்சிக்
கொஞ்சுகின்ற மொழியுடையான் ராமசுரத்
குமார்பாலே கூடு வீரே. 21

ஆறாகும் சமயமெலாம் சொல்கின்ற
கடவுள்ஒன்றே, அவர்கள் எல்லாம்
வேறானார் இலர்என்ற சமரசத்தை
எந்நாளும் விளக்கிப் போற்றும்
பேருளன், தனைக்கண்டார் தமக்கெல்லாம்
வரமுதவும் பெற்றி யாளன்,
நாறாத மலரனையான் ராமசுரத்
குமாரென்னும் நல்லோன் அம்மா! 22

ஏழென்னும் பிறவியெலாம் அடியோடே
போக்குகின்ற எம்மான், எங்கும்
ஏழென்னும் கடல்கடத்தும் தோணிபோல்
நாமிருக்க இயல்பு சொல்வான்,
ஏழென்னும் நிலமெல்லாம் கடந்துநிற்கும்
வகையவன்பால் எய்த லாமே;
ஏழென்னும் மலைபோல்வான் ராமசுரத்
குமார்பாலே எய்து வீரே. 23

எட்டென்னும் குணமுடைய திருவண்ணா
மலைநாதன் இரண்டு பாதம்
தட்டின்றிப் பணிமின்கள் என்றென்றே
சுற்றியவன் தானை நித்தம்
கட்டின்றி நினைக்கின்ற பேராளன்
ராமசுரத் குமாராம் காதல்
மட்டின்றி ஓங்குகின்ற பேருளான்;
அவனடியே வந்து சார்வீர். 24

நவமென்னும் பத்தியெலாம் இவையென்று
நாமறிய நாட்டு கின்றான்;
சிவமென்றும் சக்தியென்றும் முருகனென்றும்
சொல்கின்ற செய்தி எல்லாம்
பவம்வெல்லும் ஒன்றனையே சொல்கின்ற
படியென்றே பகர்கின் றானால்,
தவமொன்றும் ராமசுரத் குமார்என்னும்
பெரியதொரு தவத்தோன் கண்டீர். 25

பத்தாகும் இந்திரியம் அவையடக்கிப்
பத்திமிகப் பரிந்து கொண்டு
சித்தாகிச் சத்தாகி ஆனந்த
மாகியுள தெய்வம் தன்னை
எத்தாலும் நினைந்திருக்க வழிசொல்வான்;
தன்னையண்டும் எளியோர்க் கெல்லாம்
சத்தாகும் நடைபயிற்றும் ராமசுரத்
குமாரென்னும் தவம்சேர் அண்ணல். 26

எண்ணாலே எண்ணுதற்கோர் அளவுண்டோ?
இவன்புகழை எண்ணி யெண்ணி
விண்ணாளும் பெருமையெலாம் மேவிடலாம்
என்றக்கால் விரைந்து சென்றே
கண்ணாலே அவனுருவைக் கண்டிரண்டு
செவியாலே காத லோடு
நண்ணுநின் றிடும்உரையைக் கேட்பார்கள்
எல்லோரும் நல்லோர் ஆவார். 27

**(எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)**

பிறவியெலாம் ஒழிப்பதற்கே உபாயம் வேண்டின்
பேணுகின்ற ஐம்பொறியை அடக்கல் வேண்டின்
அறவினைகள் செய்வதற்கே ஆற்றல் வேண்டின்
அருள்நிலத்தில் நடையாடும் பான்மை வேண்டின்

பொருள்தன்னைப் பெரிதாக மதிக்கா துள்ள
பொற்பெல்லாம் மிகவேண்டின் இங்கே வம்மின்,
தெருள்சேரும் ராமசுரத் குமார்தன் மாட்டே
திருவிருக்கும், உருவிருக்கும், சேர லாமே. 28

அஞ்ஞானம் தனைநீக்கி ஒளியைக் காட்டி
அடர்கின்ற ஐம்பொறிகள் அடக்கும் ஆற்றை
மெய்ஞ்ஞானத் தால்பெறலாம் எனவே சொல்லி
மேவிநிற்கும் பெருஞானி, அண்ணு வெற்பில்
சுஞ்ஞானம் தனைக்காட்டி யோகு காட்டித்
தூயோனைத் தூயவர்கள் போற்றும் செல்வன்,
எஞ்ஞான்றும் கண்டிடலாம் அவனை; ராம
சுரத்குமார் எனும்பேரோ டிருக்கின் றானே. 29

யோகியர்கள் பலர்இருந்தார், இந்நாள் இல்லை,
யோகமென்ப தெல்லாம்பொய் என்கின் றார்கள்
மாகருணை வள்ளலுள்ளான் இங்கே வந்து
ராமசுரத் குமாரனவன் மாம லர்த்தாள்
பாகமுற நெஞ்சமர்ந்து சாந்தி மேவின்
பரிவுடனே அவனருளைக் காண்பீர்; அல்லால்
வேகமுறு மனமடக்க விதியொன் றில்லை;
விரைமின்மிக விரைமின்மிக விரைமின் நீரே. 30

**(தரவு கொச்சகக் கலிப்பா)**

கண்டதெலாம் மெய்யாகக் கேட்டதெலாம் மெய்யாகக்
கொண்டவெலாம் மெய்யாகக் கோலமெலாம் மெய்யாக
அண்டுகின்ற நிலைமாறி அருளொன்றே மெய்யாக
எண்டருவான் ராமசுரத் குமாரென்னும் யோகியரோ. 31

காலவெள்ளம் நீந்திடலாம்; காலனையும் வென்றிடலாம்;
சாலப்பேர் ஆனந்தம் சார்ந்திடலாம்; நீர்வம்மின்,
சீலமுறும் ராமசுரத் குமாரென்னும் செய்யோனை
ஏலவந்தே பணிந்திட்டால் இவையெல்லாம் நமக்காகும்;

கட்டோடே கனத்தோடே கருதியிங்கே வாழ்ந்திடுவீர்,
பட்டோடே பணத்தோடே பலர்மெச்ச இருந்திடுவீர்,
எட்டோடே இரண்டென்ன இருப்பதற்கே வகையறியீர்,
கட்டாரா ராமசுரத் குமார்தன்னைக் கண்டிடுமின். 33

செஞ்சொல்லால் பேசுகின்ற திருப்புகழைக் கேட்டுவக்கும்
அஞ்சொல்லான்; குழந்தைபோல் அருஞ்சிரிப்புச் சிரித்திடுவான்,
வெஞ்சினமே ஏயாத விரகுள்ளான், அருணையினில்
வஞ்சமிலான் ராமசுரத் குமார்மாட்டே வம்மினே. 34

இடையன்பால் பால்பெறலாம் வேறென்ன எய்தலாம்?
மிடைபொறியின் விரகெல்லாம் மேவாமல் நின்றிடலாம்
அடைதரும்நன் ஞானமெல்லாம் அறிந்துணர வாய்ப்பாகும்
நடைதெரிந்த ராமசுரத் குமார்பாலே நண்ணுமினே. 35

எத்தாலும் வாழ்வதற்கே இணங்குகின்றீர், காலன்வந்து
செத்தாலே என்செய்வீர்? சிவன்தன்னை நினைப்பதற்கே
ஒத்தாரும் மனமுங்கள் உறவாக வேண்டுமென்னில்
சத்தான வன்ராம சுரத்குமார் தனைச்சார்வீர். 36

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

உலகமெலாம் சுற்றிடினும் தலங்களெலாம்
சென்றிடினும் ஒன்றை யெண்ணிக்
கலகமிலா வழிதெரிந்து மனமடக்கி
நிற்கின்ற கதிதான் வேண்டும்;
அலகிலவாம் சமயமெலாம் ஒருவனையே
சொல்கின்ற அமைதி தேர்வீர்;
பலகலையும் கற்றுணர்ந்தார் போற்றுகின்ற
ராமசுரத் குமார்பால் வம்மின். 37

கண்ணாடி தனக்குள்ளே நம்மைநாம்
காணுகின்றோம்: கருதின் அங்கே
எண்ணாடிப் பார்க்குங்கால் ஒன்றுமிலை;
அதுபோல இவன்தன் மாட்டே
நண்ணுநின்றார் எல்லாம் நமக்குறவன்
என்கின்றார்; நயந்தே ஏதும்
எண்ணாமல் அவன்உளந்தான் கண்ணாடி
போல்தூய்தாய் இருக்கும் அன்றே. 38

மலமடக்கிப் பந்தமெலாம் அறப்போக்கி
மனத்தினையும் வசித்த டக்கிக்
குலமடக்கிச் சாதியினை நனிஅடக்கும்
குறியெல்லாம் கொண்டு நீவிர்
பலமுடைய விஞ்ஞானம் பெற்றிடவே
வம்மினெனப் பகர்கின் றேன்யான்;
தலமுடைய அருணையினில் ராமசுரத்
குமார்பாலே சார்மின் நீரே. 39

(எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

விண்ணாகி விண்ணுக்குள் சுடரு மாகி
விளைகின்ற சுடருக்குள் ஒளியு மாகி
தண்ணாரும் நிலமாகி அங்கி யாகிச்
சார்தரும்நற் பூதமாய்ச் சார்கின் றானை
எண்ணாரப் போற்றியன்பிற் சிறைப்ப டுத்தும்
இயல்புடையான் ராமசுரத் குமார யோகி;
பண்ணார அவன்புகழைப் பாடு கின்றார்
பந்தமெலாம் அறுத்துநின்றே இன்பம் காண்பார். 40

காலத்தை வெல்லுதற்கோர் உபாயம் சொல்வேன்;
காலனையும் வெல்லுதல் கூடும் என்பேன்;
ஞாலத்தைச் சுற்றிவந்தால் பயன்ஒன் றுண்டோ?
நானென்னும் அகந்தையினைப் போக்கல் வேண்டும்;

சீலத்தால் மிகப்பெரியான், அருணை தன்னில்
திகழ்ராம சுரத்குமார் தன்பால் சென்றே
ஓலத்தை இடுமின்நீர்; அப்போ துங்கள்
உள்ளத்தே உண்மைநிலை தோன்றல் ஆமே. 41

அகரமுதல் எழுத்தாகி இசையு மாகி
ஐம்பூத மாய்ஐந்து புலனு மாகிச்
சிகரமிகு மலையாகிக் குளமாய் என்றும்
சீகரம்சேர் ஆழியாய் நிற்பான் தன்னைப்
பகர்வதற்கோர் சொல்லில்லை; எனினும் அன்னோன்
பாதத்தை மனத்தகத்தே வைம்மின் என்றே
பகருகின்றான் அருணையினில் இருக்கும் யோகி,
பலர்புகழும் ராமசுரத் குமாரன் தானே. 42

எள்ளுக்குள் எண்ணெயுள்ள படியே போல
எழில்மலர்க்குள் மணமிருந்த வகையே போலக்
கள்ளுக்குள் சுவையிருந்த தன்மை போலக்
கனலுக்குள் வெம்மையுள்ள படியே போல,
உள்ளுக்குள் உளத்துக்குள் ஒருவன் நின்றான்,
உணருமினே என்றுநித்தம் சாற்று கின்றான்,
விள்ளுக்குள் அடங்காத பெரிய சீலன்
வியன்ராம சுரத்குமார் ஆகும் யோகி. 43

நாட்டகத்தில் இருக்கின்றார் பொருளைத் தேடி
நல்லநிலம் தனைத்தேடி வாழ்வு பெற்றோம்
ஈட்டகத்தே மிகப்பணத்தைச் சேர்த்தோம் என்றே
இறுமாந்தே இருப்பார்கள்; மரணம் வந்தால்
காட்டுகின்ற பொருளெல்லாம் துணையாங் கொல்லோ?
கருத்தன்அவன் திருவடியைக் காண லாமே;
வேட்டுநிற்பின் பற்றின்றி எனச்சொல் கின்றான்,
வியன்ராம சுரத்குமார் என்னும் யோகி. 44

பொருளெல்லாம் திருடர்வந்து கொண்டு போவார்;
போற்றியிதை வங்கியிலே வைப்போம் என்று
தெருளுறவே அறிகின்ற நீங்கள் இந்தத்
தேகத்தில் ஆன்மதனம் இருத்தல் கண்டு
மருளுகின்ற எமனாலே பறிபோ கின்ற
வகையெல்லாம் உணர்ந்தால்நீர் ஞானம் கொள்வீர்;
வெருளறியா ராமசுரத் குமார யோகி
விளம்புகின்ற இவ்வுண்மை கேட்டு நிற்பீர். 45

எத்தனைதான் கற்றாலும் பிறர்க்கே ஓதி
இயல்பாக உபதேசம் செய்தா லுந்தான்
அத்தனையும் பொருளாமோ? காலன் வந்தே
அடர்கின்ற போதவற்றால் பயனும் உண்டோ?
சித்தமெலாம் சிவன்பாலே இருத்தல் வேண்டும்;
சிந்தையினை அடக்குகின்ற திறமும் வேண்டும்;
இத்தனையும் உபதேசம் செய்யா நிற்பான்
எழில்ராம சுரத்குமார் என்னும் யோகி. 46

பூதங்கள் ஐந்தாகிப் பொலியும் வீடாம்
பொய்யுடலம் தனைநமக்கே உரிய தென்றே
ஏதங்கள் இல்லாமே காத்துப் போற்றி
எந்நாளும் பொலிவதற்கே எல்லாம் சேர்ப்பீர்,
நாதங்கொள் சிலம்பணிந்த பரமே சன்தன்
நல்லருளைப் பெறுவதற்கே நாட் டில்லீர்,
சேதங்கொள் வகையிதென்று செப்பு கின்றான்
தேம்பலிலா ராமசுரத் குமார யோகி. 47

புலனைந்தும் பொறிகலங்கி மாயும் காலைப்
பொருள்வந்து துணையாமோ? மலத்தால் ஆகும்
கலகமிலாத் தலமென்று தூயோர் நெஞ்சில்
கலக்கின்ற உறவன்றன் தாளை யெண்ணி

மலமறுக்க வகைசெய்தால் இன்பம் காண்போம்,
வம்மினென உரைக்கின்றான், அருணை தன்னில்
பலர்புகழும் தூயபெரு ஞானி யாகப்
பரவுதிரு ராமசுரத் குமாராம் யோகி. 48

கல்லுருகி னாலும்சற் றுருகா நெஞ்சிற்
கவலையுளோம் என்றுநைந்து பயனென் றில்லை;
சொல்லுருகிப் புகழ்பாடி ஆண்ட வன்பால்
தூயநெஞ்சை வைத்திட்டால் நலமாம் என்றே
மல்லெடுக்கும் பொறியடக்கும் வழியைச் சொல்வான்,
மாஞானி யர்தம்முள் ஞானி யாகும்
நல்லபெரு மானும்சீர் அருணை தன்னில்
நடக்கின்ற ராமசுரத் குமாராம் யோகி. 49

பொல்லாங்கு பலசெய்து மனத்தில் ஏக்கம்
புகுந்துநின்று வாடுகின்ற நண்பீர், என்றும்
நல்லார்க்கு நல்லவனாய் நாடும் அண்ணல்,
ஞானமிகப் போதிக்கும் பெரிய ஆசான்,
சொல்லார்ந்த புகழுடையான், அருணை தன்னில்
தூயனென உலவுகின்ற பெரிய ஞானி,
எல்லார்க்கும் நல்லவனும் பெரியோன் யோகி
ராமசுரத் குமாரென்னும் இயற்பேர் கொண்டான். 50

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

வேதமும் பொருளு மாகி
விரிதரும் புவியு மாகி
நாதமும் விந்து மாகி
நற்பெரும் கலையாய் நிற்கும்
நாதன்றன் உருவம் தன்னை
நண்ணிநன் நெஞ்சால் நோக்கும்
சீதனும் பெரியோன் ராம
சுரத்குமார் என்னும் சீலன். 51

பாலினைப் பலகால் ஈவான்,
பண்புறும் மொழியைப் பேசிச்
சாலவே அன்பு செய்யும்
தாயைப்போல் இருக்கும் ஐயன்,
வேலுடை ஐயன் என்றே
விரும்புவார்க் குருவம் காட்டும்
சீலனும் பெரிய தெய்வம்
ராம்சுரத் குமாராம் தேவன். 52

தெய்வத்தைக் கண்ணா லேநீர்
சேரத்தான் கண்ட துண்டோ?
சைவத்தைக் கண்டா ரெல்லாம்
சார்சிவன் தனைக்கண் டாரோ?
மெய்வத்தை இன்ன தென்றே
மேவியே காண்ப தற்கு
மெய்வித்த ருகும் ராம
சுரத்குமார் பாலே வம்மின். 53

(வேறு)

கண்டவெலாம் கோலமாய் விண்டவெலாம்
நல்லுரையாய்க் காட்டும் சித்திங்
குண்டென்று பிறர்தம்மை நயக்கின்ற
பலருள்ளார்; ஓங்கும் ஞானம்
அண்டுமவர் பாலில்லை; அவர்புகழே
வேட்டுநின்றார்; அவர்போல் அன்றித்
திண்டிறலார் நல்யோகி ராமசுரத்
குமாரென்னும் செய்ய பேரான். 54

பாகைதலை அணிகின்றான்; வெண்தாடி
புனைகின்றான்; பல்கால் சேய்போல்
வேகமுறச் சிரிக்கின்றான்; வந்தார்க்கே
நன்மொழியை விளம்பு கின்றான்;

சீகரமார் இயல்புடையான், மெய்ஞ்ஞானத்
துறவுடையான், சேர்வார் தங்கள்
பாகம்நின்றே நலம்செய்வான், ராமசுரத்
குமாரென்னும் பண்பன் தானே. 55

பாயிருக்கும்; அதன்மேலே அமர்ந்திருப்பான்;
அவனருகே பலர்வந் தேய்ந்தே
நோயிருக்கும் மனமடக்க முயல்கின்றார்;
என்றாலும் நுட்ப மாகத்
தாயிருக்கும் அன்பினையே எவர்கண்டார்?
அவரெல்லாம் சார்வார் நன்மை.
வாயிருக்கும் இன்சொல்லான் ராமசுரத்
குமாரென்னும் மாத வத்தோன். 56

**(தரவு கொச்சகக் கலிப்பா)**

கருத்தூன்றி நினைப்பதற்கே காலமில்லை, வேலைபல
பெருத்தோங்கி வாழ்வெல்லாம் பெருமைபடப் பேசுகின்றீர்;
திருத்தோன்றல் ராமசுரத் குமாரென்னும் தேவனுடை
உருத்தோன்றக் கண்டுவிட்டால் உளைஉள்ளம் அடங்குமரோ! 57

எந்நாளும் வாழ்வதற்கே இச்சைகொண்டீர், என்றாலும்
பன்னாளும் வாழ்வதற்குக் காலன்தான் விடமாட்டான்;
இந்நாள்போல் எந்நாளும் இருந்திடலாம் என எண்ணி
இன்னாத பேசாமல் எய்துமிங்கே; அருள்கிடைக்கும். 58

திருவண்ணா மலையுள்ள தேசுபெறும் மூர்த்தியெலாம்
உருவண்ணி இங்கொன்றாய் உற்றதுபோல் இருக்கின்றான்;
மருவண்ணா நின்றதொரு மாலையான்; எம்முடைய
முருகன்போல் ராமசுரத் குமாரென்னும் முனியரசன். 59

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

வேதத்தால் உணர்கின்ற பொருள்வாழி!
மேலோர்கள் மேவி நின்ற
சீதத்தால் புகழ்கின்ற பனுவல்கள்
மிகவாழி! சீர்சி றந்த
நாதத்தால் சிலம்பணிவான் திருவண்ணா
மலையான்தான் நன்கு வாழி!
ஏதத்தே நில்லாத ராமசுரத்
குமாரன்தன் இயல்பு வாழி! 60

(21–11–1980)

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

மாயையென் பதனை வீட்டி
மலங்களை அறவே யோட்டித்
தூயநற் சுகத்தை நாட்டித்
தொன்னிலை மிகவே கூட்டி
வாய்மையே இயங்கும் வீட்டில்
வளர்தரும் பேற்றைப் பெற்றான்
நாயகன் எங்கள் அண்ணல்
ராம்சுரத் குமார நாதன். 61

வென்றியைக் காட்டும் வீரன்,
விமலனும் செய்ய தீரன்,
நன்றிதே என்று ணர்த்தும்
நல்லனும் பெரிய சூரன்
கன்றிய உளத்தைப் போக்கிக்
கருணையால் நலம்செய் பான்மை
ஒன்றுவான் அருணை மேவும்
ராம்சுரத் குமார யோகி. 62

காமனை யறவே ஓட்டிக்
  காலனைத் தெரிய வீட்டிச்
சேமமார் மொழியைக் கூட்டிச்
  சிறந்திடும் உபாயம் மாட்டி
வாமமார் தருமவ் வீட்டில்
  வாழ்ந்திடும் நெறியைக் காட்டி
ஏமமார் தரச்செய் கின்றான்
  ராம்சுரத் குமாராம் ஏந்தல். 63

(வேறு)

கருணையெனும் கண்ணுளன், இன்சொல்லே
  நிதம்பேசும் கர்த்தன், நித்தன்,
மருளறுக்கும் திருமொழியான், மலமறுக்கும்
  வென்றியினன், வாய்மை யென்றும்
திறமெனச்சொல் கின்றான்நம் துயரமெலாம்
  போக்குகின்ற தீரன் என்றும்
நலமுறச்செய் அருணையினில் வாழ்கின்றான்
  ராமசுரத் குமார நாதன். 64

(தரவு கொச்சகக் கலிப்பா)

ஓங்காரப் பொருளீதென் றுணர்ந்ததன்பால் மனம்செலுத்தித்
தேங்கார்வ முடன்நின்று தியானம்செய் வோர்க்குரியன்
பாங்காகப் பாலளித்துப் பழமளிக்கும் பரிவுள்ளான்,
தீங்காரா அருணைராம் சுரத்குமா ராம்செம்மல். 65

(எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

கண்ணினிலே கருணையினைக் காட்டும் நேயன்
  கையினிலே விசிறிகொண்டு வீசும் தூயன்
விண்ணவரும் அறியாத இன்பம் காட்டி
  வீழ்பவர்க்கே அருள்செய்யும் வித்த கன்காண்

மண்ணுலகத் தேபிறந்து வாழும் மாந்தர்
மதிபடைக்கும் நல்லருளை ஈகின் றானல்
அண்ணல்எங்கள் அருணைநகர் வாழும் பெம்மான்
அரியதிரு ராமசுரத் குமாரன் தானே. 66

வேதத்துள் மேவுகின்ற பொருளை என்றும்
வித்தகர்கள் நாடுகின்ற செம்மை யான
போதத்துட் பெரும்பொருளை புந்திக் குள்ளே
புகவைத்து ஞானத்தைச் சொல்லு கின்றான்;
மோதுற்ற மாயையினை அழிக்கும் செம்மல்
மோனமுனி ஆகின்ற பெரிய அண்ணல்
சீதத்தண் பொழில்வளரும் அருணை தன்னில்
திகழ்கின்றான் ராமசுரத் குமார மேலோன். 67

ஞானியெனச் சொல்வார்கள் சிலர்; மற் றோர்கள்
நலமுள்ள பித்தனெனப் பேசு வார்கள்;
மோனமுறு முனிவனென்றே அன்ப ரெல்லாம்
முன்வந்தே பணிவார்கள்; அருணை தன்னில்
ஈனமில்லா வகைகோலம் காட்டி யென்றும்
இளங்குழந்தை போலவே சிரிக்கின் றானல்,
தானறுத்த தன்மையினைக் கண்ட தேவன்
சார்கின்ற ராமசுரத் குமார நாதன். 68

பொய்யெல்லாம் போவதற்கே வழியைக் காட்டிப்
புன்னெறியை அறவீழ்த்தும் நெறியை நீட்டி
மெய்யெல்லாம் இதுவென்றே அளந்து காட்டி
வேதத்தின் மாபொருளிஃ தென்று கூட்டிச்
செய்கின்ற நலமெல்லாம் செய்கின் றானல்
சீரருணை ராமசுரத் குமாரன் என்போன்;
உய்யும்வழி பெறநிற்பீர் இங்கே வந்தால்
உளக்கவலை நீங்கஉப சாந்தி காண்பீர். 69

பாலருந்தி வருவார்க்கே நலத்தைச் செய்வான்;
பயம்போக்க நன்மொழியை ஈந்து வப்பான்;
காலெடுத்தே தலைவைக்கும் அன்பர் கட்கே
கதிகாட்டி விதிபோக்கும் கருணை செய்வான்;
சீலமுற்ற பேர்களுக்கே உண்மை தேறச்
செய்கின்றான்; அருணையெனும் சீரார் ஊரில்
பாலனெனத் திகழ்கின்றான், பலரும் போற்றும்
பண்ணவனும் ராமசுரத் குமார யோகி. 70

யோகந்தான் இதுவென்றே இருப்பார் பல்லோர்;
உத்தியினால் வேதத்தின் பொருளீ தென்பார்;
போகந்தான் இதுவென்றே புசிப்பார் பல்லோர்;
புவியினிலே வாழ்வினில்நற் பயனைத் தேரார்;
சாகும்வரை இப்படியே இருந்து விட்டால்
சாங்காலம் எமன்வந்தால் என்ன செய்வார்?
போகும்நெறி இதுவென்றே காட்டு கின்றான்
பூமன்எங்கள் ராமசுரத் குமார யோகி. 71

சொல்லாடா மோனத்தில் தனியி ருந்து
சொக்கும்வகை இவன்பாலே காண லாகும்;
மல்லாடா வகைஐந்து பொறியை மாய்த்து
மனமென்னும் பெட்டகத்தில் இறையை வைத்தே
அல்லெனினும் பகலெனினும் உபசாந் தத்தில்
அமைந்திருக்கும் வாழ்வதனைச் சொல்லு கின்றான்;
தொல்லடைந்த அருணைநகர் தன்னில் வாழும்
தூயனெங்கள் ராமசுரத் குமார மேலோன். 72

தானாகி அமர்கின்ற வித்தை தன்னைச்
சாந்தநிலை அடைந்துவக்கும் நலத்தைச் செய்வான்;
நானென்றே மிகப்பிதற்றி ஆண வத்தால்
நலிந்தழியும் மாந்தருக்கே வழியைக் காட்டித்

தேனெனவும் அமுதெனவும் உரையைச் சொல்லித்
தித்திக்கப் பேசுவான்; பாலை யீவான்;
வான்வரும் புகழருணை நகரில் வாழும்
மதிசிறந்த ராமசுரத் குமாரன் தானே. 73

கல்லேனும் உருக்குகின்ற தகையன், நெஞ்சில்
களங்கமிலான்; எஞ்ஞான்றும் நன்மை பேசிச்
சொல்லேறும் படிஅன்பர் உளத்துள் வைத்துச்
சொருபமதைக் காட்டுகின்றான்; ஞான மூர்த்தி;
மல்லேறும் திண்தோளால் பயன்தான் உண்டோ?
வகையுறவே கல்விகற்றால் பயனும் உண்டோ?
அல்லாரா வகைஞானம் பெறவே காட்டும்
அவன்ராம சுரத்குமா ராகும் மேலோன். 74

தலையினிலே பாகையினைத் தரித்தான்; ஆங்கே
தாடியுண்டு; வெண்மைநிறம் மேவ லுண்டு,
கலையினிலே காணாத உண்மை யெல்லாம்
காட்டுகின்றான்; தன்னிலையை நாட்டு கின்றான்;
அலைவடக்கும் மனம்சாந்தி பெறவே வைப்பான்;
அருணையினில் எஞ்ஞான்றும் திகழும் யோகி,
நிலையுறற்கே இவனைவந்து பணிந்தால் அக்கால்
நீண்டசுகம் கண்டிடலாம் வம்மின் வம்மின். 75

காயத்தைப் பெற்றுவிட்டோம், விரக நோயால்
கலங்கிப்பின் மாளாமே ஞான மென்னும்
தோயத்தால் நன்னெஞ்சைக் கழுவி உற்ற
சுகந்தன்னைக் கண்டிடவே வழியைச் சொல்வான்,
மாயத்தைப் போக்குதற்கும் மலத்தை நீக்கும்
வாழ்வினையே அடைதற்கும் கதியைக் காட்டி
நேயத்தால் சிறக்கின்ற தூயோன் எங்கள்
நின்மலனும் ராமசுரத் குமார யோகி. 76

மண்ணாளும் அரசரெலாம் எங்கே போனார்?
மதிபடைத்த பெரியரெலாம் எங்கே வாழ்வார்?
விண்ணாளும் தேவருக்கும் இறுதி யுண்டால்;
வேதாந்த சித்தாந்த முடிவு தன்னைக்
கண்ணாளன் ராமசுரத் குமாரன் காட்டிக்
கருணைசெய்வான்; அருணையெனும் பதியில் வந்து
திண்ணார மனமடக்கும் செய்கை காண்பீர்,
தேவனிவன் என்றிவனைத் தெரிசிப் பீரே. 77

கல்லாத மாந்தர்களே யெனினும் வந்து
கமலத்தாள் பணிந்திட்டால் கருணை ஈவான்;
அல்லாடும் அஞ்ஞானம் தன்னைப் போக்கி
அருள்விருந்தை நனியளிக்கும் உயர்ந்த செம்மல்;
சொல்லாடா வகைமோன நிலத்தில் நின்று
சுகம்காண வழியிதென்று சொல்லும் மெய்யன்,
வல்லாளன் அருணைதன்னில் மேவி வாழும்
மாதவனும் ராமசுரத் குமார யோகி. 78

பூவினிலே கலந்திருக்கும் மணத்தைப் போலப்
பொற்பாரும் பாலினிலே சுவையைப் போல
யாவையுமாம் அல்லவுமாம் எம்பி ரான்தான்
இயல்பெல்லாம் ஒன்றுதான் என்று சொல்வான்;
சாவதனை நீக்குதற்கே வழியைக் காட்டிச்
சாந்திபெறும் நிலையினையும் சொல்லி நிற்பான்;
ஆவதிவன் தனைக்கண்டால் அருளே சாரும்
அருணைநகர் ராமசுரத் குமாரன் அன்றே. 79

கண்ணுக்குள் மணியாகி மணியில் நின்ற
கதிர்வீசும் ஒளியாகிக் கலந்து நிற்பான்;
மண்ணுக்குள் கந்தமாய்ப் புனலில் ஒன்றி
வளர்கின்ற சுவையாகி நின்று காப்பான்;

திண்ணுற்ற மனம்கொள்ளும் பெரிய யோகி,
சீவர்களைக் கருணையினால் புரந்தாள் கின்றான்;
தண்ணுற்ற பொழில்சூழும் அருணை தன்னில்
சார்கின்றான் ராமசுரத் குமார சாமி. 80

எள்ளுக்குள் எண்ணெய்போல் எங்கும் நின்ற
இறைவனையே காணலுறு மனிதர் நெஞ்சத்
தெண்ணுக்குள் எண்ணமெனக் கலந்து நின்ற
எம்மானைக் காணகில்லா மாந்தர் வந்தால்
நண்ணுற்றே அவன்பாதம் வணங்கு கின்றார்;
ஞானியிவன் எனச்சொல்லிப் பணிகின் றார்கள்;
அண்ணுற்ற சுவைப்பாலில் அமுதம் ஈவான்,
அருணைநகர் ராமசுரத் குமார யோகி. 81

தாயாகிப் பால்தந்து பசியைத் தீர்ப்பான்;
தந்தையாய் ஞானமொழி பேசி நிற்பான்;
வாயாத இன்பமெல்லாம் நேரக் காட்டும்
வள்ளலெனத் திகழ்கின்றான்; அன்பர் மாட்டுச்
சேயாக நிற்கின்றான், ஆங்கி லத்தில்
செப்புகின்றான்; மழலைமொழி தமிழில் பேசி
நாயோடும் அன்புசெய்து நலத்தைக் காட்டும்
நல்லவனும் ராமசுரத் குமார யோகி. 82

நாய்குரைக்கச் சிரிக்கின்றான், சாய்பா பாவாம்
நாமமதற் களித்தன்பின் நலம்செய் கின்றான்;
பாயிருக்க மேலிருந்தே, பணிவார் தங்கள்
பவமெல்லாம் போக்குகின்றான்; பரம ஞானி;
நோயிருக்க மருந்துண்டு சுகம்காண் பார்போல்
நுட்பமுறும் பொருளறிந்தே இன்பம் காண்பார்;
வாயிருக்கும் சொல்லாலே மயக்கம் போக்கும்
வள்ளலவன் ராமசுரத் குமார நாதன். 83

தோயாத இன்பமெலாம் தோயச் செய்வான்;
சூழாத காட்சியெல்லாம் சூழக் காட்டி
நோயாளி யாகாமல் என்றும் பொன்று
நுட்பமுறும் நிலைபெறவே நிற்கின் றனல்;
காயாத கனிபோலக் கனிந்த செல்வன்,
கருணையினல் வருபவரைப் புரக்கின் றனல்;
தாயாகி அப்பனய்க் குருவாய் நிற்பான்
தழைஅருணை ராமசுரத் குமார மேலோன். 84

நாய்பேசும் வார்த்தைக்குப் பொருள்தான் காண்பான்;
நலம்தன்னை ஈட்டுதற்கோர் வழியும் சொல்வான்;
பாய்தன்னில் மேலிருந்து ஞானம் காட்டிப்
பரங்கருணைத் தடங்கடலாய் நிற்கின் றனே;
சேயினைப்போல் சிரிக்கின்ற செல்வன், என்றும்
சிந்தையிலே உபசாந்தம் பெற்ற நாதன்,
தூயவனும் ராமசுரத் குமாரன் தன்பால்
துன்னுவார் எஞ்ஞான்றும் மன்னு வாரே. 85

கடலெல்லாம் நிறைந்திருந்தும் தாகம் போக்கக்
கடவதோ? சிற்றூற்றில் தண்ணீர் உண்டால்
அடல்பெரிதாம் தாகமெலாம் போகும் என்பார்;
அதுபோலச் சிறியஉரு அமைந்தா னேனும்
மிடல்பெரிய அருளாளன் ஆவான்; காலில்
விழும்பேர்க்கு நல்லுரைசொல் பெரிய ஆசான்,
திடல்பெரிய அருணைநகர் தன்னில் நிற்கும்
சிவனென்னும் ராமசுரத் குமார ஞானி. 86

குன்றெல்லாம் கோயில்கொளும் குமர னேபோல்
குழலூதி இன்பளிக்கும் கண்ண னேபோல்
நன்றுடைய சேவேறும் நாதன் போல
நாயகியாம் உமைபோல நமக்குக் காட்டி

வென்றுவிடும் பொறியெல்லாம் அடங்க என்றும்
மெய்யான உபசாந்தம் மேவு கின்றான்
நன்றருளும் ராமசுரத் குமார யோகி
நண்ணுவார்க் கின்பநலம் பண்ணு வானே. 87

சாதியெனும் பேதமிலாச் சதுரன், ஞான
சாத்திரங்கள் ஓதரிய பெரியோன், என்றும்
பூநலத்தில் மெய்ஞ்ஞானி இவனே என்னும்
பொற்புடையான், புகழெல்லாம் மேவு கின்றான்;
யாதுமற்ற பொருளாக இருக்கும் அஃதை
இன்னதெனக் காட்டுகின்ற சதுரன், என்றும்
காதலுற்ற அருணைநகர் தன்னில் மேவும்
கனவானும் ராமசுரத் குமார யோகி. 88

தலையினிலே பாகையினைத் தரிக்கின் றானல்;
தங்குகையில் விசிறியினைப் பரிக்கின் றானல்;
கலையினிலே காணாத இன்ப மெல்லாம்
காட்டுகின்ற பேராளன், ஆராய் வார்கட்
கலைதலுறும் மனமடக்கி உபசாந் தத்தை
அருள்கின்றான், அருணைநகர் தன்னில் வாழ்வான்,
நிலையிதுவென் றேகாட்டும் ஈசன், என்றும்
நேமமுடை ராமசுரத் குமார நேயன். 89

சொல்லாடாப் பெருமோன வெளியில் நின்று
சுத்தசிவ சாயுஜ்ய பதவி தந்து,
மல்லாடா வகைபொறியை அடக்கி என்றும்
மாதவத்தைச் செய்கின்ற மேலோர் வந்து
நல்லானும் இவனென்றே பணிகின் றார்கள்;
ஞானியென்றே போற்றிசெய்து வாழ்த்து கின்றார்;
எல்லாரும் காணுகின்ற கோலம் உள்ளான்
இசையருணை ராமசுரத் குமார மேலோன். 90

மண்ணாகி விண்ணாகி நீரு மாகி
மாவெளியாய்க் காற்றாகிக் கலந்து நிற்கும்
கண்ணானன், கடவுளெனக் கருது கின்றார்,
காதல்செயும் தவயோகி, அருணை தன்னில்
விண்ணாளும் புகழ்கொள்ளும் பெரியோன் அன்பர்
வேதனைகள் தீர்க்கின்ற செய்யோன், நாளும்
பண்ணாளும் படிசெய்யும் நாதன் சீலன்
பண்ணவனாம் ராமசுரத் குமார யோகி. 91

பால்குடிக்கத் தந்திடுவான், பாட்டைப் பாடின்
பரிவுடனே கேட்டிருந்து மகிழ்வான் கண்டீர்,
தால்இருக்கும் புகழெல்லாம் தானே கொண்டு
சதுரனாய் ஞானியாய்த் திகழ்கின் றானல்;
வேல்பிடித்த கையன்போல் ஞானம் காட்டி
விளங்குகின்ற பொருள்காட்டி நிற்கின் றானல்;
கால்பிடித்தோர்க் கருள்செய்யும் கருணை யுள்ளான்
கவினருணை தனில்ராம சுரத்கு மாரன். 92

பொய்யான உலகத்தில் போகம் பெற்றுப்
புன்மையாம் உடலையே நச்சி வாழ்ந்து
மெய்யேதும் அறியாமல் வாழும் அன்பீர்,
வேதாந்த மேனிலையை அடைய வேண்டின்
கையாரும் விசிறியினை உடைய பெம்மான்
கருதுகின்ற ராமசுரத் குமார மேலோன்
நையாநின் றுருக்குகின்ற நாதன் பாலே
நண்ணுமின்கள், நீர்தவத்தைப் பண்ணி னீரே. 93

சத்தாகிச் சித்தாகி இன்ப மாகிச்
சார்கின்ற பொருட்கெல்லாம் சார்வு மாகி
வித்தாகி முளையாகி மரமு மாகி
விளங்குமர மதன்மேலே கனியு மாகிச்

சொத்தாகி உரிமையாய்த் தூய ஞகிச்
சூழ்கின்ற நிலையதனைச் சொல்லும் நேயன்,
எத்தாலும் காணரிய புகழான், எங்கள்
இறைவனும் ராமசுரத் குமார மேலான். 94

பண்ணுலே பாடுகின்ற புகழான், பத்தர்
பரவியென்றும் தொழுகின்ற அடியான், சீர்த்த
கண்ணுலே குளிர்சேரப் பார்க்கின் ருனல்;
கருணையொடும் பால்தன்னை வழங்கு கின்ருன்;
நண்ணுதார் தாமும்வந்து வணங்கி மேன்மை
நண்ணுவதைச் செய்கின்ருன்; அருணை மேய
திண்ணரும் நெஞ்சுடைய செல்வன், மேலாம்
சீர்பெற்ற ராமசுரத் குமார யோகி. 95

கந்தடக்கும் யானைபோல் மலத்தை நீக்கிக்
காயமென்னும் சிறைக்குள்ளே அடங்கா வண்ணம்
சிந்தையினில் ஒன்றனையே நிறுத்தி வைக்கும்
திறமறிவான், பணிவார்தம் சிந்தை தன்னில்
அந்தமுற நின்றிடுவான், தலையில் பாகை
அணிந்திடுவான், செஞ்சொல்லான், அருணை மேவும்
சொந்தனவன், ராமசுரத் குமார யோகி
தூவருளைப் பெற்ருேர்கள் மேலோர் அம்மா! 96

(தரவு கொச்சகக் கலிப்பா)

கண்டனைய சொல்லாளன், கருணைமிகு கண்ணுளன்,
பண்டைநலம் எல்லாமும் பரித்தருள்வான், தான்மேலே
கொண்டதொரு வேடத்தைக் குறியாமல் ஞானியென
விண்டனரால் பெரியோர்கள், வேதநிறை பொருள்இதுதான்
கண்டறிமின் என்கின்ருன் ராமசுரத் குமார்யோகி. 97

**(எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)**

பாலாகித் தயிராகிப் பாலால் கொண்ட
பண்புடைய வெண்ணெயாய் இனிக்கும் அப்பன்,
சேலாரும் கண்ணிஞர் மயலைப் போக்கிச்
சீவனொடும் இறைவனையே பிணைத்த அண்ணல்,
நோயாற மருந்தருளும் தகையே போல
நோக்கிஞல் கருணையினைச் செய்கின் ருஞல்,
தாயாகும் அருணேசன் வாழு கின்ற
தனிப்பதியில் ராமசுரத் குமாரன் தானே. 98

அங்கியினைப் பூணுகின்ருன்; அன்பர் வந்தே
அலர்மாலை சூட்டிடினே அணிகின் ருஞல்;
பங்கமிலா வாழ்விதென்று பகர்கின் ருஞல்;
பரமஉப சாந்தநிலை இதுவே என்று
சங்கமதைத் தவிர்க்கின்ற அசங்கம் காட்டிச்
சாந்தமெனும் நிலையருளிச் சுகத்தை யீட்டும்
துங்கனவன், ராமசுரத் குமாரன் கண்டீர்;
தூயஅண்ணு மலைதன்னில் இருக்கின் ருனே. 99

குழந்தைமிக அழுதிட்டால் பாலை ஈயும்
கொள்கையுடை அன்னைபோல் பாலை ஈவான்;
தொழுந்தகையன், தலையினிலே பாகை சேர்ப்பான்;
துன்பமெலாம் நீக்குகின்ற இன்பச் செல்வன்;
அழுந்தகையோர் தமக்கவலம் நீங்கு மாறே
அன்புடைய செஞ்சொல்லே விரிப்பான்; என்றும்
கொழுந்துபடும் அருளுள்ளான், அருணை மேவும்
கோனுகும் ராமசுரத் குமார நாதன். 100

மணியாகி மணிக்குள்ளே ஒளியு மாகி
மலராகி மலர்க்குள்ளே மணமு மாகித்
திணிவாரும் கற்குள்ளே வைர மாகிச்
சிறந்தார்தம் நெஞ்சத்தே பொன்னு மாகி

அணியாரும் அவர்க்கேநல் உபதே சத்தை
அளிக்கின்ருன், அருணைநகர் வாழும் யோகி
திணியான மனச்செல்வன் என்றே சொல்லும்
சீகரனும் ராமசுரத் குமார ஞானி. 101

கடலெல்லாம் நீரிருந்தும் குடிக்கப் போமோ?
கனவினிலே சுகமிருந்தும் மெய்யா குங்கொல்?
உடலினிலே இன்பமென்றே இருப்பார் தங்கள்
உயர்வாழ்வு வீணுகிப் போகும் அந்தோ!
மடல்பெரிய மலரெல்லாம் மணத்தைக் காட்டும்;
வையத்தார் அவையெடுத்துப் போற்று கின்ருர்;
திடமுடைய மெய்ஞ்ஞானம் சேரு மென்றே
செப்புவான் ராமசுரத் குமார நாதன். 102

கோயிலுக்குள் இருக்கின்ற சாமி தன்னைக்
கும்பிட்டால் உடன்சுகத்தைத் தருவான் கொல்லோ?
நோயிருக்க உடம்புக்குச் சுகமுண் டாமோ?
நுட்பமாம் பொருளறியா தஞ்ஞா னத்தின்
வாயிருக்கும் மனிதர்கட்கு நன்மை யுண்டோ?
வாய்மையிதைச் செப்புகின்ருன், அருணை தன்னில்
பாயிருக்கும் அன்புடைய ஞான யோகி,
பரமார்த்த ராமசுரத் குமார நாதன். 103

பாம்படக்கும் மந்திரத்தைக் கற்று ளார்கள்;
பனியடக்கும் போர்வையினைப் போர்த்து ளார்கள்;
தீம்படக்கும் வகையின்றி மனத்தி னுள்ளே
சிலுகிடும்அஞ் ஞானத்தைப் போக்க கில்லார்
ஆம்பெரியர் ஆவாரோ? ஞானத் தாலே
அருள்பெற்ருர் பெரியர்என அறைகின் ருனுல்;
ஏமத்தால் மிகப்பெரியோன், அருணை மேவும்
இயல்புடைய ராமசுரத் குமார நாதன். 104

கையிழுத்துப் பாலினையே தருவான், என்றும்
காலபிடிக்க நலந்தனையே அருள்வான், ஞான
மெய்யிருக்கப் பொய்யாகி விழலுக் காக
வீணாக நீரிரைக்கும் மாந்தர் காள், நீர்
செய்வரிய தவமெல்லாம் செய்ய வேண்டாம்;
சீராளன் ராமசுரத் குமாரன் பாலே
மெய்யுடனே வந்திறைஞ்சி நிற்பீர், அங்கே
வேட்கையெல்லாம் நிறைந்திருக்கக் காண்பீர் அம்மா! 105

பண்புடையன், நண்புடையன், பாரில் மேவும்
பந்தமெலாம் போக்குகின்ற பரவ சத்தான்;
கண்புடையே கருணையினை வீசும் ஈசன்;
கைகளிலே விசிறியினை வீசும் ஐயன்;
பண்பரவும் புகழாலே மனமு வக்கும்
பாங்குடையான்; தேங்கியநல் இன்பம் கொண்டான்;
தண்படைத்த அருணைநகர் தன்னில் மேவும்
சாந்தனும் ராமசுரத் குமார ஞானி. 106

கண்ணிருந்தும் காணாத கண்என் கண்ணே?
காதிருந்தும் கேளாத செவியென் னாகும்?
மண்ணிலுயர் வாழ்க்கைபெற்றும் கடவுள் தன்னை
மனத்திருத்தி வாழானேல் பயனென் றுண்டோ?
திண்ணென்ற அவனருளைப் பெறுவ தற்கே
செப்புகின்றான் நல்லநெறி, அருணை தன்னில்
நண்ணுகின்ற உயர்ஞானி யாகும் ஐயன்
நலமுடைய ராமசுரத் குமார நாதன். 107

உள்ளத்தே நினைக்கின்ற எண்ண மெல்லாம்
உண்மையாய்ப் போகுமோ? உள்ளத் தின்கண்
கள்ளத்தோ டேஇருந்தால் கவலை போமோ?
கருணையினால் தன்சிரிப்பால் ஞானம் காட்டி

மெள்ளத்தான் நலமருளும் பெரிய யோகி,
மேவுகின்றான் அருணைநகர் தன்னில்; அங்கே
நள்ளுற்றே இன்பநலம் பெறுவீர் என்றே
நவில்கின்றேன், ஈதுண்மை, திண்ணந் தானே. 108

பேய்பிடித்த வாறதுபோல் மாயை யென்னும்
பெரியதுயர் வந்தடைந்தால் போக்கல் உண்டோ?
நோய்பிடித்தால் மருந்துண்டு தீர்வ தற்கே
நுட்பமெது வென்றுநீர் யோசிக் கின்றீர்;
தாய்பிடித்த கருணையினான், அருணை மேவும்
சாமியெங்கள் ராமசுரத் குமாரன் பாலே
மேயபொற்பு நீர்கொண்டால் உண்மை காண்பீர்;
விரைந்துவம்மின் விரைந்துவம்மின் இங்கே அம்மா!

காணாத காட்சியெலாம் காண லாகும்;
கருத்தினிலே கருத்தனையே பேண லாகும்;
மாணாத மாட்சியெல்லாம் பெறுத லாகும்;
வாழ்வினிலே பெருவாழ்வில் வயங்க லாகும்;
கோணாத படிநெஞ்சம் வைத்தி ருந்து
கும்பிட்டால் நம்பிவந்தால் நன்மை ஈவான்;
ஆணாக பெண்ணாக யாவர் மாட்டும்
அன்புசெயும் ராமசுரத் குமார மேலோன். 110

சொல்லுக்குள் அடங்காத கீர்த்தி யாளன்,
சொல்லாத மோனநிலை நிற்கின் றான்காண்,
அல்லுக்குள் பகலாகிச் சுடரும் நேயன்,
அறியாமை தனைப்போக்கும் சிறந்த தூயன்,
மல்லுக்குள் அண்டாத திருத்தோள் பெற்று
மயலினையே அறுப்பதற்கு வழியைக் காணீர்,
கல்லுக்குள் நீர்புகுந்த வாறே போல
கருணைசெய்வான் ராமசுரத் குமார ஞானி. 111

சீலமுடைப் பெரியோனும் இவன்பால் சென்றே
சிந்தைமிக மகிழ்ந்துருகி நிற்பீர் ஆயின்,
காலனெனும் பகைதன்னை யோட்டு தற்கே
கதிகாட்டி நலம்செய்வான் கண்டீர்; என்றும்
பாலனைப்போல் சிரிக்கின்ருன்; பாலை ஈவான்;
பந்தமெலாம் போக்குதற்கே பகரு கின்ருன்;
ஆலமெலாம் அமுதாக்கும் ஐயன், எங்கள்
அன்பனுயர் ராமசுரத் குமாரன் தானே. 112

கசடழித்து மெய்ஞ்ஞானக் கோலை ஓச்சிக்
காவியுடை அணியாமல் வெண்மை பூண்டு
திசைதிருப்பும் மனந்தன்னை யாட்கொள் கின்ற
தெய்வம்போல் அருள்தருவான், அருணை மேவும்
வசைகளற்ற பெரும்புகழான் ஞான யோகி,
மாநாமம் ராமசுரத் குமாரன் என்பான்,
அசைதலற்ற சாந்தநிலை மேவ வேண்டின்
அவனடியே தஞ்சமென அண்மின் நீரே! 113

சித்தனிவன் ஆனலும் சித்தி யெல்லாம்
செய்வதுதான் வீண்என்றே செப்பு கின்ருன்;
சித்தமதை யொடுக்குகின்ற சித்தி யொன்றே
சித்தியாம் எனச்சொல்லி நகைக்கின் ருனல்;
சித்தனிவன் தனைப்போல ஞானி யெங்கே
சிறியேங்கள் கண்டிடலாம்? அருணை தன்னில்
வித்தன்என அருள்தன்னை ஈட்டு கின்ற
மேலோனும் ராமசுரத் குமார ஞானி. 114

கடுகதனைப் பெரிதாக்கி மலையைப் போலக்
காட்டுகின்ற சித்தெல்லாம் என்ன வாகும்?
படுகின்ற துயர்போமோ? காலன் வந்தால்
பாசத்தால் கட்டும்போ தவற்ருல் என்னும்?

அடைவுடைய ஞானத்தின் சக்தி தன்னால்
அகலுமாம் மலமெல்லாம் என்பான் எங்கள்
சடைவகற்றும் பெருஞானி அருணை மேவும்
தலைவனும் ராமசுரத் குமார நாதன். 115

(30–11–1980)

**(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)**

அன்பே உருவ மாய்உடையான்,
ஆசை மூன்றை வெறுத்திருப்பான்,
முன்பே யாரும் மலமெல்லாம்
முழுதும் போக நினைத்திடுவான்;
இன்பே செய்யும் எழிலுடையான்;
எளியார் தம்பால் கருணையுளான்,
தன்பே ரோங்கும் அருணைநகர்
தங்கும் ராம சுரத்குமார். 116

ஆசை வலையை நீக்கியவன்,
அகங்கா ரத்தைப் போக்கியவன்,
தேசு வீசும் திருவுருவான்,
செம்மை யான பண்புடையான்,
மாசில் லாத உளமுடையான்,
வந்தார் தம்மை வாழ்விக்கப்
பேசு கின்றான், அருணையினில்
பிறங்கும் ராம சுரத்குமார். 117

இக்கே போல இனிக்கின்ற
எழிலார் மொழியைச் சொல்கின்றான்;
தக்கார் வந்து பணிகின்றார்;
சாந்த நிலையை அடைகின்றார்;

எக்கா லத்தும் மாறாத
  இன்பம் கொள்வான், அருணையினில்
மெய்க்கார் என்ன அருள்பொழியும்
  வேதன் ராம சுரத்குமார். 118

ஈதல் நன்றும் எனச்சொல்வான்;
  ஈஷணைகள் போக்கிடுவான்;
சாதல் இல்லா நெறிகாட்டிச்
  சாந்த மாரும் மோனத்தில்
வீழ்தல் இன்றி நின்றிருப்பான்;
  வேதப் பொருளில் மிகமகிழ்வான்;
சீதப் பொழில்சேர் திருவருணை
  சிறக்கும் ராம சுரத்குமார். 119

உத்தி யெல்லாம் கடந்துநின்ற
  ஒருவன் தன்னைக் கண்டுள்ளான்;
சித்தி யெல்லாம் பெற்றிருந்தும்
  சிறிதும் காட்டா திருக்கின்றான்;
பத்தி செய்வார் தம்பாலே
  பரிவோ டன்பு புரிந்திடுவான்;
எத்தி சைக்கும் புகழ்பேசும்
  எம்மான் ராம சுரத்குமார். 120

ஊக்கம் மிகவே தன்பால்வந்
  துறுவார் தம்மை நயந்தினிது
தேக்கும் சொல்லால் நலங்காணச்
  செய்வான்; என்றும் பொய்யாதான்;
வாக்கும் மனமும் ஒன்றாகி
  வளரும் ஞானி, அருணையினில்
ஆக்கும் புகழான், உயர்ஞான
  அருளான் ராம சுரத்குமார். 121

எக்கா லத்தும் அழியாத
இன்பம் இதுவே எனச்சொல்வான்;
அக்கா லன்தான் வருங்காலே
அடர்த்துப் பேசும் நெறியறிவான்;
சிக்கா ராத ஞானமெனும்
சிகரம் தன்னில் இருக்கின்றான்;
மிக்கோர் போற்றும் அருணைநகர்
விளங்கும் ராம சுரத்குமார். 122

ஏக்கம் இல்லா நெஞ்சுடையான்;
எண்ணம் எல்லாம் நிறைவுசெய்வான்;
தாக்கும் மாயைப் பெரும்பாம்பைத்
தலையில் அடித்துக் கொன்றிடுவான்;
ஆக்கம் இதுவே என்றிடுவான்;
அறத்தை யென்றும் சொல்கின்றான்;
நீக்க மலத்தைச் செய்கின்ற
நிமலன் ராம சுரத்குமார். 123

ஐயன், செய்யன், பொய்யில்லா
அருமை நெறியைக் காட்டிடுவான்;
தெய்வம் போல இருக்கின்றான்;
சீரார் பாகை தரிக்கின்றான்;
உய்வ தற்கே வழிசொல்வான்;
ஓங்கா ரத்தின் பொருளறிவான்;
நைவ கற்றும் திருவருணை
நல்லான் ராம சுரத்குமார். 124

ஒன்று நிற்கும் பொருள்தன்னை
உள்ளத் தடைத்தே மகிழ்ந்திடுவான்;
குன்றாப் புகழான், கோதில்லான்,
குணத்தில் குன்று போல்நிற்பான்;

வென்றூர்ந் தைந்து பொறிகளையும்
வீக்கும் பெருமான், அருணையினில்
நின்றூன், ராம சுரத்குமார்
நிமல னுகும் பெரியவனே. 125

ஓங்கா ரத்தின் உட்பொருளை
உணரச் சொல்வான், எந்நாளும்
பாங்கார் வந்தார், வருங்காலைப்
பன்னிப் பன்னி நலம்சொல்வான்;
தீங்கா ராத பேரின்பச்
சிறப்பு நெறியைக் காட்டிடுவான்;
யாங்கா ணச்சீர் அருணைநகர்
இருக்கும் ராம சுரத்குமார். 126

ஔவை சொன்ன வாக்கதிலே
அறம்செய் என்றூள்; அதனையே
செவ்வை யாகச் சொல்கின்றூன்;
தினமும் குழந்தை யெனச்சிரிப்பான்;
கவ்வும் ஞான மலையினிலே
கதிக்கும் காட்சி கொண்டபிரான்;
தெவ்வும் புகழ்சேர் அருணைநகர்த்
திருவான் ராம சுரத்குமார். 127

கண்டு போலப் பேசிடுவான்;
கனிந்து பாலை ஈந்திடுவான்;
அண்டு வார்கள் தந்துயரை
ஆற்றி நிற்பான்; எஞ்ஞான்றும்
கொண்ட கோலம் பித்தன்போல்
கூடிக் காட்டிச் சிறக்கின்றூன்;
மண்டும் புகழ்சேர் அருணைநகர்
வந்தான் ராம சுரத்குமார். 128

காண வொண்ணுக் காட்சியெல்லாம்
கண்டு மகிழ்ந்தே உவந்திடுவான்;
பூண வொண்ணுப் பூணெல்லாம்
பூணு கின்ருன்; திருக்கரத்தில்
ஏணுர் விசிறி எடுக்கின்ருன்;
எல்லார் வினையும் கெடுக்கின்ருன்;
சேணுர் புகழ்சேர் திருவருணை
சிறக்கும் ராம சுரத்குமார். 129

கிட்டி வந்தார் தமக்கெல்லாம்
கேண்மை பேசி நலம்செய்வான்;
அட்டு நின்ற மாயைதனை
அடியோ டடக்கும் கருணையினுன்;
விட்ட பற்ருன்; ஓங்கார
வெளியின் பொருளை நனியறிவான்;
சிட்டர் சேரும் அருணையினில்
சிறப்பான் ராம சுரத்குமார். 130

கீதம் கேட்டே மகிழ்ந்திடுவான்;
கிளரும் ஞானம் மிகப்பொலிவான்;
சீதம் தவழும் திருமுகத்தான்;
சிரிப்பே திகழும் திருவாயான்;
காதம் மணக்கும் பெரும்புகழான்;
கழுத்தில் அக்க மாலையினுன்;
நாதம் மலரும் திருவருணை
நல்லான் ராம சுரத்குமார். 131

கெடுதி வாரா தேகாக்கும்
கேண்மை சொல்வான்; காலன்வரின்
அடுமத் திறமும் தானறிவான்;
அருளே கண்ணில் கொழிக்கின்ருன்;

சுடும்அத் தீயாம் மாயையினைச்
சுட்டுப் பொசுக்கி நிற்கின்றான்;
கடுமை போக்கும் அருணையினில்
கலப்பான் ராம சுரத்குமார். 132

கேளென் றன்பர் வந்தக்கால்
கிழமை பேசி நலம்செய்வான்;
வேள்என் றிருக்கும் பேய்தன்னை
வீழ மாய்த்தே அழித்துவிட்டான்;
தாள்என் கமலம் பணிகின்ற
சற்ச னர்க்கு நல்லனவன்;
மூளும் புகழார் அருணைநகர்
முத்தன் ராம சுரத்குமார். 133

குற்ற மில்லாக் குணமுடையான்,
கோதம் காணு நெஞ்சுடையான்,
பெற்ற வள்போல் தயையுடையான்,
பேணிப் பாலை அருத்திடுவான்,
கற்ற வர்தாம் காணரிய
கதியைக் காட்டும் பெரியனவன்,
சுற்றும் புகழ்சேர் அருணைநகர்ச்
சுத்தன் ராம சுரத்குமார் 134

கூடா தாரைக் கூட்டிவைப்பான்;
கோளில் நெறியைக் காட்டிவைப்பான்;
வீடா கியநல் இன்பத்தை
மெய்யாய்ச் சொல்லி விரித்துரைப்பான்;
காடே கிச்செய் தவமில்லான்;
காவி உடையை யணியகில்லான்
ஓடே கையில் உடையான்காண்;
ஒருவன் ராம சுரத்குமார். 135

கொல்லா மையாம் விரதத்தான்;
  கோளை நீக்கும் நெறியுடையான்;
வெல்லா நிற்கும் ஐம்பொறியான்;
  வீடு காட்டும் திருவுடையான்;
சொல்லால் இனிக்கப் பேசிவந்தார்
  துயரம் நீக்கும் தயையுடையான்;
எல்லார் மலையாம் திருவருணை
  இருந்தான் ராம சுரத்குமார். 136

கோணல் நெறியே இல்லாத
  குமரன்; கோலம் பித்தன்போல்
மாணக் காட்டி மயக்கிடுவான்;
  வந்தார் தம்மை உபசரித்தே
ஊணும் பாலும் அருத்திடுவான்;
  உள்ளம் தூயன், எந்நாளும்
வீண்என் கலகம் தவிர்த்திடுவான்,
  வியன்சேர் ராம சுரத்குமார். 137

கவ்வி வந்தே நமையடக்கும்
  கலியின் மாயை தனைப்போக்கிச்
செவ்வி சேர உளத்தகத்தே
  சீரார் சாந்தம் விதைத்திடுவான்;
பவ்வ மாகும் பிறவியினைப்
  பாறச் சொல்லி நயந்திடுவான்;
செவ்வி யோர்கள் சேரருணை
  சிறக்கும் ராம சுரத்குமார். 138

சங்கம் சேர்த்தே நலம்செய்வான்;
  சங்கம் இல்லா வகைசெய்வான்;
தங்கம் போலும் வடிவுடையான்;
  தாடி யுடையான், தலைமேலே

துங்கப் பாகை தரிக்கின்ருன்;
சொல்லில் இனிமை பரிக்கின்ருன்;
புங்க மாகும் திருவருளைப்
பூமன் ராம சுரத்குமார். 139

சாதி இல்லை, சமயமெனும்
சழக்கும் இல்லை; சமரசத்தின்
போதம் அங்கே மிகவுண்டு;
பொற்பி ேைடும் இன்பருள்வான்;
மாதர் மயலைச் சற்றறியான்;
வயங்கும் கருணைத் திருவிழியான்;
சேதம் இல்லா அருணைநகர்
சிறக்கும் ராம சுரத்குமார். 140

ஜாதம் அறுக்கும் அருள்தருவான்;
சங்கம் அறுக்கும் நிலைசொல்வான்;
வேதப் பொருளின் மேன்மையெலாம்
விரித்தே உரைக்கும் பெரியனவன்;
கோதம் காணுத் திருவுளத்தான்;
குளிர்ந்த சொல்லான்; எஞ்ஞான்றும்
நாதம் ஒலிக்கும் அருணைநகர்
நல்லான் ராம சுரத்குமார். 141

சித்தா யிருக்கும் பொருளினையே
சிந்தை வைத்து மகிழ்ந்திடுவான்;
எத்தா லும்தான் மயங்காதான்;
ஏற்றம் பொருந்த வீற்றிருப்பான்;
செத்தால் பின்னை என்செய்வேம்?
சிந்திப் பீர்கள் எனச்சொல்வான்;
ஒத்தா ரும்சீர் திருவருணை
உள்ளான் ராம சுரத்குமார். 142

சிறக்கப் பேசும் திருவுடையான்,
செந்தில் நாதன் எனச்சொல்லி
உறக்கால் படிந்தே வருவார்கள்
உற்ற துன்பம் போக்கிடுவான்;
பெறத்தான் அரிய பேரின்பப்
பேற்றை யடையும் நெறிசொல்வான்;
சிறப்பார் கின்ற அருணைநகர்
சேர்ந்தான் ராம சுரத்குமார். 143

சீதம் பொலியும் திருமுகத்தான்;
செம்மை பொலியும் திருவுளத்தான்;
காதம் மணக்கும் பெரும்புகழான்;
கருணை மணக்கும் திருவிழியான்;
நாதம் மணக்கும் ராமனெனும்
நல்ல பேரைச் சொல்லிடுவான்;
ஓதும் புகழ்சேர் அருணையினில்
உள்ளான் ராம சுரத்குமார். 144

செம்மை மேவும் உள்ளத்தான்,
சிறுமை யில்லா நெஞ்சத்தான்,
வெம்மை யெல்லாம் தீர்த்திடுவான்;
வேதம் சொன்ன பொருள்தன்னை
நம்மை நாடி வரச்சொல்வான்;
நலமே சொல்லி நயந்திருப்பான்;
சும்மை சேரும் திருவருணை
சூழ்ந்தான் ராம சுரத்குமார். 145

சேவில் ஏறும் ஈசனவன்;
திருமால் தானும் மற்றவனே;
ஓவில் லாத கருணையுடை
ஒருவன் முருகன் அவன்தானே;

சாவை நீக்கும் தந்திரத்தைத்
தானே யறிவான், அருணையினில்
தேவொன் றியசீர் பரித்திருக்கும்
செம்மல் ராம சுரத்குமார். 146

சையென் றுலகம் இகழாமல்
சாந்த நிலையில் நிலைத்திருக்க
மையல் இல்லா வழியறிய
மனந்தான் ஒன்ற வகைசொல்வான்;
தையல் பாகன் சிவனவனே
தானும் வந்தா னெனஇருக்கும்
ஐயன் உயர்ந்த திருவருணை
அமர்ந்தான் ராம சுரத்குமார். 147

சொல்லும் சொல்லில் பொருள்தேடும்
தூயன், என்றும் தொண்டர்க்கு
நல்லன், இன்சொல் சொல்கின்ற
நயமார் வாயான், தூய்மை உளான்;
வெல்லும் பொறியை மடக்கிநின்ற
வீரன், சூரன், அருணையினில்
எல்லும் இரவும் இருக்கின்றான்;
எங்கள் ராம சுரத்குமார். 148

சோகம் அறியாத் திருவுளத்தான்;
சூட்சு மத்தை நனியுணர்ந்தான்;
ஏகம் என்னும் பரம்பொருளை
இதயத் துள்ளே அடக்கிநின்றான்;
பாகம் அறிந்தே அன்பர்க்குப்
பரிவு தாங்கி நலம்செய்வான்;
தாகம் தீர்க்கும் திருவருணைச்
சதுரன் ராம சுரத்குமார் 149

சௌரி யத்தால் பயனுண்டோ?
சார்செல் வத்தால் நலமுண்டோ?
வைரி யத்தால் பகைதானே
வளரும் என்பான், அருணையினில்
பயிரி யற்றும் மழைபோலப்
பன்னும் அருளான், எஞ்ஞான்றும்
தைரி யத்தை நீங்காத
சாந்தன் ராம சுரத்குமார். 150

ஞமலி போலத் திரிந்துழன்று
ஞாலம் தன்னில் உணவொன்றே
அமையும் என்றே இருக்கின்ற
அந்த நிலையை விட்டெறிந்தே
கமையும் சாந்த நற்குணமும்
காட்டு கின்ற பேராளன்
அமையும் புகழ்சேர் அருணையினில்
அமர்வான் ராம சுரத்குமார். 151

ஞான உருவாய் இலகிடுவான்;
ஞானம் பேசி நலம்செய்வான்;
மோனத் தவத்தான், முனிவர்பிரான்;
மூன்று மூர்த்தி ஒன்றாகி
ஈனம் தங்கா வகைவந்தான்
என்ன அன்பர் நினைக்கின்றார்;
ஆனந் தம்சேர் திருவருணை
அமர்ந்தான் ராம சுரத்குமார். 152

தங்கம் போலச் சொல்சொல்வான்;
தாபம் எல்லாம் நீக்கிடுவான்;
அங்கி புனைந்தே யிருக்கின்றான்;
அரிய தாடி வளர்க்கின்றான்;

சங்கம் எல்லாம் தன்புகழைச்
சாற்றக் கேட்டு மகிழ்கின்றான்;
புங்கம் சேரும் திருவருளைப்
புரியான் ராம சுரத்குமார். 153

தாபம் மூன்றும் தீர்த்தபிரான்;
தயையே புரியும் விழியுடையான்;
பாபம் போக மொழிசொல்வான்;
பணிவார் தங்கட் கிதமருள்வான்;
கூபத் துள்ளே இருக்கின்ற
ஆமை போலக் குமையாதே
சாபம் தீர்க்க வருகென்பான்
சதுரன் ராம சுரத்குமார். 154

தின்னும் ஒன்றே குறியாகத்
தினமும் வாழ்வைப் போக்குகின்றீர்,
மின்னும் மினல்போல் வாழ்வகன்று
வீழின் அந்நாள் என்செய்வீர்?
இன்னல் போக இறையருளை
எய்த நின்று முயற்சிசெய்வீர்
என்னும் பெருமான் அருணைநகர்
இருக்கும் ராம சுரத்குமார். 155

தீமை போக மொழிசொல்வான்;
தேக்கும் சாந்த நெறிகாட்டி
ஆமை போல அஞ்சுபொறி
அடக்கு கின்ற விதம்சொல்வான்;
ஏமங் கொள்ளும் வீட்டின்பம்
எய்தும் நெறியே இதுவென்பான்;
ஆம்அன் பர்சேர் அருணைநகர்
அடைந்த ராம சுரத்குமார். 156

தெய்வம் போல நிற்கின்றான்;
  தேவர் அறியா இன்பத்தை
எய்தி நிற்கும் பேராளன்;
  எம்மான் ராம சுரத்குமார்
வைகின் றார்கள் தங்களையும்
  வாழ்த்தி ஆசி புரிகின்றான்;
மைதீர் உள்ளம் கொண்டிருப்பான்;
  வாழ்த்தி வாழ்த்தி வணங்குவமே. 157

சேய்போல் நின்று சிரிக்கின்றான்;
  சித்தர் போல இருக்கின்றான்;
வாய்பே சாத மௌனியல்லன்;
  வந்தார் தமக்கே மொழிசொல்வான்;
தாய்போல் நின்று பாலளிக்கும்
  தயையே உள்ளான், தந்தையன்னான்;
ஆய்சீர் கொள்ளும் அருணைநகர்
  அன்பன் ராம சுரத்குமார். 158

தேங்கும் புகழான்; சித்துருவைத்
  தெரிந்து கொண்ட திருவுளத்தான்;
பாங்கிற் போற்றும் அன்பர்கள்
  பணிந்தால் நன்மை புரிந்தருள்வான்;
ஓங்கா ரத்தின் உட்பொருளை
  உள்ளத் துள்ளே அடக்கிவைத்தான்;
தீங்கா ராத அருணைநகர்ச்
  செம்மல் ராம சுரத்குமார். 159

துங்கன், என்றும் அழுக்குடையைத்
  தோற்ற அணிந்தும் தூயனவன்,
பங்கம் இல்லா ஞானியவன்,
  பார்த்தோர் தமக்குக் குழந்தைபோல்

எங்கும் காண இருக்கின்றான்;
 இனிய சிரிப்பைச் சிரிக்கின்றான்;
மங்கும் வாழ்வைப் போக்குகின்ற
 மன்னன் ராம சுரத்குமார். 160

தூங்கும் வாழ்வை நனிபோக்கித்
 துங்க மாரும் பெருவாழ்வில்
தேங்கும் படியே நின்றிருப்பீர்,
 சிவன்தாள் என்றும் நினைந்திருப்பீர்,
பாங்கிலே தெனவே உளம்கொள்வீர்,
 பாவம் நீக்கீர், எனச்சொல்வான்
தேங்கும் புகழ்சேர் அருணைநகர்ச்
 செல்வன் ராம சுரத்குமார். 161

கால மெல்லாம் போக்கிவிட்டுக்
 காலன் வந்தால் என்செய்வீர்?
ஞாலம் புகழும் புகழிருந்தும்
 நன்மை வருமோ? பலம்என்னும்?
கோலம் காட்டும் காலன்தான்
 குறுகா மல்தான் போவானோ?
சாலும் சிவன்தாள் நினைமினென்று
 சாற்று வான்ராம் சுரத்குமார். 162

வெற்றி வாகை புனைந்திடுவான்;
 வேத மொழியை நயந்திடுவான்;
கற்றி லாத கல்வியுளான்;
 கருணை மிகவும் தானுடையான்;
நற்ற வத்தோர் பணிகின்ற
 நல்லான், சொல்லில் இனிமையுளான்;
பெற்ற பேறாய் இவன்அருளைப்
 பெறுவார் என்றும் நல்லவரே. 163

அண்ணா மலையில் பிரான்வாழி!
அவன்பா கத்தில் தாய்வாழி!
தெண்ணார் நெஞ்ச அன்பரெலாம்
சிறந்து வாழி! சங்கத்தில்
நண்ணா நின்று தவம்புரியும்
நல்லோர் வாழி! ஞானியெனும்
கண்ணார் ராம சுரத்குமார்
கருணை வாழி வாழியரோ! 164

(1–12–1980)

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

வேதம் நாடிய பரம்பொருள் என்றுணர்
வித்தகப் பொருள்தன்னை
போதம் நாடிய நெஞ்சில் நிறுத்தியே
புதுப்புது உணர்ச்சியினால்
ஏதம் நீக்கிய சாந்தமாம் நிலத்தினில்
இருந்திடும் எம்பெருமான்,
நாதன், நயம்பெறும் குரலினன் ராம்சுரத்
குமார்எனும் நல்லோனே. 165

செல்வம் பெற்றவர் இன்பத்தைக் கண்டிலர்
சேர்தரும் கல்வியினில்
நல்கும் ஞான வளமுடை யார்நெஞ்சில்
நாட்டும் அமைதியில்லார்;
பல்கும் கலைகளில் வல்லவர் இடர்ப்பட்டுப்
பாரினில் திரிவார்கள்;
நல்கும் நல்லருள் செல்வமாய் நயப்பவன்
ஞானிராம் சுரத்குமாரே. 166

காத லால்உளம் கசிந்துகண் ணீர்மிகக்
 காலவே துதிசெய்து
ஆர வாரமில் லாதமெய் யன்புசெய்
 அடியர்க்கு நல்லவனும்;
சார மாகிய வேதமெய்ப் பொருள்இது
 சற்றுநீர் அறிமின்கள்
ஏத மின்றுமக் கென்பவன் ராம்சுரத் குமார்எனும்
 இயற் பேரோன். 167

பண்டை யாம்படி நான்மறை உறைபொருள்,
 பாசத்தை நீக்குபொருள்,
தண்டை யோவிடுங் காலுடன் சிலம்புடன்
 சண்முக நாதனென
அண்டி யேஅன்பர் தமக்கருள் புரிபொருள்
 அவனருள் பெறுகின்றன்
உண்டி யேதரும் ராம்சுரத் குமார்எனும்
 ஒருவனை அணுகுமினே. 168

பொன்னி னுற்பெறு பயன்என்ன? உடலத்தின்
 பூரிப்பால் பயன்என்னை?
மன்னர் தாம்பெறும் போகத்தோ டியைந்தவர்
 வாழ்வினில் நிலைத்தாரோ?
முன்ன தாகிய காலன்தான் வரின்அன்று
 முயற்சிதான் வீணுகும்,
என்ன வேசொல்வான் ராம்சுரத் குமார்எனும்
 இயற்பெயர் மாமுனியே. 169

ஆண்ட வன்திருப் பெயர்தனை அனுதினம்
 அறைமின்கள்; அவற்றின்கண்
நீண்ட வன்திரு உருவினை நினையுங்கள்,
 நியமத்தோ டெஞ்ஞான்றும்

தூண்டு வார்இலாச் சுடர்விளக் காகிய
சோதியை மறவாமல்
வேண்டு மின்எனச் சொல்பவன் ராம்சுரத்
குமார்எனும் மேலோனே. 170

(வேறு)

ஓங்காரத் தனிப்பொருளாய் இருக்கின்ற பரப்பிரமம்
ஒன்று தானே?
பாங்கார அன்பர்தாம் பலவடிவாய்க் கண்டுநிதம்
பத்தி செய்தார்;
தீங்காரா வகையினிலே அவனடியை உள்ளத்தே
சிந்தித் தேத்தி
ஏங்காமல் இருப்பீர்கள் என்பான்ராம் சுரத்குமார்
என்னும் யோகி. 171

சாந்தமுறும் மொழியுடையோன், தலைப்பாகை தனைஅணி
சார்ந்தார்க் கெல்லாம் [வோன்
ஈந்தருள்வான் தீம்பாலை; சாய்பாபா என்னும்நாய்
இருக்கும் அங்கே;
வேந்தருக்குள் வேந்தர்களும் காணாத உபசாந்த
மேன்மை கொள்வான்;
தீந்தமிழின் சுவைபோல்வான் ராம்சுரத் குமார்என்னும்
திருப்பேர் யோகி. 172

வேதத்தைப் படிப்பார்கள்; அதன்பொருளை உணர்கின்றார்
மிகவும் சொற்பம்;
போதத்தை உணர்கின்ற குருநாதன் தன்னிடத்தே
புக்கு நின்று
நீதத்தோ டவன்சொன்ன வழிநடக்கும் பெரியோரே
நிறைவு கொள்வார்;
பேதத்தை அகல்வார்கள், எனச்சொல்வான் ராமசுரத்
குமாரப் பெம்மான். 173

பாலினிலே சுவைபோல எள்ளினிலே எண்ணெய்போல்
பாரில் என்றும்
சாலவுறும் பிரமத்தை யார்அறிவார்? உண்முகத்தில்
சானம் செய்தே
ஏலவரும் திருவருளால் அவன்உருவைப் பார்க்கின்ற
இயல்பு வேண்டும்;
கோலமறிந் தேசெய்க என்கின்றான் ராமசுரத்
குமார யோகி. 174

கண்ணாலே காண்பவைகள் யாவும்மிகப் பொய்யாகும்;
காதி னாலே
பண்ணாரக் கேட்கின்ற யாவையுமே பொய்யாகும்;
பாரில் உள்ள
எண்ஆரும் பொருள்எல்லாம் பொய்யாகும்; ஒரு
மெய்யென் றெண்ணித் [பொருளே
திண்ணார நினைமின்கள் எனச்சொல்வான் ராமசுரத்
குமாரச் செம்மல். 175

கல்லான நெஞ்சமெலாம் கரைந்துருக்கும் வகையினிலே
கனிந்த சொற்கள்
புல்லாறு மொழிந்திடுவான்; பால்தந்தே பரிந்திடுவான்;
பரிவில் யார்க்கும்
நல்ஆய்பால் குழந்தைபோல் இருக்கின்றான், மிகச்சிரித்தே
நயம்செய் கின்றான்;
அல்லாருங் களத்தினனும் இவனென்பார் அடியார்கள்
அருணை வந்தே. 176

கான்த்தை மிகப்பாடின் அதைக்கேட்டே மெய்குலுங்கக்
களித்தான்; என்றும்
வானத்தின் உயர்குணத்தான்; இன்சொல்லால் நமையீர்ப்
மாட்சி சான்ற [பான்;

ஞானத்தால் நிறைவேற்றும் நல்லருளான் ராமசுரத்
குமார ஞானி;
ஈனத்தைச் சேராமல் அவனடியே சரணென்றே
இருப்பார் மேலோர். 177

புண்பட்ட நெஞ்சத்தார் வருவார்கள்; தம்குறையைப்
புகன்று நிற்பார்;
பண்பட்ட அவன்சொல்லால் மிகவேது கொடுத்தாற்
பயன்பெற் றுள்ளார்; [போல்
எண்பட்ட புகழுடையான், ஞானம்நின்ற இதயத்தான்,
இந்தப் பாரில்
பண்பட்ட மொழியுடையான் ராமசுரத் குமார்என்னும்
பரம யோகி. 178

இசையாகி இசைக்குள்ளே நிரம்புகின்ற இன்பமாய்
இருக்கும் ஐயன்
பசையாளா நெஞ்சகத்தே நிறைசுடராய் ஒளிர்ந்தருளும்
பரமன் தன்னை
நசைமேவப் போற்றுமின்கள்; அவனடியே
துணைஎன்ன நாடி நின்றால்
இசைவாகும் இன்பமென்றே இசைத்திடுவான் ராமசுரத்
குமார ஏந்தல். 179

பற்றற்ற பின்இறைவன் தனைப்பற்றிக் கொள்ளலாம்
பாங்கின் என்று
முற்றத்தான் நினைகுவிரேல் நும்மிடத்தே உறும்பற்று
முற்றும் நீங்கும்
அற்றந்தான் வரும்கொல்லோ? பற்றுள்ள காலத்தே
அவனைப் பற்றி
நிற்றல்தகும் எனஉரைப்பான் ராமசுரத் குமாரன்எனும்
நிமல யோகி. 180

மாயையெனும் பாம்பினையே மிதித்தடக்கி அதன்மேலே
வயங்கி நிற்கும்
தூயவனாய், எஞ்ஞான்றும் குழந்தைபோல் சிரிக்கின்ற
துங்கச் செல்வன்,
ஆயென்ன அன்பர்களைச் குழந்தையென அணைத்தின்பம்
அருளும் மெய்யன்,
நாயகனும் ராமசுரத் குமார்தன்னை அருணையினில்
நாட லாமே. 181

தவத்தினர்கள் மிகச்சாரும் திருவண்ணா மலைதன்னில்
சார்ந்த ஐயன்,
நவத்துளைகள் பெற்றிருக்கும் உடலினையே பெரிதென்று
நயக்கும் மக்கள்
அவத்தைஅறி யாமல்உயர் நன்மொழிகள் சொல்கின்ற
அன்பன், என்றும்
சிவப்பெருக்கான் ராமசுரத் குமார்என்னும் பேருடைய
செல்வன் அம்மா. 182

வஞ்சகத்தால் நல்லோர்போல் நடிக்கின்ற பலர்இந்த
வையத் துள்ளார்;
நெஞ்சகத்தே அழுக்கின்றிக் குழந்தைபோல் மிகத்தூய்மை
நிறைந் தோனாகித்
தஞ்சமுற்ற கரதலத்தால் அஞ்சல்எனச் சொல்கின்ற
தயாள சீலன்
துஞ்சலற்ற கருணையினான் ராமசுரத் குமார்என்னும்
தூய ஞானி. 183

மூச்சடக்கிக் கும்பகத்தால் மிகநிறுத்தி மாழாந்து
முக்கி முக்கி
ஆற்றுகின்ற யோகத்தால் இளைப்புறுவார் தமைநாடி
அலைதல் வேண்டாம்;

பேச்சினிலே இறைவன்தன் புகழ்தன்னை மிகச்சொல்லிப்
பெரிதும் நாடின்
தீச்சுடராம் அவன்தன்னுல் கன்மமறும் எனச்சொல்வான்
திருவார் ஞானி. 184

பாரினிலே பிறந்தவர்கள் ஒருநாளில் இறப்பதுதான்
பான்மை யாகும்;
ஆரந்த நிலையினின்றும் விடுபடுவார்? இதனைமனத்
தமைத்து நாளும்
காருடைய காலன்றன் அச்சத்தைப் போக்குதற்குக்
கடவுள் தாளில்
சேருமென்றே உரைப்பவன்சீர் ராமசுரத் குமார்என்னும்
செம்மல் அம்மா. 185

பாசத்தால் கட்டுண்டு பாரினிலே அவாவினிலே
பதிந்து நாளும்
நேசத்தால் சுற்றம்என்றும் மனைஎன்றும் பற்றென்றி
நிற்பீர் காள்ஓர்
வாசத்தால் அருளாகி மணக்கின்ற பெருமானை
மாத வத்தில்
நேசத்தால் நிற்பானை ராமசுரத் குமார்தன்னை
நேர வாரீர். 186

முன்னின்று பால்தருவான்; பாடல்களை மிகநாடி
மூளும் இன்பம்
பன்னிநலம் செய்திடுவான்; அன்பர்பால் குழந்தையெனப்
பண்பு காட்டித்
துன்னுகின்ற அச்சமெலாம் போக்குதற்கு வழியுரைப்
தூய யோகி [பான்;
பன்னுபெயர் ராமசுரத் குமார்என்னும் பெயருடைய
பரமன் கண்டீர். 187

ஆசையால் பாசநிலை மேன்மேலும் அடர்ந்துவர
அலைப்புண் டேங்கி
மாசுபெற வாழ்கின்ற முனிவர்உருப் படைத்தவரை
மதித்தால் அன்னோர்
காசறவே ஞானத்தைக் காட்டுவரோ எனச்சொல்லிக்
கருணை காட்டி
வீசுபுகழ் சேர்ராம சுரத்குமார் எனும்யோகி
மேலோன் அன்றோ? 188

ஒன்றாகிப் பலவாகி உருவாகி அருவாகி
ஓங்கா ரத்தில்
நின்றானை அருள்பெருகும் நெஞ்சகத்தே நிறுத்துகின்ற
நேயன், மேலாய்த்
துன்றுநிற் கின்றஉப சாந்தநிலை தனில்நாளும்
துயில்கின் றானைக்
குன்றாகும் அருணையினில் கண்டுகளிப் போர்இன்பம்
கொள்வார் அன்றே. 189

கற்கண்டைத் தான்அருள்வான், கண்டெனவே மொழி
காத வித்தார் [பேசிக்
சொற்கண்டு மிகப்பரிந்தே அருள்செய்வான் பிரமம்எனும்
சோதி தன்னை
இற்கண்ட தன்நெஞ்சக் கோவிலுள்ளே இருத்துகின்
ஏதம் இல்லான்; [றான்;
அற்பதுவே திருவுருவான், ராமசுரத் குமாரன்எனும்
ஐயன் அம்மா. 190

நாவாலே பலபேசிச் செயலாலே ஒன்றுசெய்யா
நரர்கள் தம்மை
வாவாஎன் றேஅழைப்பான்; வந்தபின்னர் மதிசொல்லி,
மயங்கா தீர்கள்

ஆவானென் றிறைவன்றன் அருள்நினைத்தே வாழ்மின்
அறையும் சொல்லான்; [என்றே
தேவாதி தேவனும் ராமசுரத் குமார்என்னும்
சீர்த்த பேரான். 191

பாபமெல்லாம் போக்குகின்ற குளிர்சொல்லான்
பணிவார் தங்கள் [தாளடைந்தே
தாபமெல்லாம் போக்குகின்ற புண்ணியத்தான்
சாக ரத்தான்; [பேரருளாம்
கோபமெல்லாம் நீத்தடக்கி உபசாந்த நிலைதன்னில்
குளிக்கும் ஐயன்,
ஆபத்தெல் லாம்கடந்தான் ராமசுரத் குமாரன்எனும்
ஐயன் அன்றே. 192

மண்ணகத்தில் நல்லவண்ணம் வாழ்ந்திடலாம் என்றிருக்
மனிதர் தம்மை [கும்
எண்ணகத்தே இறைவன்தன் திருவடியைப் பற்றுகின்ற
இயல்பு காட்டிக்
கண்ணகத்தே ஒளிபோல அவன்கருணை காட்டுகின்ற
கதியும் காட்டி
உண்முகத்தே நிறுத்துகின்றான் ராமசுரத் குமாரன்எனும்
ஒருவன் தானே. 193

சித்துக்கள் பலசெய்வார்; செப்பிடுவித் தைபோலச்
சிந்தை செய்ம்மின்;
அத்தனையும் எதற்காகும்? காலன்வந்தால் அவர்தாமும்
அஞ்சு வாரே;
நித்தம்இந்த உலகத்தில் சத்தியமாம் பேரருளை
நினைந்து வாழ்க
இத்தருணம் எனச்சொல்வான் ராமசுரத் குமார்என்னும்
இயற்பேர் யோகி. 194

பகையதனை அடக்குகின்ற பலமுடையோம் யாம்என்பார்; பாம்பின் நஞ்சைத்
தகவேநாம் போக்குகின்ற வித்தைமிகக் கற்றோம்காண் சார்மின் என்பார்;
உகும்நாளில் காலன்தான் வருங்காலை எதிர்நிற்கும் ஊற்றம் உண்டோ?
மிகஅறிமின் எனச்சொல்வான் ராமசுரத் குமார்என்னும் மேலோன் கண்டீர். 195

எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணிஎண்ணி ஏங்கிமனம் எந்த ஞான்றும்
புண்ணாகிப் போவோரை அன்பென்னும் நீராட்டிப் புனித மாக்கிக்
கண்ணாரும் ஒளிபோல மெய்ஞ்ஞான நிலைகாட்டிக் கருணை காட்டும்
தண்ணாளன் ராமசுரத் குமார்யோகி எனும்பேர்கொள் தவஞ்செய் சீலன். 196

தவநெறியே மிகப்பெரிதாம்; மூச்சடக்கித் துன்புறுதல் சற்றும் வேண்டா;
சிவனடியே அநவரதம் நெஞ்சிலிருந் தாலதுவே சிறந்த நோன்பாம்;
அவனுடைய நினைவோடு பலவேலை செய்வதனால் அருளே சேரும்;
நவஇன்பம் உண்டாகும் எனச்சொல்வான் ராமசுரத் குமார நாதன். 197

காலமெல்லாம் கைப்பொருளில் கண்ணாகக் கழித்து காலன் சீறி [விட்டால்
மேல்வருங்கால் என்செய்வீர் எனக்கேட்டால் விடை விரகொன் றுண்டோ? [பகரும்

கோலமுற மெய்ஞ்ஞான உபதேசம் மிகச்செய்வான்,
குளிர்ந்து பேசி
ஞாலமெல்லாம் அவனருளே எனச்சொல்வான் ராமசுரத்
குமார நாதன். 198

கோதற்ற மொழிபேசும் தவச்செல்வன், குணம்நிறைந்த
குன்றம் போல்வான்;
தீதுற்ற பிறவிவரா வகைகாட்டும் பேராளன்,
செய்ய ஞானி,
ஏதுற்ற உலகத்தில் உபசாந்தம் இதுவென்றே
இசைக்கும் ஐயன்,
மாதுற்றான் வளர்அருளை ராமசுரத் குமாரன்எனும்
மாதவத்தோன். 199

சிங்கம்போல் கனைக்கின்ற பேர்களும்கா லன்வந்தால்
தீரம் உண்டோ?
அங்கமெல்லாம் பரபரக்க உயிர்நடுங்கி மிகச்சாரும்
அப்போ திங்ஙன்
துங்கஅருள் செய்வதற்கே இறைவன்உருக் கூடுங்காண்;
தூய அன்பால்,
மங்கலிலா வகையிதனை உரைக்கின்றான் ராமசுரத்
குமார வள்ளல். 200

தவம்செய்ய வேண்டாம்நீர் நிலைநின்று நாள்கழித்தே
சாரும் யோகம்
அவமாகும், உள்ளகத்தே அவனருளை நாடாமல்
அயர்ந்திருந்தால்;
நவமான அநுபவம்செய் நலமான பொருளையெண்ணும்
ஞானம் வந்தால்
சிவம்ஏறும் எனச்சொல்வான் ராமசுரத் குமாரன்எனும்
செல்வன் அம்மா. 201

மும்மலங்கள் அவைமாற்றி மெய்ஞ்ஞானத் துறைகாட்டி
மூண்ட அன்பிற்
செம்மையுற வாழ்வதற்கே வழிசொல்லும் பெரியான் [காண்
சிறந்த அன்பர்
தம்மிடையே குழந்தைபோல் சிரிக்கின்றான்; திருவருளை
சாரும் ஐயன்
அம்மைஇம்மை காட்டுகின்றான் ராமசுரத் குமார்என்னும்
அரும்பேர் ஐயன். 202

ஆற்றினையே கடப்பதற்குப் பரிசில்உண்டு; கடல்கடக்க
ஆகும் கப்பல்
ஏற்றமுண்டாம்; அதுபோலப் பிறவிஎனும் பெருங்கடலை
இன்னும் சாரா
ஊற்றமுறக் கடப்பதற்கு வழியுண்டோ? அருள்ஒன்றே
உணர்மின் என்பான்;
தோற்றமுறும் திருஞானி ராமசுரத் குமாரன்எனும்
தூய யோகி. 203

தனத்தாலே பயனுண்டோ? படையாலே பயனுண்டோ?
தரணி நல்லோர்
இனத்தாலே பயனுண்டாம்; குணங்களிலே பக்திஎனும்
இயல்பே மேலாம்;
எனப்பாரில் இறைவன்பால் எஞ்ஞான்றும் உளமிருத்தி
எண்ணு வீரேல்
வினைப்பாலால் இனிப்பிறப்பின் றெனச்சொல்வான் ராமசுரத்
குமார மேலோன். 204

புகழ்வார்பால் மனம்இசைந்து நலம்செய்து போற்று [கின்ற
புவியீர், என்றும்
இகழ்வார்பால் மிகவெறுத்தே ஒதுக்குகின்றீர், மிக
இசைத்திட் டாலும் [இழித்தே

புகழ்ந்தாலும் ஒன்றாக நினைக்கின்றான் ஒருஞானி
பொருவில் கீர்த்தி
திகழ்வாரும் அருணையினில் ராமசுரத் குமாரன்எனச்
சிறந்த யோகி. 205

சொல்லாலே பொருளாலே காப்பியத்தால் பேரறிவு
துன்னி நின்றேம்,
வெல்வார்கள் யாருமிலை எனப்பேசும் வித்தகர்தாம்
மேலை நாளில்
அல்லாரும் எருமையின்மேல் காலன்வந்தால் அவன்
அறைவர் கொல்லோ? [முன்னே
அல்லாரும் களத்தனருள் பெறுகஎன்பான் ராமசுரத்
குமார ஐயன். 206

பாட்டாலே புகழ்பாடி அவன்முன்னே வீழ்ந்திறைஞ்சிப்
பல்கால் தீட்டும்
ஏட்டாலே அவன்புகழை மிகஎழுதிப் பாடிடினும்
எல்லை யுண்டோ?
காட்டாகும் பொருள்எல்லாம் ஒருசேரக் கிடைக்கின்ற
காட்சி காண்பான்,
மாட்டாரும் வல்லவராய் இருக்கவைப்பான் ராமசுரத்
குமார வள்ளல். 207

குப்பையெலாம் கிடக்கின்ற சூழலிலே இருக்கின்றான்;
கோது சற்றும்
செப்பரிய திறமுடையான், ராமசுரத் குமார்என்னும்
சிறந்த பேரான்,
அப்பெரிய ஞானத்தான்; குப்பையிலே சுடரென்றே
அலர்கின் றான்காண்;
தப்பில்லாப் பெருமைஉடை அவன்பாதம் வணங்குவார்
சான்றோர் தாமே. 208

சொல்லாத சொல்லுடையான், துணியாத துணிவுடை
சோர்வொன் றில்லான்; [யான்;
வெல்லாத பொறிகளையே வென்றுடையான், வேதத்தில்
மேவும் சத்தாம்
எல்லார்ந்த பொருள்அறிவான்; ராமசுரத் குமாரன்எனும்
இயற்பேர் கொண்டான்;
நல்லார்கள் போற்றுகின்ற திருவருணை மாநகரில்
நண்ணு வானே. 209

அருணைமா மலைகண்டால் வியந்துநிற்போம்; அக்கோயில்
அகத்துச் சென்று
கருணைஉடைச் சிவனடிக்கீழ் வீழ்ந்திறைஞ்சி அன்புசெய்தே
களிப்போம்; பின்னர்த்
தருணம்இதென் றேஅங்கே ராமசுரத் குமார் தன்னைச்
சார்ந்தே அன்னோன்
அருள்செய்யும் வகையறிந்தே ஆனந்தம் மிகப்படைப்போம்;
அணுக வாரீர். 210

சொக்கட்டான் ஆடுகின்ற திறம்போலப் பொறிகளெல்
சூழ்ந்து நின்று [லாம்
இக்கட்டால் நம்மைமிகத் துன்புசெய்யும் இவ்வுலகில்
இந்த வாழ்வில்
மக்கள்தான் உறுதிபெற வகுக்கின்ற பெருஞானி;
மாயம் போக்கித்
திக்கெட்டாம் புகழாளன் ராமசுரத் குமார்என்னும்
செல்வன் அம்மா! 211

ஆசையெலாம் போக்குகின்ற பெருமானை அருளுருவாய்
அமர்ந்தான் தன்னைத்
தேசுடைய திருவிழிகள் கொள்வானைக் குழந்தைபோல்
சிரிக்கின் றானை

வீசுபுகழ் மிகவுடைய துறவரசை, அருணைநகர்
மேவும் சீர்த்தி
ஆசகலக் கொண்டானைக் கண்டார்கள் எஞ்ஞான்றும்
அன்பர் ஆவார். 212

அழுக்குடையைத் தான்தரித்தான்; ஆனாலும் அகத்தின்
அழுக்கொன் றில்லான்; [கண்
பழக்குலையும் காகிதமும் மிகச்சுற்றிக் கிடக்கின்ற
பான்மை கண்டே
சழக்கிடையே இருக்கின்றான் எனச்சிலர்கொள் வார்;
சாரும் சேற்றில் [குளத்தில்
அழுக்ககன்ற தாமரைபோல் ராம்சுரத் குமார்யோகி
அலர்கின் றானே. 213

(எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

எள்ளுக்குள் எண்ணெய்போல் இருக்கின் றானை
எழுகின்ற நீரினிலே தண்மை போல
நள்ளுற்ற பெருமானை மெய்ஞ்ஞா னத்தின்
நல்லுருவாய் இருக்கின்ற அம்மான் தன்னைச்
சொல்லுற்ற பொருள்எல்லாம் சாரு வானைத்
தூயவர்தம் நெஞ்சத்தில் இருப்பான் தன்னை
நள்ளுற்ற படிகாண வழி வகுக்கும்
நாயகன்தான் ராமசுரத் குமார யோகி. 214

வேதத்தின் பொருளாகி ஆக மத்தின்
விளைவாகி மெய்ஞ்ஞானம் மேவும் மேலாம்
போதத்தின் துணிவாகிப் பொருளுக் கெல்லாம்
மேற்பொருளாம் உண்மைபொலி சோதி யாகிச்
சீதத்தண் நதியாகி மலையு மாகித்
தேவர்க்குந் தேவனாய்ச் சிறக்கும் ஐயன்
ஓதுற்ற அருணைநகர் தன்னி லுற்றான்
ராமசுரத் குமாரன்எனும் ஒருநா மத்தோன். 215

கல்லதனைப் பிசைந்துருக்கி நீராய் ஆக்கும்
கருணைபோல் தன்பாலே வந்தார் தம்மை
அல்லல்உறு வாறருளை மிகவே பெய்தங்
கன்புசெயும் தவயோகி, நூல்கள் யாவும்
சொல்லுற்ற பொருளாகிப் பொருள்களுக்குள்
துன்னுகின்ற அநுபவமாய் மன்னும் ஒன்றை
வெல்லுற்ற படிஇதுதான் எனவே காட்டும்
மேதகையோன் ராமசுரத் குமார மேலோன். 216

## (அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

கோதத்தை வென்றுவிட்டான்; காமத்தை அறவெறிந்து
குளிர்ந்து நின்றான்;
சாதத்தை மரணத்தைப் பவமென்னும் கடலினையே
தாண்டி விட்டான்;
போதத்தின் தலைநின்றான்; மெய்ஞ்ஞானத் திருஉருவான்;
புகுவார் தம்பால்
ஏதத்தைப் போக்குகின்ற நெறிகாட்டும் ராமசுரத்
குமார ஏந்தல். 217

## (எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

வண்டெல்லாம் மொய்க்கின்ற பூவே போல
மகிழ்அன்பர் வந்துமொய்க்கும் திருத்தாள் கொண்
கண்டனைய திருமொழியான் கற்கண் டிவான்; [டான்;
காதலால் குழந்தைஎனச் சிரிக்கின் றானால்;
மண்டுதுயர் போக்குகின்ற இனிய சொல்லான்;
மாநிலத்தில் பயனிதென்று வகுக்கும் நல்லான்;
மிண்டுகொளாத் திருவுளத்தான், அருணை மேவும்
வேந்தனும் ராமசுரத் குமார யோகி. 218

காலனையே கண்டஞ்சித் துயர முற்றுக்
காசினியில் எல்லோரும் மாண்டு போனார்;
சீலமிகக் கொண்டருளாம் செல்வம் தேடிச்
செயித்துவிட்டால் அப்பயத்தை மாய்க்கலாமால்;
கோலமுறும் இறைவன்உரு உள்ளே நாட்டிக்
குறிக்கின்ற வாறறிமின் என்று சொல்வான்;
ஞாலமெலாம் போற்றுகின்ற அருணை தன்னில்
நண்ணிடுவான் ராமசுரத் குமார யோகி. 219

அவனென்றும் இவனென்றும் பேசிப் பேசி
அவமேநம் வாழ்நாளைப் போக்கி விட்டால்
அவமொன்றும் படிகாலன் வருமப் போதில்
ஆர்நந்தம் துணையாவார் என்னக் கேட்பான்,
சிவன்நந்தம் துணைஎன்றே சொல்லிச் சொல்லிச்
சீலமுறத் தியானம்செய் வழியைக் காட்டி
நவமொன்றும் நலம்செய்வான் அருணை தன்னில்
நண்ணுகின்ற ராமசுரத் குமார நாதன். 220

பன்னாளாய் நீராடான்; வாய்மை என்னும்
பரிசுத்த நீராலே நிறைந் திருப்பான்;
நன்னாவலர்போற்ற நிற்கும் ஐயன்;
நாடோறும் பலஅன்பர் கூடு கின்றார்;
சொன்னாலே அவன்நாமம் இனிமை சேர்க்கும்,
தூய்மைமிகும் என்பதனை அன்பர் தேர்வார்;
இந்நாளில் அருணைநகர் தன்னில் வந்தால்
இயல்ராம சுரத்குமார் தன்னைக் காண்பீர். 221

காட்டகத்தே சென்றுதவம் செய்தல் வேண்டா,
கனலினிலே நின்றுதவம் செய்தல் வேண்டா;
பாட்டினையே மிகப்பாடும் ஆற்றல் வேண்டா;
பக்திசெய்வீர் இறைவனடி பணிவீர் என்று

நாட்டமுற நன்னெறியைக் காட்டு கின்ற
நல்லவனும் ராமசுரத் குமார யோகி
வீட்டினிலே செலுத்துகின்ற அருணை தன்னில்
வீற்றிருக்கின் றான்அவன்தாள் தன்னைச் சார்மின். 222

தாய்போலப் பால்தருவான்; தந்தை போலத்
தக்கநன் மொழிகளையே சாற்று கின்றான்;
வாய்பேசும் மொழியாலே தாபம் எல்லாம்
மறைந்துவிட உண்மைதனை வகுக்கும் சீலன்,
காய்மேவிக் கனியாகும் சிறப்பைக் காட்டும்
கருத்துப்போல் உளங்கனியக் காட்டு கின்றான்;
சேய்போலச் சிரிக்கின்றான், அருணை தன்னில்
சிறக்கின்ற ராமசுரத் குமார யோகி. 223

சொல்லுக்கே எல்லையுண்டோ? பொருளுக் கெல்லை
துன்னலுண்டோ? ஆதலினால் சொல்லை விட்டு
மல்லுக்கு நிற்கின்ற பொறிகள் விட்டு
மாதேவன் சரணத்தை உள்ளே வாங்கி
அல்லுக்குள் பேரொளியாய் நிற்கும் ஐயன்
அவன் தன்னைத் தியானம்நீர் செய்மின் என்றே
சொல்லுக்குள் மிகச்சொல்வான் தூய யோகி
ராமசுரத் குமாரன்எனச் சொல்லும் பேரான். 224

பந்தமிலா வாழ்விதுகாண்; நந்தம் வாழ்வில்
பலபொருளை நாடிஎன்ன கண்டோம்? என்றும்
பந்தமறும் மனத்தவர்கள் இறைவன் தாளைப்
பணிந்துநிதம் இன்பநலம் துய்க்கின் றார்கள்;
அந்தமுறை போற்செய்மின் என்று சொல்லி
அன்புமிகக் காட்டுகின்ற நாதன் கண்டீர்,
தொந்தமறு தவத்தோர்கள் நாடு கின்ற
தொல்பதியாம் அருணைநகர் இருக்கின் றானே. 225

சரியைமுதல் சோபானம் நான்காம்; அங்ஙன்
சார்கின்ற சோபானம் நான்கும் ஏறி
அரியமெய்ஞ் ஞானத்தை அடைந்து விட்டால்
அருள்பெறலாம் என்கின்ற நூல்கள் பார்த்தோம்;
தெரியுமவை செய்வதற்கு முடியா தென்றால்
திருப்புகழ்சேர் அருணைநகர் வந்து சார்மின்;
குருஎனவே ராமசுரத் குமாரன் முன்னால்
கூடுமின்; அவனருளால் இன்பம் காண்பீர். 226

பொறியடக்கி ஆசைகளை அறவே விட்டுப்
பொருள்தன்னைச் சேர்க்கின்ற அவாவும் நீங்கி
அறிவுபெற்று நிற்கஎன்றால் அரிய தாகும்;
அருளுடையார் தம்பாலே அணுகி நல்ல
நெறிநின்று கருணையினைப் பெற்று விட்டால்
நிலையுற்ற இன்பத்தைப் பெறலாம் என்று
குறிபெறவே சொல்கின்ற பெரிய ஞானி
கோதில்லா ராமசுரத் குமார யோகி. 227

கல்லாகும் மனமெல்லாம் கனியச் செய்வான்;
கசடுழந்த நெஞ்சமெல்லாம் தூய வாக்கி
மல்லாடும் பொறிகளையே அடக்கு கின்ற
வழிசொல்வான்; ஆசைஎனும் பேயை ஓட்டி
நல்லாறும் படிசெய்வான்; ஞான யோகம்
நாடுகின்ற பெரியார்க்கு நலமும் ஈவான்;
அல்லாடும் களத்தான்போல் இருக்கின் றானும்,
அருணைநகர் ராமசுரத் குமார யோகி. 228

இராமன்றன் நாமத்தைப் பரக்கப் பாடி
இசையோடு புகழ்கின்றான்; உள்ளந் தன்னில்
பராவுகின்ற பரம்பொருளை எண்ணி எண்ணிப்
பரந்தஉப சாந்தநிலை பெற்று நிற்பான்;

அராவாகும் மாயையினை அடக்கி ஆண்டு
அதன்மேலே நடம்செய்யும் ஐயன், இந்தக்
கரவரிய ஞானத்தான்; அருணை தன்னில்
காண்மின்கள் ராமசுரத் குமார யோகி. 229

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

சொல்லார்ந்த மேல்நிலைமேல்
சுத்தசிவ மார்க்கத்தைத் துன்ன எண்ணின்
மல்லார்ந்த பொறிகளையே அடக்கிவிட
வேண்டுமென மதித்துச் சொல்வார்;
எல்லாம்பே சுவதற்கே மிகஎளிதாம்;
அநுபவத்தில் எளிதாம் கொல்லோ?
சொல்லாடும் திறன்உள்ளான், அருணையினில்
ராமசுரத் குமாரத் துங்கன். 230

அருணைஅண்ணு மலைஅத்தன் திருவருள்தான்
என்ஞான்றும் அலர்ந்து வாழி!
கருணைபெற அவன்பாதம் நினைக்கின்ற
திருவுளத்தோர் கணந்தான் வாழி!
மருள்நயவா தவனடியே சரணமெனும்
பக்தர்கள் வாழி வாழி!
தெருள்புகுத்தும் சிவன்அருளே உலகமெலாம்
என்ஞான்றும் சேர வாழி! 231

(4–5–1981)

(எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

உலகத்தில் பலசமயம் பல்லோர் கொண்டார்;
ஒழுகுகின்ற நெறிகளுமே பலவாய்ச் சொன்ஞர்;
கலகத்தை இடும்மனத்தை அடக்கு கின்ற
கருத்தறியார்; அஃதொன்றே சாந்தம் சேர்க்கும்;

நிலைபெற்ற இன்பத்தை அடைய வேண்டின்
நில்லாத மனம்அடக்கி நிற்றல் வேண்டும்;
சுலவுற்ற இதைச்சொல்லும் பெரியான் கண்டீர்
தூயராம் சுரத்குமார் என்னும் யோகி. 232

யோகம்என்ப தென்னவென்றே வினவு வீரேல்
உளம்அடக்கிச் சாந்தநிலை நிற்றல் ஆகும்;
பாகமுறும் நெஞ்சகத்தே இறைவன் தாளைப்
பதித்தொருமித் திருக்கின்ற திறமை காணும்;
தேகமெலாம் மறந்துவிடும் இன்பம் சாரும்;
திகழ்கின்ற பேருணர்ச்சி நிலையாய் நிற்கும்;
ஏகமென்ற பொருளதனை உணர்ந்து சாரும்
இன்பமெலாம் அங்குவரும் கண்டீர் கண்டீர். 233

பூவுலகில் பலபொருட்பால் ஆசை வைத்துப்
புத்திமயங் கித்திரியும் பேதை யர்போல்
ஆவலுடன் பற்றதனைச் சேர்த்துக் கொண்டால்
அருளினையே அடைவதுவும் சாத்ய மாமோ?
தேவரெலாம் போற்றுகின்ற தெய்வம் வந்து
சிந்தையிலே குடிகொண்டால் இன்பம் சாரும்;
ஆவதுதான் ஏதென்றே அறைகின் றானை
அருள்ராம சுரத்குமார் தன்னைக் காண்மின். 234

கட்டோடே கனத்தோடே சுற்றத் தோடே
கனதனத்தோ டேஇருக்கும் வாழ்வு தானும்
மட்டோடே ஊழ்வலிதான் அற்றுப் போனால்
மாய்ந்துவிடும் என்பதனை அறியார் பல்லோர்;
பட்டோடே பணியோடே நிற்கும் செல்வப்
பான்மையினோர் வாழ்வெல்லாம் அழிந்து போகும்;
நிட்டையிலே அவன்உறவை நினைமின் என்றே
நிகழ்த்துகின்றான் ராமசுரத் குமார ஞானி. 235

சமயங்கள் பலவாக உலகில் நின்று
சாத்திரங்கள் பலவாகக் காட்டும்; எல்லாம்
அமையும்ஒரு பொருளினையே பலவாச் சொல்லும்;
ஆன்றஇந்த உண்மையினை அறிவார் மேலோர்;
குலவுகின்ற பொருளதனை உள்ளத் துள்ளே
கூர்ந்தடக்கிச் சாந்திபெற்றே இன்பம் கண்டால்
நிலவுகின்ற மயல்போகும் என்கின் றானை
நீள்அருணை ராமசுரத் குமாரைப் பார்மின். 236

அன்பர்எல்லாம் வந்துபணிந் தார்வத் தோடே
அலகிலவாம் தம்குறைகள் சொல்லி நின்றார்;
வன்புடைய நெஞ்சமில்லான்; சொல்லில் இன்பம்
வாய்ப்பக்கற் கண்டுபோல் மொழியைச் சொல்வான்;
பன்னுபல சமயங்கள் சொல்லும் மார்க்கம்
பதிவாக ஒன்றென்றே சொல்லிச் சொல்லி
அன்னவுருப் பலஅன்றும் என்று காட்டும்,
அண்ணலாம் ராமசுரத் குமார யோகி. 237

காலத்தை வீணுகக் கழிக்கின் றீரே;
கருத்ததனில் சிவம்நண்ணப் பார்க்க வேண்டும்;
ஞாலத்தின் வாழ்வெல்லாம் பொய்யாய்ப் போகும்;
நமன்வந்தால் என்செய்வீர் என்று சொல்லிச்
சீலத்தைப் பத்தியினை எடுத்துச் சொல்வான்;
சிவனருளும் இன்பத்தை எய்தும் மார்க்கம்
சாலஇது என்றென்றே சொல்லு கின்றான்,
சாந்தகுண ராமசுரத் குமார ஞானி. 238

எத்தனையோ முயற்சிகளைச் செய்திட்டாலும்
எய்துகின்ற வெற்றிசிறி தாகக் காண்போம்;
அத்தனையும் வீணுகப் பாழுக் காக்கி
அவலமாய் வாழ்வெல்லாம் போக்கி நின்றோம்;

சித்தனையும் சிவனைநம் சிந்தைக் குள்ளே
  செறித்துவைத்தே தியானம்செய் சிறப்புண் டாயின்
மத்தமதி யில்ஞானம் வந்து சேரும்,
  வாருங்கள் எனச்சொல்வான் குமார யோகி. 239

பலகலைகள் அறிந்தாலும் உண்மை ஒன்றைப்
  பார்த்தறியாக் கசடர்கள் பாரில் உள்ளார்;
நிலைகுலைந்தே அலைகின்ற மனத்தைச் சற்றே
  நிறுத்துகின்ற வழியறியார்; யோகம் செய்வார்;
குலவுகின்ற அதனைஒரு விளையாட் டாகக்
  கொள்கின்றார்; மனம்அடக்கும் திறம்கா ணாதார்;
பலபொருளே ஒன்றாகும் திறத்தைச் சொல்லும்
  பான்மையனும் ராமசுரத் குமார யோகி. 240

காணாத காட்சியெல்லாம் காண்கின் றானைக்
  கருதாத கருத்தெல்லாம் கருது வானைப்
பூணாத பூணெல்லாம் பூண்கின் றானைப்
  புனையாத புனைவெல்லாம் புனைகின் றானை
மாணாகும் பரப்பிரமம் இதுதான் என்று
  மனத்தகத்தே சிறைப்படுத்தி வைக்கின் றானைச்
சேணாகும் அருணைநகர் தன்னில் சென்று
  சீர்ராம சுரத்குமார் தன்னைப் பார்மின். 241

நோய்வந்தால் மருந்துணலாம்; உடலம் சற்றே
  நுடங்கிமெலி வானல்பின் சுவைசார் சோற்றை
வாய்வந்த படிஉண்டே பலத்தைப் பெற்று
  வாழ்க்கையிலே திறம்பெறலாம் எனினும் கால
னுய்வந்த எமன்வந்தால் அவற்கு முன்னே
  அவையெல்லாம் வீணாகிப் போகும் அன்றோ?
தாய்வந்த அருள்பெறுவீர் என்பான் என்றும்
  சாந்தனும் ராமசுரத் குமார யோகி. 242

பகர்கின்ற சொல்லில்எல்லாம் பொருளை வைத்துப்
 பார்த்திட்டால் தனிஞானம் இருத்தல் தோன்றும்;
நிகர்இல்லாப் பரம்பொருளைச் சொல்லுக் குள்ளே
 நிறுத்தஓர் வழியுமுண்டோ? மோனந் தன்னில்
சிகரமுறும் ஞானமெனும் மலைமேல் நின்றால்
 தீர்வரிய மாயைஎல்லாம் ஓடிப் போகும்;
பகருமிதை உணருங்கள் என்று சொல்வான்
 பயமகற்றும் ராமசுரத் குமார யோகி. 243

காட்டுகின்ற பொருள்எல்லாம் பொய்யாய்ப் போகும்;
 கனவினிலே தோற்றுகின்ற காட்சி போலாம்;
பூட்டுகின்ற பணியெல்லாம் மங்கிப் போகும்;
 புசிக்கின்ற உணவெல்லாம் மலமாய்ப் போகும்
வீட்டடையும் நெறியதனை நினைந்தே என்றும்
 விமலனவன் திருத்தாளைச் சார்மின் என்று
காட்டுகின்றான், அருணைநகர் தன்னில் வாழும்
 கவினுரும் ராமசுரத் குமார ஞானி. 244

எடுத்துக்காட் டால்சொல்லும் பொருள்அஃ தன்றி
 எல்லாமாய் அல்லதுமாய் இருக்கின் றானை
மடுத்துச்சொல் வதற்குமோர் சொல்தான் உண்டோ?
 வாய்திறக்க வழியுண்டோ? மோன ஞானம்
அடுத்தங்கே உயர்நிலையில் இருக்கும் காலை
 அடைகின்ற அநுபவந்தான் உண்மை யாகும்;
மடுத்தறியாப் பேரின்ப வாழ்வு காட்டும்
 மாண்பினனும் ராமசுரத் குமார யோகி. 245

கனத்தஅருள் பொழிக்கின்ற கண்ணைக் கொண்டான்;
 கரதலத்தில் ஓடெடுத்தே பாலை உண்டான்;
சினத்தினிலே செல்லாத செம்மை உள்ளான்;
 சிவமதையே உள்ளத்தில் சிறைவைத் துள்ளான்;

அனத்திஜனயே போல்குற்றம் அறியா தென்றும்
அருங்குணத்தைப் பார்க்கின்ற நாதன், சாந்தப்
புனத்தினிலே உலவுகின்ற ஞானி எங்கள்
தயாளனும் ராமசுரத் குமார யோகி. 246

நில்லாத நீர்சடைமேல் நிற்பித் தானே
நிலாப்பொழியும் வெண்திங்கட் சடையான் தன்னே
சொல்லாத மேல்நிலேமேல் நிற்கின் ருனேச்
சொருபமெனும் ஒன்றில்லாச் சிவத்தைக் கண்டு
மல்லாடும் பொறியடக்கி மோன ஞான
வல்லமைகொள் வார்வீடு பெறுவார் என்றே
சொல்லாலே உபதேசம் சொல்கின் ருனேத்
தூயசுரத் குமார்என்றே துணிமின் கண்டீர். 247

எத்தனேயோ கற்ருலும் கேள்வி யாலே
எத்தனேயோ அறிந்தாலும் உண்மை தன்னே
சித்தம்நையா வகைதெரியும் பாங்கொன் றுண்டோ?
சீவன்முத்தர் தம்மிடத்தே சேர்ந்து நின்ருல்
வித்தமுறும் ஞானம்இதென் றேநன் கோர்ந்து
விஜனபோகும் பேற்றினேயே பெறலாம் கண்டீர்;
அத்தனேயும் அறிவதற்கே அருணே சார்ந்தே
ராமசுரத் குமார்தன்னே அடைமின் நீரே. 248

காலிருக்க நடைபோடாக் காலால் என்ன?
கண்ணிருக்கப் பார்வைஇலாக் கண்ணுல் என்ளும்?
பாலிருக்க உண்ணுத படியால் என்ன?
பழமிருக்கச் சுவையாத படியு முண்டோ?
தோலிருக்கும் உடம்பகத்தே சோதி யாகிச்
சுடர்வானே ஞானத்தால் அறிந்து கொண்டே
மேலிருக்கும் கதிகாண வேண்டும் என்பான்;
மிகும்ஞானி ராமசுரத் குமார யோகி. 249

ஆணையெலாம் சிவன்ஆணை; அவன்தன் உள்ளம்
அதுபோல யாவையுமே நடக்கும் என்று
காணுகின்ற காட்சிக்குள் சிவத்தைக் கண்டு
கருத்தினிலே சோதியாய்க் காணப் பெற்றூர்
வீணுக உடம்பெடுத்தே அலையார்; அந்த
வீட்டுலகம் என்பதொன்றை இங்கே கண்டு
மாறுர இருப்பார்கள் என்பான், எங்கள்
மாதவனும் ராமசுரத் குமார யோகி. 250

கண்டாலும் காணுத வித்தை போலக்
கண்கட்டிப் புண்கட்டி வாழும் வாழ்க்கை
விண்டாலே காலன் வந்தே உறுத்து நிற்பான்;
மேலவனை வெற்றிகொள்ளும் வழியைக் காண்பீர்;
துண்டாகும் மனம்அடக்கித் தியானம் செய்தால்
சொருபநிலை காணலாம் என்னச் சொல்வான்,
வண்டாடும் திருமாலை மார்பன் எங்கள்
மாதவனும் ராமசுரத் குமார ஞானி. 251

ஓங்காரத் தனிப்பொருளாய் வேதத் தின்கண்
உறும்பெரிய பரம்பொருளாய்ச் சத்தாய் நிற்கும்
பாங்காரும் பெரும்பொருளாய்ப் பிரம்ம மாகிப்
பரவுகின்ற நற்பொருளாய் இருக்கின் றுனை
தீங்காரா வகைஉள்ளே சிந்தைக் குள்ளே
செறியவைத்துத் தியானம்செய் வீர்கள் என்றே
ஆங்காணை கொண்டுரைப்பான், அருணை தன்னில்
அமர்கின்றுன் ராமசுரத் குமார ஞானி. 252

மும்மலங்கள் தமையடக்கி மோன ஞான
முக்தியினை அடைவதற்கே வழியைக் காண்பீர்;
நம்மனத்தை அடக்குதற்கு வழியொன் றுண்டாம்;
நாயகனும் இறைவனைத்தான் உள்ளே வைத்துச்

செம்மையுற்றுத் தியானம்செய் விரகைத் தேறின்
செறியுமந்த இன்பத்தைக் காண லாகும்;
இம்மையிலே இன்பம்வரும் எனச்சொல் கின்றான்;
எந்தைபிரான் ராமசுரத் குமார ஞானி. 253

ஆதாரம் ஆறினிலும் அங்கி போக்கி
ஆதாரம் கடந்திருக்கும் மேல்நிலைமேல்
தீதாரா வகைமதியின் பாலை உண்டு
தெவிட்டாமல் நிற்கின்ற யோகி மாரே,
பாதார விந்தத்தில் நெஞ்சை வைத்துப்
பலபற்றை உதிர்த்துவிட்டுப் பத்தி செய்தால்
சேதாரம் ஆகாது; நெஞ்சம் கொள்வீர்;
சேர்ந்தறிமின் ராமசுரத் குமார்தன் பாலே. 254

### (அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

கருணையே திருஉருவாய்த் தயைசுரக்கும்
கண்ணாளன், கருத்தின் உள்ளே
மருள்நெறியொன் றறியாத ஞானமுடைத்
தவராஜன், வாழ்க்கைக் கண்ணே
தெருள்பெறவே வழிகாட்டும் பரமகுரு.
அருணைநகர் சேர்ந்து நின்றான்;
குருள்நிறைந்த மனம்அடக்கும் ராமசுரத்
குமாரன்எனும் கோமான் அம்மா. 255

### (எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

வாதத்தால் உண்மையினைக் காண லாமோ?
வாக்கினிலே பொய்யுரைத்தால் நலமொன் றுண்டோ?
போதத்தால் அறிகின்ற பொருளை என்றும்
பொறற்புறவே உளத்திருத்தித் தியானம் செய்தால்

ஏதத்தை நீங்குகின்ற பான்மை உண்டாம்;
இன்பநிலை தானேவந் தெய்தல் கூடும்;
ஓதுற்ற இதைஅறிவீர் என்கின் றானை
உயர்ராம சுரத்குமார் தன்னைப் பார்மின். 256

கந்தைஉடை ஆனாலும் கண்ணுக் குள்ளே
கதிர்ஒளிஒன் றமைகின்றான்; காணற் கில்லா
விந்தையெலாம் தான்அறிந்தான்; ஆன்மா என்னும்
வியன்செல்வம் வீணாகா திருக்கின் றான்,எம்
சிந்தையெலாம் பறிகொள்ளும் செம்மை யாளன்,
திருவாளன், அருணைநகர் சேர்ந்த செல்வன்
அம்மையென அருள்செய்யும் அப்பன் எங்கள்
ராமசுரத் குமார்என்னும் அரிய ஞானி. 257

காலத்தை வீணாகப் போக்கி டாமல்
கணமேனும் அவமாகச் செல்லல் இன்றி
ஞாலத்தில் வாழ்கின்ற போழ்தை எல்லாம்
நங்கள்பிரான் திருஉருவம் மனத்தில் வைத்துச்
சீலத்தை மிகக்கொண்டே பத்தி செய்தால்
சிறக்கின்ற வாழ்வதனைப் பெறலாம் என்றே
காலத்தில் சொல்லுகின்ற பரம ஞானி
கவின்ராம சுரத்குமார் என்னும் மேலோன். 258

பாதத்தைப் பற்றினார் பாத கத்தைப்
பாற்றிவிடும் பேராளன், பரம ஞான
போதத்தை அருளுகின்றான்; ஓங்கா ரத்தின்
பொருளாகும் இதுவென்றே சொல்லு கின்றான்;
கீதத்தை மிகக்கேட்டே உவக்கும் பெம்மான்,
இளர்சிரிப்பில் குழந்தைபோல் காட்டு கின்றான்;
நாதத்தண் பரப்பிரம அருணை மேவும்
நாயகனும் ராமசுரத் குமார ஞானி. 259

வல்லாளன், எல்லார்க்கும் வன்மை காட்டும்
மதியாளன், மனமடக்கும் வன்மை யாளன்,
சொல்லாளன், பொருளாளன், அநுப வத்தின்
தோற்றமெலாம் தன்னகத்தே கொண்ட பெம்மான்,
மல்லாடும் பொறியடக்கி மோன ஞான
மாநிலத்தில் உலாவுகின்ற சித்தன் என்று
சொல்லாரும் புகழ்படைத்த அருணை மேவும்
தூயவனும் ராமசுரத் குமார ஞானி. 260

தாய்போல அன்புசெய்தே தந்தை போலச்
சன்மார்க்க நெறிகாட்டிக் குருவே போல
வாய்கின்ற உபதேசம் பலசெய் வானை
மலர்கின்ற முகத்தருளே கொழிக்கின் றானைச்
சேய்நின்ற தெனவேதான் சிரிக்கின் றானைச்
செம்மையெனும் பொருளதனை உணர்த்து வானைப்
பாய்புகழ்சேர் அருணைநகர் தன்னில் கண்டே
பரன்ராம சுரத்குமார் என்பீர் அங்கே. 261

தூய்மையெலாம் நீராலே வருமென் றெண்ணித்
தொல்லுலகில் நதிகள்எல்லாம் சென்றே ஆடித்
தோய்கின்றீர்; என்றாலும் உள்ளத் துள்ளே
துணிகின்ற வாய்மையன்றே சுத்த மாகும்?
பாய்கின்ற மனம்அடக்கிச் சிந்தைக் குள்ளே
பரமனவன் திருப்பாதம் பதித்து விட்டால்
ஓய்கின்ற மனத்தினிலே இன்பம் காணும்
ஒன்றுவரும்; ராமசுரத் குமார்பால் சேர்மின். 262

கண்ணாலே கண்டதெல்லாம் பொய்யாய்ப் போகும்;
காசினியில் வாழ்கின்ற வாழ்வை நம்பித்
திண்ணாரும் மனம்சிதறிச் சேரும் போது
செய்கின்ற செயல்எல்லாம் தோல்வி ஆகும்;

பண்ணுரும் பாட்டிலே உவக்கும் பெம்மான்,
பார்வையிலே தயைதன்னைக் கொழிக்கும் ஐயன்;
எண்ணுத எண்ணமெல்லாம் அடக்கு மாற்றை
இசைக்கின்றுன், ராமசுரத் குமார யோகி. 263

வாலாட்டும் நாய்போல நெஞ்சம் தானே
மதியிழந்து சுழன்றுதிரிந் தெய்த்துப் போகும்;
தாலாட்டு கின்றதாய் போல நந்தம்
சழக்குமனத் தினைஓயச் செய்வான்; நல்ல
பாலாற்றித் தந்திடுவான்; மொழியைப் பேசிப்
பகர்தாபம் நீக்கிடுவான்; அருணை தன்னில்
காலாட்ட நடனமிடும் பெரியர்ன் ஞானக்
கவின்குருவரம் ராமசுரத் குமார யோகி. 264

பாசமதை அறுத்துவிட்டால் ஞானம் சேரும்;
பந்தமிலா நெறியுறலாம்; ஓங்கா ரத்தின்
தேசுடைய ஒளியதனைக் கண்டு நாளும்
சிந்தைசெய்தால் அவ்விடத்தே இன்பம் சாரும்;
மாசில்லா வாழ்க்கையிலே தியானம் செய்து
மனம்அடக்கும் திறம்அறிவீர் என்று சொல்வான்,
ஈசனவன் குடியிருக்கும் அருணை தன்னில்
இலகுகின்ற ராமசுரத் குமார யோகி. 265

நல்லார்கள் போற்றுகின்ற நலமே, மேலாம்
ஞானநிலத் துலவுகின்ற காற்றே, என்றும்
பொல்லார்கள் காணரிய பொருளே, நின்னைப்
புந்தியிலே அடக்குதற்கு வழியைக் காணேன்;
சொல்லாரச் சொல்எனவே நிற்கின் ருர்தாம்
துணிவுடனே செல்கின்ற நெறியைச் சொல்வேன்;
மல்லார்ந்த திண்தோளான் அருணை வாழும்
மாதவனும் ராமசுரத் குமாரைப் பார்மின். 266

குழந்தைபோல் சிரிக்கின்றான்; கோணல் இன்றிக்
குதுகலித்த மதியுடையான்; தன்பால் வந்து
தொழுந்தகையார்க் கின்பருளும் தயையைச் செய்வான்;
துணிவாக ஒருபொருளே சொல்லு கின்றான்;
அழுந்துகின்ற மெய்ஞ்ஞானத் திறத்தைக் காட்டி
ஆசையால் மிகப்பரந்து திரியும் இந்தக்
கழுந்தென்னும் மனமடக்கும் கதியைக் காட்டிக்
களிக்கின்றான் ராமசுரத் குமார யோகி. 267

தலைப்பாகை தனைஅணிவான்; தாடி உள்ளான்;
சார்கின்ற பேர்க்கெல்லாம் தயையே செய்வான்;
நலப்பாலை ஈந்தருள்வான்; ஞான யோகி,
நாஇனிக்க ராமன்றன் நாமம் சொல்லி
நிலைப்பார நடனம்செய் நீதம் உள்ளான்;
நினைவினிலே அவன்பாதம் நிறுத்து கின்றான்;
கலைப்பாலும் அறியாத இன்பம் கண்டான்,
கவினுரும் ராமசுரத் குமார யோகி. 268

அன்பரெல்லாம் போற்றுகின்ற அருளை மேவும்
அப்பன்அருள் வாழிஎன்றும் அம்மை வாழி
துன்பமெலாம் நீக்குகின்ற சன்மார்க் கத்தின்
தூயநெறி மிகவாழி ஞாலம் எல்லாம்
வன்படையா துயர்சாந்த நிலைபெற் றோங்க
வலமருளும் கருணைமிக வாழி வாழி
மன்பதைகள் துயர்எல்லாம் நீங்கி என்றும்
வாழிமிக வாழிமிக வாழி வாழி! 269

(5—5—1981)

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

வேத வேதியர் காண்கலாப் பரம்பொருள்,
வித்தகர் பலர்பேச
ஓத லாகலாத் தனிப்பொருள் ஒன்றினை
உள்ளத்தி லேஅமைத்துக்
காத லோடவன் நாமத்தைச் சொல்லியே
கவின்பெறச் சிரிக்கின்றான்
நாதன் ராமசு ரத்குமார் என்னும்நன்
ஞானியின் இயல்பீதே. 270

வேண்டும் மெய்ப்பொருள் இன்னதென் றறிகலா
மேதினி மாந்தர்கள்
தூண்டும் ஆசையால் பற்பல செயல்களைத்
துருவியே செய்கின்றார்;
மாண்டு போகின்ற தேகத்தை வளம்பெற
வைப்பதை நினைக்கின்றார்;
ஈண்டிவ் வாற்றினால் பயனிலை என்பவன்
ராம்சுரத் குமார் என்போன். 271

கோலம் மேவிய இறைவன்தன் உருவத்தைக்
குறிக்கொண்டு சானம்செய்
தோல மின்றியே மனத்தினை அடக்குமா
றுள்ளவர் உறுதவத்தோர்;
சால நன்றிதைத் தேர்மின்என் றேசொல்லிச்
சாந்தமாம் நிலைசொல்வான்;
காலனைவெல்லும் ஆற்றலைப் படைத்தவன்
ராம்சுரத் குமார்அன்றோ? 272

எண்ணம் பற்பல எண்ணியே மனத்தினுள்
ஏங்கியே இருப்பவர்கள்
திண்ண மாகிய ஒருபொருள் அறிந்திடின்
சேர்தரும் நலம்பெறுவார்;

அண்ண லாகிய எம்பிரான் திருவடி
அனவரத மும்நினைந்தே
திண்ண மாகுக என்பவன் ராம்சுரத்
குமாரனும் தேவன்காண். 273

சாலப் போதரும் வாழ்வெலாம் வீண்வினை
தம்மையே செய்துபின்பு
காலன் வந்திடும் காலையில் என்செய்வார்?
காதலும் போகுமரோ!
வேலைக் கொண்டவன் குமரன்தன் திருவடி
விழைவுடன் தியானித்துச்
சால நின்றிடின் அச்சமின் றென்பவன்
ராம்சுரத் குமார்சாமி. 274

காணற் குரியதாம் ப்ரபஞ்சம் யாவையும்
கருதிடின் மாயைகாண்;
பூணும் சாந்தமே உள்ளத்தில் பொருத்தினுல்
பொற்புறும் இன்பம்வரும்;
காணற் கேயுருக் கொண்டிடும் இறைவன்றன்
கவினுருக் கண்டிடினே,
மாணப் பேறுண்டாம், எனச்சொல்வான் ராம்சுரத்
குமாரனும் மாஞானி. 275

வெல்லற் கரியவாம் ஐம்புலன் தம்மையே
வெல்பவர் பெரும்வீரர்;
சொல்லற் கரியதாம் புகழினைச் சொல்லிடல்
துர்லபம் ஆம்அன்றே:
அல்லல் பட்டிவை செயலின்றி மோனமாம்
அரங்கினில் அமர்ந்திருந்தால்
நல்ல தென்பவன் ராம்சுரத் குமாரனும்
ஞானியிற் பெரியோனே. 276

கருணை மேவிய சொல்லினன்; சுடர்விடும்
கண்ணினன்; யாவர்க்கும்
அருணை மாநகர் தன்னிலே இருந்தறம்
அடைவுடன் சொல்கின்றான்;
ஒருவன் நாயகன் பரம்பொருள் அன்னவன்
உயர்புகழ் சொல்வதையே
மருவினான்இந்த ராம்சுரத் குமார்என்னும்
வள்ளலாம் ஞானியரோ 277

(வேறு)

பார்ஆண்டே ஆட்சிபெற்றுப் பலகாலம் இருந்தவர்கள்
பறந்து போனார்;
நாராண்ட உள்ளத்தில் கருணைஎனும் பெருங்கடலாம்
நாதன் தன்னைச்
சீராண்ட படிநினைப்பார் நல்வினையைச் செய்பவர்கள்;
சிந்தித் தோர்மின்;
ஏராண்ட பொருள்என்பான் ராமசுரத் குமார்என்னும்
எங்கள் நாதன். 278

காலமெலாம் போக்கிவிட்டே முடிவுவரும் காலத்தில்
கண்ணீர் மல்கி
ஓலமிட்டால் என்பயனும்? வருமதனை முன்னரே
உணர்ந்து நாளும்
சீலமுற இறைவன்தன் திருப்பாதம் நினைமின்கள்;
செம்மை உண்டே;
சாலநன்றாம் என்கின்றான் ராமசுரத் குமார்என்னும்
சகஜ ஞானி. 279

ஆடையிலே, அணிகளிலே, செல்வத்தில் ஆசைவைத்தே
அவலம் கொண்டு
மேடையிலே புகழ்பேசி மனத்தகத்தே அவன்தன்னை
விழையார் மாட்டே

கூடையிலே துன்பம்வரும்; அவர்தம்மோ டெந்நாளும்
கூடல் வேண்டாம்;
சாடையிலே சொல்கின்றான், ராமசுரத் குமார்என்னும்
தயைசேர் ஞானி. 280

வெள்ளமெனக் காலன்வந்தால் வாழ்நாளை அடித்தேசெல்
விதத்தை எல்லாம்
உள்ளமதில் நினைவுறுத்தி இறைவன்தன் திருப்பாதம்
உணர்ந்தே ஓதிக்
கள்ளமிலா வகைஅன்பு செய்வார்கள் காலபயம்
கடிந்து வாழ்வார்;
எள்ளவில்லை என்கின்றான் ராமசுரத் குமார்என்னும்
இயற்பேர் ஞானி. 281

சொல்லாலே சொலப்போகாப் பெரும்புகழான்
சூழ்ந்து போற்றி [அன்பர்கள்
நல்லாற்றின் வணங்குகின்ற எம்பெருமான் அருணையெனும்
நகரந் தன்னில்
எல்லாண்ட சொற்சொல்லும் பெரியோனும் ராமசுரத்
குமார எம்மான்,
பல்லாண்டு வாழ்கவெனச் சொல்வார்கள் இந்நிலத்தில்
பயனைச் சேர்வார். 282

காந்துகின்ற உளத்தினிலே ஆசையெனும் பேய்நிமிர்ந்து
கல்ந்து கூடும்;
சாந்தமெனும் ஒருமகனைத் துரத்திவிடும்; ஆதலினால்
சற்றே ஓர்ந்து
காந்தமெனும் ராமசுரத் குமாரன்றன் திருவடியைக்
கையில் பற்றி
ஏந்துகின்றார் நலம்பெறுவார்; இதனைநீர் ஓர்ந்துகொண்
மின் இன்பம் காண்பீர். 283

ஒவ்வொருநா ளாப்போக்கி உளேகின்ற மனத்துக்கே
ஊட்டம் தந்து
செவ்வையிலா உரையெல்லாம் வீணுகச் சொல்கின்ற
செயிரை நீக்கி
எவ்வமுறும் பகலெனினும் இரவெனினும் அவன்நாமம்
ஏத்தி வாழ்வீர்;
கவ்வையிலா நெறியிதென்பான், ராமசுரத் குமாரன்
கனவான் அம்மா. [எனும்

மொழிக்குமொழி தித்திக்கும் தேவாரம் ஆதியன
முயன்று நாடி
அழிக்குமன எண்ணமெலாம் மிகப்போக்கி அவற்றுள்ளே
ஆழ்ந்து நின்ருல்
சுழிக்கும்நலன்; இன்பமெல்லாம் கண்டிடலாம் என்
சொல்கின் ருனல்; [றென்றே
வழிக்குறவ ஞகின்ற ராமசுரத் குமார்என்னும்
மாத வத்தோன். 285

சிலையெடுத்துக் கும்பிட்டுச் சாமியையே மிகப்போற்றிச்
சிலநே ரத்தில்
நிலையுடைய மனமின்றி அதைமறந்தே உலகியலில்
நித்தம் ஆழ்ந்தால்
பலகலையும் பயன்படா; ஆதலினல் நெஞ்சகத்தே
பரிந்து சேரும்
அலைவறும்நல் மோனத்தே யிருப்பீர்கள் என்கின்ருன்
அமல ஞானி. 286

உயிர்போகும் தருணத்தே ஒன்றனேயே நினைத்தக்கால்
ஒன்று சாரும்;
பயிர்செழிக்க வித்திட்டே எருவிட்டே பாங்குபெறப்
பண்ணல் வேண்டும்;

செயல்நீக்கி உள்ளத்தே இறைவன்தன் திருவடியைத்
தியானம் செய்தால்
மயல்போகும் என்கின்றான் ராமசுரத் குமாரன்எனும்
மாத வத்தோன். 287

நாள்கழித்துக் காலமெல்லாம் வீணுக்கிப் பாசத்தில்
நன்கு தோய்ந்து
பீள்கழிக்கா நெற்கதிர்போல் காலமெல்லாம் அவமே
பிறழ்ந்து நிற்பீர், [போய்ப்
வாள்கழித்த உறையெனவே உடம்பிதுதான் பிண
மாயும் காலை [மென்ன
ஆளவர் தாம்வருவார் என்கின்றான்
ராமசுரத் குமார ஞானி. 288

வேதத்தை ஓதலிலோம், சாத்திரங்கள் நாமறியோம்,
வித்தை கல்லோம்,
ஏதப்பட் டேம்என்றே நினைந்துமனம் ஏங்கிநிற்றல்
என்னே? என்றும்
ஓதப்பட் டிருக்கின்ற உபசாந்த நிலைதன்னை
உரைசெய் கின்ற
நாதன்அவன் ராமசுரத் குமார்என்னும் ஞானியிடம்
நண்ணு வீரே. 289

பால்கொடுப்பான்; பழம்கொடுப்பான்; பணத்தினையும்
பரிந்து வந்தார் [நனிகொடுப்பான்;
தால்சுவைக்க நறும்பழங்கள் தமையீந்து நலம்செய்வான்;
தக்கோர் போற்றும்
சால்புடையான்; திருவண்ணா மலைதன்னி லிருக்கின்றான்;
சகலர் போற்றும்
ஏல்புடையான், ராமசுரத் குமாரன்எனும் பெயருடைய
இணையில் ஞானி. 290

துன்பங்கள் வந்தக்கால் அரற்றுகின்றீர், இன்பம் [வந்தால்
சுகிக்கின் றீரால்;
இன்பமுற இறைவன்தன் திருவடியைச் சற்றேனும்
எண்ணி மிக்க
அன்புற்றே அவன்உருவம் எந்நாளும் நினைக்கின்ற
ஆற்றல் இல்லீர்,
என்புக்கால் என்னென்பீர் என்கின்றான் ராமசுரத்
குமார ஏந்தல். 291

கவலையெலாம் போவதற்கோர் வழியுண்டு; பரம்பொருள் [தன்
காலைப் பற்றி
அவலமெல்லாம் அறமறந்தே மெய்ஞ்ஞானப் பூமிக்குள்
அடைந்து விட்டால்
சவலமெல்லாம் அடியோடே தாம்போகும் என்கின்றான்,
சார்வோர் தங்கள்
அவலமதை நீக்குகின்றான், ராமசுரத் குமாரன்எனும்
அரிய யோகி. 292

சொல்லாடச் சொல்லாடப் புகழுக்கோர் எல்லையிலாச்
சொருபம் கொண்டான்;
மல்லாட வாய்க்கின்ற வார்த்தையினால் பயன்இல்லை;
வருந்தல் வேண்டாம்;
அல்லாடும் ஒளிபோல நெஞ்சகத்தே பரம்பொருளை
அணைந்து விட்டால்
நல்லாராம் எனச்சொல்வான், ராமசுரத் குமாரன்எனும்
ஞான யோகி. 293

பணத்தாலே பலத்தாலே கல்வியினால் ஆவதில்லை;
பாங்கு பெற்ற
குணத்தாலே நலம் பெறலாம்; இறைவனடி எண்ணுகின்ற
கொள்கை மேவின்

எணத்தாலே அலையாமல் மனம்ஒன்றி நிற்கின்ற
இயல்பு சேரும்;
திணத்தாலே இதுவேண்டும், என்கின்றான் ராமசுரத்
குமாரச் செம்மல். 294

உடையாலே அணியாலே உணவினால் தேகத்தை
ஓம்பி நிற்பீர்;
கடையான ஜன்மத்தை மாய்ப்பதற்கே வழியறியீர்;
கதிக்கும் செந்தாள்
உடையானும் எம்பெருமான் நினைவின்றி நாள்கழித்தால்
உய்தி உண்டோ?
நடைஇஃதோ எனச்சொல்வான், ராமசுரத் குமாரன்
நல்ல ஞானி. [எனும்

சேலியலும் கண்ணினார் போகத்தைப் பெரிதென்றே
சிந்தித் தோர்ந்து
மாலியலும் வாழ்க்கையிலே வாணாளை வீணாக்கி
மலைத்து நின்றீர்,
தாலியலும் புகழார்ந்த திருவண்ணா மலைசென்று
தகைசேர் ஞானி
காலியல்போ டிறைஞ்சிநின்றால் ராமசுரத் குமார்தன்னைக்
காண்பீர் அங்கே. 296

பள்ளத்தில் பாய்கின்ற பெருநீர்போல் அன்புடைய
பாங்கார் நெஞ்சில்
மெள்ளத்தான் இறைவன்அருள் சேரும்என நிதந்தோறும்
விளம்பு கின்றான்;
கள்ளத்தார் அறியாத தேசுடையான்; மாசுடையை
அணிந்தும் தூய
உள்ளத்தான், உலையாத பெருஞ்சீரான் ராமசுரத்
குமாரன், ஓர்மின். 297

கட்டோடே கனத்தோடே சுற்றத்தோ டேஇருந்து
காசி னிக்கண்
விட்டோடும் வாழ்க்கையினைப் பெரிதெனவே மதிக்கின்ற
விரகு பெற்றீர்,
திட்டோடே புகழோடே சேராத நிலைபெற்றுச்
சீர்த்த ஞானம்
மட்டோடே அடைமினென அறைகின்றான், ராமசுரத்
குமார வள்ளல். 298

எப்பொருள்தான் போனாலும் மீண்டதனைப் பெற்றிட
எனினும் காலம் [லாம்
தப்பிவிட்டால் ஒருநிமிடம் தான்வருமோ மீண்டிதனைக்
கருதிப் பார்மின்;
எப்பொழுதும் பரம்பொருளின் நினைவுண்டேல் அப்
ஏற்ற காலம்; [பொழுதே
தப்பில்இதை அறிமினெனச் சொல்கின்றான், ராமசுரத்
குமார சாமி. 299

நான்மறைகள் பலகற்றும் சாத்திரங்கள் நனிஉணர்ந்தும்
நல்உள் ளத்தில்
ஈனமறச் சாந்தமிலா திருந்திட்டால் என்பயனும்?
என்றும் ஈசன்
மேன்மையுறுந் திருவடியை எண்ணுவதே நற்பயனும்;
விரைமின் என்றே
தான்மொழிவான் நல்லவுரை, திருவருணை ராமசுரத்
குமார சாமி. 300

காதலுடன் திருவடியை அணுகிநின்று வணங்கியே
கண்ணீர் சிந்தி
மோதலில்லா உள்ளத்தில் அவனடியே எண்ணுகின்ற
முயற்சி உள்ளார்

சாதலதும் பிறப்பதுவும் நீங்குகின்ற தனிநிலையைச்
சார்வார் என்பான்,
ஓதறிய புகழ்ஞானி ராமசுரத் குமார்எனும்பேர்
உற்ற யோகி. 301

தொண்டுசெய்வார் தம்மோடே கூடிநின்றே இறைவன்
தூய நாமம் [றன்
மீண்டு செய்யா வாறுமிக நினைக்கின்றார் மேலோர்கள்;
மெலிவு நீங்கி
மண்டுமனம் அறுத்தவர்க்கே அவன்உருவம் காணலாம்;
வாரீர் என்று
அன்புமுறை சொல்லுகின்றான் ராமசுரத் குமார்என்னும்
அண்ணல் அம்மா! 302

கரணங்கள் ஒடுங்கிஐந்து பொறிகளுமே மிகஒடுங்கிக்
கதித்த ஞானத்
திரள்பெற்றே அதில்ஓங்கி நிற்கின்றார் சாந்தநிலை
சேர்வார் என்றே
கருணையுற்றுச் சொல்கின்றான், திருஅருணை மாநகரில்
கலந்த யோகி,
தெருளுற்ற ராமசுரத் குமார்எனும்பேர் கொள்கின்ற
தேவன் அம்மா! 303

திருவண்ணா மலைவாழி! அருணைநகர் சிறக்கின்ற
சிவனார் வாழி!
கருவண்ணா வகைகாட்டும் ராமசுரத் குமார்என்னும்
கனவான் வாழி!
வெருவண்ணா வகையினிலே பெரியோர்கள் சொல்கின்ற
வேதம் வாழி!
கருணைமுகப் பெருமான்தன் பேரருளே நினைந்திருப்பார்
கணங்கள் வாழி! 304

கல்லொத்த மனமுருகிக் கண்ணீர்தான் வழியநிற்கும்
காத லோர்க்கே
எல்லொத்த சூரியன்போல் தன்ஒளியைக் காட்டுகின்றுன்
எம்மான்; வேந்தர்
மல்லொத்த திருத்தோளின் வலிமையினைச் சேர்ப்பதனுல்
வாழ்வொன் றுண்டோ?
வில்லொத்த அம்பெனவே ராமசுரத் குமாரன்பால்
விரைந்து வம்மின். 305

தினந்தோறும் உணவினையே மிகத்தேடி அதைஉண்டு
செரிக்கப் பின்னும்
அனந்தேடி உழல்கின்ற வாழ்க்கையிலே என்கண்டோம்?
ஆன்மா என்னும்
தனந்தேம்பி வீணுகா வண்ணமொரு வழிகாணல்
தக்க தன்றே?
இனந்தேரு திருப்பதுநன் றேஎன்பான் ராமசுரத்
குமாரன் என்போன். 306

மூன்றென்னும் தாபத்தால் வாழ்வினிலே அலமந்து
மூளுந் துன்பத்
தூன்றிமிக நலிவடைதல் போக்குதற்கோர் வழியுண்டால்;
உண்மை யீதென்
றுன்றவர்கள் சொலும்நெறியைப் பற்றிமன மாசறுக்கும்
உபாயம் கண்டால்
சான்றெவரும் இலாதநெறி உறும்என்பான்
ராமசுரத் குமார சாமி. 307

பொய்யுடம்பை மெய்யென்று புகன்றிதனை வளர்ப்பதற்
புணரும் போகம் [கும்
எய்தியறி வழிவதற்கும் இப்பிறவி வந்ததுவோ?
ஈசன் பாதம்

றைதிறத்தால் நினைந்தன்பு செய்தக்கால் மனம்நிற்கும்
நன்மை சாரும்;
உயதிறன்ஈ தென்கின்றான், ராமசுரத் குமாரனெனும்
உயர்ந்த யோகி. 308

மூவாசை யினிற்சுழன்று நினைத்தபடி எய்தாமல்
முனகி நாளும்
ஆவாஎன் றிளைப்புறுவ தாகின்ற வாழ்வினிலே
அமைதி உண்டோ?
சாவாமற் பிறக்காமல் இருக்கின்ற நெறிதன்னைச்
சார்தல் வேண்டும்;
பூவாழ்வின் பயனிதுவே என்கின்றான், ராமசுரத்
குமார போதன். 309

கற்கண்டை வழங்கிடுவான், பாலருந்தத் தந்திடுவான்;
கனியும் ஈவான்;
சொற்கண்டாப் புகழுடையான், இராமன்பேர் சொலி
துறவி; யாரும் [நடஞ்செய்
இற்கண்ட குழவிபோல் நினைக்கும்வணம் சிரித்திடுவான்;
இவனைப் போல
அற்கண்டா ஒளிமுகத்தார் யாருள்ளார்? ராமசுரத்
குமாரன் அன்றோ? 310

இலையினிலே பூவினிலே காயினிலே கனியினிலே
இறைவன் சோதி
நிலையதனைக் கண்டிந்தப் புவியெல்லாம் கோயிலென
நினைக்கும் எண்ணம்
அலைவதிலா உள்ளத்தே வந்திடுமென் றுரைக்கின்றான்,
அருணை தன்னில்
தலையிலொரு முண்டாசை அணிராம சுரத்குமார்
சாமி அம்மா! 311

மூச்சடக்கி மிகநிறுத்தி விழிபிதுங்கித் தடுமாறி
மூண்ட யோகர்
வாச்சதங்கள் வாளுளை வீணுக்கித் துன்புற்ருர்;
மனத்தி னுள்ளே
பேச்சடக்கி அவனுருவைத் தியானித்து மோனநிலை
பெறுவீ ராயின்
பூச்சடலம் கோயிலாம் என்பவன்ராம் சுரத்குமார்
பூபன் அன்ருே? 312

மூன்றுகுணங் களிலுயர்ந்த சத்துவத்தைப் பெருக்கியபின்
மூளும் அஃதும்
ஆன்றடங்க நிர்க்குணமாம் நிலையினிலே பிரமத்தோ
டிணைந்து நின்ருல்
பூன்றசுகம் கிடைக்குமெனப் புகல்கின்ருன், திருவருளை
பொலிய வாழும்
சான்றவனும் ராமசுரத் குமாரனெனும் பேருடைய
சாமி அன்ருே? 313

எத்தனைதான் உண்டாலும் அவைமலமாம்; அணிகளையே
ஏற்ருல் அன்ன
மெத்தமங்கிப் போய்விடுமால்; ஆடையெலாம் கிழிந்து
வேதம் ஓதும் [போம்;
அத்தனையே உளத்தடங்கிப் புதையலென அமைந்துவிடும்
அன்பொன் றுண்டேல்
எத்தனையும் துன்பமிலை, என்கின்ருன் ராமசுரத்
குமார ஏந்தல். 314

நூல்பலவும் கற்ருலும் பலபேச்சைக் கேட்டாலும்
நுட்பம் காணுர்
சால்பிலர், ஆதலினுலே எந்நூலும் முடிவினிலே
சாற்று கின்ற

ஏல்புடைய உண்மையொன்றென் றேயறிந்து சார்ந்தநிலை
இயைந்து போற்றின்
மால்பரவும் பிறவியிலை என்கின்றான் ராமசுரத்
குமார வள்ளலே 315

நீரிருக்கத் தாகத்தால் அலைவாருண் டோ? நிதியம்
நிறைந்திருக்க
ஏரிருக்கும் வகையின்றி வறுமையினில் உழல்பவர்கள்
இங்கே உண்டோ?
பாரிருக்கும் வாழ்வினிலே உடம்பெடுத்தோம்; கோயி
பண்ணி உள்ளே [லெனப்
சூரறுக்கும் இறைவனையே எண்ணுமின்என் பான்ராம
சுரத் குமாரே. 316

கண்டதனை மெய்யென்றும் கேட்டதனை உண்மையென்
கருதி நாளும் [றும்
கொண்டுமிக மாழாந்து வாணாளை வீணாகக்
கடத்த லாமோ?
மிண்டுடைய மனமடக்கி இறைவனுருத் தியானிக்கின்
மேன்மை யாகும்;
கண்டுகொளும் என்கின்றான், ராமசுரத் குமாரென்னும்
கவின்சேர் யோகி. 317

தாடியுண்டு, மீசையுண்டு; தலைப்பாகை தான்உண்டு;
சார்அழுக்கார்
ஆடையுண்டு; மற்றிவற்றைக் கண்டுபுறக்கணிக்காமல்
அன்பிற் சென்று
நாடிடினே ராமசுரத் குமாரன்றன் நிலையறிவோம்,
நாளும் ராமன்
ஈடிலுயர் நாமஞ்சொல் அவனடியை இறைஞ்சியவர்
ஏற்றம் கொள்வார். 318

குழந்தைபோல் மெய்குலுங்கச் சிரிக்கின்றான்; கைபிடித்
கூர்ந்து நோக்கி [துக்
எழுந்திரா வகையிருத்தித் தலையசைத்துக் கையசைத்தே
இனிமை ஈவான்,
தொழுந்தகைய முனிவர்பிரான், ராமசுரத் குமாரென்
தூய யோகி [னும்
செழுந்தலமாம் திருவண்ணா மலைதன்னில் இருக்கின்றான்;
சேர வாரீர். 319

காவியுடை தரிக்ககிலான், வெள்ளுடையே உடுக்கின்றான்;
கையைக் காட்டி
மேவினவர் தமக்கபயம் ஈகின்றான், கண்மூடி
விரல்நடுங்க
ஓவியம்போல் சிலசமயம் இருக்கின்றான், ராமசுரத்
குமார யோகி;
பூவடியை வணங்கினவர் கவலைநனி போக்கியன்பிற்
பொலிவார் அம்மா. 320

காகிதமோர் பாலிருக்கும்; வாடியபூ அங்கிருக்கும்;
கழுத்தில் மாலை,
பாகைதலை யினில்இருக்கும்; சிலசமயம் கண்மூடிப்
படிந்து நிற்பான்;
ஏகமுறு பரம்பொருளை இதயத்தே சிறைப்படுத்தி
இன்பம் காண்பான்;
தாகமுறு வோரறிவார் ராமசுரத் குமார்பெருமை
தன்னை அம்மா. 321

கையினிலே விசிறிகொண்டு வீசிடுவான்; சிரட்டையெனும்
கலத்திற் பாலை
நெய்யதனைப் பிறவாகும் பானத்தைப் பருகிடுவான்;
நித்த நித்தம்

ஐயஇவன் பிச்சைக்கா ரன்காண்மின் எனப்பேசி
அடக்கம் காட்டும்
மெய்யனிவன், ராமசுரத் குமாரென்னும் பெயருடைய
மேலோன் கண்டீர். 322

சிலநேரம் சிகரெட்டைக் குடித்திடுவான்; குழந்தை
சிரிப்பான்; சில்லோர் [யெனச்
பலநேரம் காத்திருந்தும் காட்சிதரா தேயிருப்பான்;
பக்கல் சேர்ந்தால்
கலகலென நகைத்தன்பு காட்டிடுவான்; எலாம்தந்தை
கருணை என்றே
சொலும்ஐயன், ராமசுரத் குமார்என்னும் பேருடைய
தூய யோகி. 323

பாயிருக்கும், குப்பையெலாம் பரந்திருக்கும்; ஒருநாய்
பாபா என்ன [சாய்
மேயிருக்கும்; பலர்வருவார்; சிலநேரம் மொழியொன்றும்
விளம்பான், சும்மா
வேயிருப்பான்; சிலநேரம் ஆங்கிலத்தில் பேசுவான்;
இன்னும் சற்றே.
பேயிருக்கும் குணமுண்டு, ராமசுரத் குமாரன்றன்
பெற்றி யீதே. 324

பிச்சைக்கா ரன்காணீர் இவனெனவே பேசுகின்றான்;
பெரிய செல்வன்;
இச்சைக்கா எதனையும் சேர்த்துவையான்; என்றாலும்
ஏகும் அன்பர்
கொச்சைப்பேச் சைக்கேட்டுக் குதுகலிப்பார்; பொருள்
குளிர்வார் நெஞ்சம்; [வழங்கிக்
மெச்சற்கோ அளவில்லை; ராமசுரத் குமார்என்பான்
மேலோன் காணீர். 325

(வேறு)

ஆசை அகற்றி மனம்ஒடுக்கி
ஐயன் பாதம் உள்ளடக்கித்
தேசு திகழ இருக்கின்ற
திறத்தை அறிந்து மோனநிலை
ஏசல் அறவே நிற்கின்ற
இயல்பை உணர்ந்தார் எவர்அவரே
ஆசில் பெரியோர் எனச்சொல்லும்
அவனே ராம சுரத்குமார். 326

பாச பந்தக் காட்டினிலே
பாவம் பலவும் புரிந்துழன்று
மாசு சேர மனமயங்கி
மாழாந் தின்னும் பிறப்பதற்கே
ஆசை கொண்டால் நலம்இன்றாம்;
ஐந்தும் அடக்கும் நிலைகாண்பார்
ஆசில் பெரியோர் எனச்சொல்லும்
அவனே ராம சுரத்குமார். 327

கல்லும் இரும்பும் ஒத்தமனம்
கரையச் செய்து கடவுள்பால்
அல்லும் பகலும் அதைநிறுத்தி
ஆசை பிறவுற் றேகாமல்
சொல்லும் பொருளும் அவனுக்கே
துணிந்து சமர்ப்ப ணம்செய்வார்
அல்லல் அறுவார் எனச்சொல்லும்
அவனே ராம சுரத்குமார். 328

எண்ணுன் காகும் பற்காட்டி
இரந்து திரிந்து தேகத்தைக்
கண்ணாய் மதித்து வளர்க்கின்றார்,
கடைசிக் காலத் தென்னவார்?

பண்ணால் உருகி இறைவனையே
  பரவிப் புகழ்மின் என்றுசொல்லி
அண்ணா மலையில் இருக்கின்றான்,
  அவனே ராம சுரத்குமார் 329

துச்ச மான எண்ணமெல்லாம்
  துன்னித் துன்னி மனம்அழுக்கில்
கொச்சை யாகி வாழ்கின்ற
  கொள்கை கொண்டார் உய்வாரோ?
இச்சை அறுத்தே இறைவன்றன்
  இணைத்தாள் மறவா தேவழுத்தின்
அச்சம் அறலாம் எனச்சொல்வான்
  அவனே ராம சுரத்குமார். 330

என்பே விறகாய் இறைச்சியறுத்
  திடினும் தீயி னிடைநின்று
வன்பே பெற்றுத் தவம்செய்தும்
  மழையில் நனைந்து நோன்புசெய்தும்
என்பே றுண்டாம்? இறைவனடி
  எண்ணி அவனே துணையெனவே
அன்பே செய்தல் நலம்என்னும்
  அவனே ராம சுரத்குமார். 331

கள்ளம் போக்கி மெய்ப்பொருட்பால்
  காதல் பூண்டு நாள்தோறும்
உள்ளம் அவனை நினைந்திருப்பார்
  உறுதி யான நிலைபெறுவார்;
வெள்ளம் வந்தும் அணைபோடும்
  விரகை யறியா தார்போல
உள்ள பேர்கள் மிகத்தாழ்வார்
  உணர்கென் பான்ராம் சுரத்குமார். 332

பந்த பாசச் சூழலிலே
பாரிற் பிறந்தோம் எனவெண்ணி
நைந்து சாம்பி அழல்வேண்டா;
நல்லோர் பாலே அணுகியவர்
சிந்தை ஒன்ற வகைசொல்லும்
சீர்த்தி யறிந்து சாதனையை
முந்திச் செய்வீர் என்கின்றான்
முனிவன் ராம சுரத்குமார். 333

நாளைச் செய்வோம் என்றுநீர்
நாளைப் போக்கல் நலமன்றாம்;
வேளை எதுவும் நல்வேளை
விமலன் றன்னை நினைப்பதற்கே;
நீளும் பாசம் கொண்டுவரும்
நீசக் காலன் வருகின்ற
வேளை யாவர் அறிவார்கள்?
விரைகென் பான்ராம் சுரத்குமார். 334

கல்லே யெனினும் எறும்பூரத்
தேயும் காண்மின்; அதுபோல
அல்லே பெரிதும் உறுகின்ற
அவல மனத்தில் மெல்லமெல்ல
வல்லான் இறைவன் திருப்பதத்தை
வைத்தே தியானிக் கும்வழியில்
செல்வீர்; ஒருநாள் நலம்வருமால்;
தேர்கென் பான்ராம் சுரத்குமார். 335

ஆசை வைத்த பொருள்நிரம்பின்
அதனோ டாசை போவதில்லை;
பாசம் இறுகி நமையடர்த்துப்
பலவாம் பிறப்பில் உழலவைக்கும்;

தேசன் சிவன்றன் திருவடியைத்
திரும்பத் திரும்பத் தியானித்தால்
நாசம் இல்லை எனச்சொல்லி
நகைப்பான் ராம சுரத்குமார். 336

வாடி உள்ளம் மிகக்குலைந்து
வாழும் வகையொன் றறியாமல்
தேடி யுழன்று புவியெல்லாம்
திரிந்தும் பெறும்பே றென்றுண்டோ?
நாடி இறைவன் திருத்தாளை
நாளும் போற்றிப் பத்தியினால்
ஆடிப் பாடல் நலம்என்பான்
அவனே ராம சுரத்குமார். 337

வஞ்சம் இல்லா மனங்கொண்டார்
மாட்டே அணுகி இணங்கியடி
தஞ்சம் என்றே புகுந்துயர்ந்த
சாதனைகள் செய்வதனால்
துஞ்சும் பொழுதும் மனங்கலங்காத்
துணிவைப் பெறலாம்; சிறிதேனும்
அஞ்சல் இல்லை எனஇயம்பும்
அவனே ராம சுரத்குமார். 338

தூற்றி னாலும் புகழ்ந்திடினும்
சோர்வோ களிப்போ இல்லாமல்
ஊற்றம் மிக்க நிலையினிலே
உறுவான்; குழந்தை எனஇருப்பான்;
தோற்றம் குடுகு டுப்பாண்டி
போலத் தோன்றும் உடையுடையான்;
ஆற்றல் மிக்கா னாகின்ற
அவனே ராம சுரத்குமார். 339

வருணம் பாரான்; குலம்பாரான்;
வல்ல வித்தை தனைப்பாரான்;
கருணை யோடே யார்வரினும்
களித்துச் சிரித்துக் குழந்தையென
மருளும் வண்ணம் இருந்திடுவான்;
மனத்தை யடக்கும் நெறிகற்ருன்;
அருணைத் தலத்தில் இருக்கின்ற
அவனே ராம சுரத்குமார். 340

வீண வத்தைப் பட்டுலகில்
வெறிதே போகம் துய்த்துப்பின்
காணும் உறுதி யாம்நிலையைக்
கருதா தேவாழ்ந் தாற்பயனென்?
சாணுக் காக வாழ்நாளைச்
சாவி யாக்கல் போக்கிஉறும்
ஆண வத்தை அறும்என்பான்
அவனே ராம சுரத்குமார். 341

கண்டு போல மொழிசொல்வான்;
கண்டும் வழங்கி நலம்செய்வான்;
மிண்டு செய்யும் மனமடக்கும்
விரகை யறிவான்; மோனநிலை
அண்டி நிற்பான்; ஆனந்தம்
ஆகும் வழியைச் சொல்லிஎன்றும்
அண்டு வாருக் கறிவருளும்
அவனே ராம சுரத்குமார். 342

மிக்க ஆசை படைத்துலகில்
வீணே உழன்று பலபேசித்
தொக்க துயரக் கடல்மூழ்கித்
துரிசு மிகவே வாழாமல்

தக்க வர்பால் அணுகிஅவர்
சாற்றும் உரையைக் கேட்டொழுகென்
றக்க மணிபூண் டுரைக்கின்றான்
அவனே ராம சுரத்குமார். 343

தாடி வளர்ப்பான்; முடிவளர்ப்பான்;
தன்னை அண்டி னோர்க்கின்சொல்
நாடி உரைப்பான்; குழந்தைபோல்
நகுவான்; பரம சாந்தனெனக்
கூடி உணர்வார் தமக்கன்றிக்
குணிக்க லாகா இயல்புடையான்,
ஆடிப் பாடிக் குதுகலிக்கும்
அவனே ராம சுரத்குமார். 344

வேண்டும் பொருளொன் றில்லாதான்;
மேவும் அவர்கள் தருவஎலாம்
ஈண்டு பவர்க்கே வழங்கிடுவான்;
என்றும் குழந்தை போற்சிரிப்பான்;
தாண்ட வம்செய் தேராம
நாமந் தன்னைச் சாற்றிடுவான்;
ஆண்ட வன்பேர் சொல்களனும்
அவனே ராம சுரத்குமார். 345

ஓங்கா ரத்தின் உட்பொருளை
உபநி டஞ்சொல் தனிப்பொருளைப்
பாங்கார் தரவே மனத்திருத்திப்
பத்தி செய்யின் நலம்உண்டாம்;
தீங்கார் பிறவி யறுப்பதற்கே
தேர்ந்த வழியீ தெனச்சொல்லி
ஆங்கா ரத்தை நீக்கியவன்
அவனே ராம சுரத்குமார். 346

விஞ்சும் புகழும் பழியும்ஒன்ருய்
மேவ எதனு லுங்கலங்கா
நெஞ்சம் உடையான்; குன்றெனவே
நிமிர்ந்து நிற்பான்; யார்வந்து
தஞ்சம் புகினும் அரவணைப்பான்;
தந்தை செயலென் றேசொல்வான்.
அஞ்சு பொறியை யடக்கியவன்,
அவனே ராம சுரத்குமார். 347

பெரிய பெரிய நூலெல்லாம்
பேணிக் கற்றும் மனம்எங்கும்
திரிய வைத்து வாழ்கின்ற
திறத்தால் ஏதும் பயனுண்டோ?
உரிய னெவர்க்கும் இறைவன் அவன்
உருவைத் தியானம் செய்வதனல்
அரிய பயனும் என்கின்ற
அவனே ராம சுரத்குமார். 348

பாவம் பலவும் செய்துதங்கள்
பசியை மட்டும் போக்கிப்பின்
யாவர் எந்தத் துன்புறினும்
இம்மி யளவும் நோக்காதார்
சாவ தற்கும் பிறப்பதற்கும்
தரணி வந்து போகின்ருர்;
ஆவ இதனை அறிகஎனும்
அவனே ராம சுரத்குமார். 349

யோகம் செய்தும் ஆசையரு
உன்மத் தர்போல் இல்லாமல்
போகம் புசிக்கும் போதினிலும்
புகழைச் சேரும் சமயத்தும்

ஏக னவனை மறவாமல்
இருக்கும் நெறியைத் தேர்ந்தென்றும்
ஆகும் அமைதி பெறுகஎன்னும்
அவனே ராம சுரத்குமார். 350

(12–11–1981)

(வேறு)

சீதம் மேவிய தாமரை சேற்றினில்
திகழ்ந்துமே லோங்கிவளர்ந்
தேதம் இன்றியே கடவுளர் முடிமிசை
இருக்கிற வாறதுபோல்
கோதம் மேவிய உலகினில் குப்பையின்
குவியலுக் கிடையினிலே
நாதன் ராமசு ரத்குமார் உள்ளனன்
நவில்அண்ணு மலைக்கண்ணே. 351

பொய்யெ னும்சரீ ரத்தினில் ஆசையைப்
புறப்பட விடுமின்கள்;
மெய்யெ னும்பொருள் இன்னதென் றறிந்ததை
விழைந்துசா தனம்செய்ம்மின்;
கைய தாம்பொருள் இழப்பவர் போலிந்தக்
காலத்தை வீண்செய்யேல்;
ஐயன் நல்லருள் சேருமென் பான்ராம
சுரத்குமா ராம்யோகி. 352

பசியி னல்பதை பதைத்துளோர்க் கப்பசி
பாற்றிடல் பேரறமாம்;
நசையி னலிந்த உலகத்துப் பற்றினை
நழுவச்செய் தல்பொருளாம்;

பசையொ டேயிரா திறையடி உன்னியே
பற்றுதல் பேரின்பம்,
இசையும் இவ்வுண்மை யறிகவென் றிசைப்பவன்
ராம்சுரத் குமார்யோகி. 353

என்று பூமியில் வாழ்வறும் என்பதை
யாருமே அறிந்திலரால்;
அன்று காண்குதும் என்றயர்ந் திருப்பரேல்
அடையுமோ நல்லின்பம்?
இன்று நாம்இறந் தாலும்அப் போதினில்
இறையருள் கூடும்வகை
நன்று செய்குதிர் என்பவன் ராம்சுரத்
குமாரெனும் ஞானியரோ. 354

காக்கை போலவே பலரொடும் உண்டியைக்
காதலிற் பகிர்மின்கள்;
யாக்கை தான்நிலை யாததென் பதனையே
என்றைக்கும் நினைமின்கள்;
பூக்கைக் கொண்டரன் தாளிணை பூசித்துப்
பொற்புடன் வாழுங்கள்;
ஆக்கம் காண்மின்ஈ தென்பவன் ராம்சுரத்
குமாரெனும் அருந்தவத்தோன். 355

வினையி னுல்வந்த உடலத்தில் வந்தவர்
வினைகளை யறுத்திட்டு
நினைவி னுல்இறை பூம்பதம் பற்றியே
நீதியோ டுறவாழின்
கனைகு ரற்கொண்டு காலனுர் வருகையில்
காதரம் இலதாகும்;
இனைய நல்வழி ஏகுமின் என்பவன்
ராம்சுரத் குமார்யோகி. 356

ஆடை ஆபர ணங்கள்வீ டாதிய
 ஆசையோ டேசேர்ப்பீர்,
மாட மாளிகை கட்டுவீர், இவையெலாம்
 வாழ்வறும் காலத்தில்
கூட வந்திடு மோ?செயும் வினைகளே
 கூடவந்திடுங் காண்மின்;
நாட ரும்பொருள் நாடுமின் என்பவன்
 ராம்சுரத் குமார்ஞானி. 357

ஐந்து பூதத்தால் ஆகிய உலகினில்
 ஐம்பொறி யிடைப்பட்டு
நைந்து வாழ்வினைப் போக்குவார் நாளறின்
 நமனுக்கென் சொல்வார்கள்?
சிந்து போலுறும் கருணையன், சேவடி
 சிந்தையில் வைத்தாழ்ந்தே
உந்த பாசங்கள் நீக்குமின் என்பவன்
 ராம்சுரத் குமார்யோகி. 358

காட்டி னிற்சென்று கந்தமூ லங்களைக்
 கடும்பசிக் காஅயின்று
வீட்டிற் செல்வது மிகஅரி தாம்செயல்;
 விளங்குமிவ் வாழ்வினிலே
நாட்ட மோடிறை நினைவறு தேயன்பு
 நண்ணிடின் நலமாகும்;
ஈட்டு மன்புபோல் ஒன்றிலை என்பவன்
 ராம்சுரத் குமார்ஏந்தல். 359

ஆண்டு பற்பல வாழினும் உடலத்தை
 அடைபிணி எய்தாமல்
நீண்ட வாழ்வுறச் செய்யினும் இறுதியில்
 நேருமம் மரணத்தைத்

தாண்ட லாகுமோ? பிறந்தவர் மாய்வது
சரதமென் பதையோர்ந்தே
ஆண்ட வன்பதம் நினைமினென் றறைபவன்
ராம்சுரத் குமார் ஐயன். 360

ஆசை யென்னுமவ் வலையினிற் சிக்கியே
அரும்பொருள் பலஈட்டி
நீச வாழ்வினை நிலையென எண்ணியே
நித்தலும் இருந்திட்டால்
பாசம் வீசிடும் காலனுர் வருகையில்
பணம்வந்து காக்குங்கொல்?
ஈசு ரன்பதம் நினைமினென் றிசைப்பவன்
ராம்சுரத் குமார் எம்மான். 361

தூண்டு சோதிபோல் இறைவனை உள்ளத்தில்
துரிசற வைத்தன்பின்
யாண்டுச் செல்லினும் எத்தொழில் செய்யினும்
இணையடி மறவாமல்
நீண்ட வாழ்வினில் வாழ்பவர் வருமுன்னர்
நீதியிற் காப்பவராம்:
ஈண்டி தையறிந் துய்கஎன் றேசொல்வான்,
ராம்சுரத்குமார் என்போன். 362

பொறிகள் போகின்ற போக்கிலே போம்அவர்
புவியினில் வாழ்வறுங்கால்
குறிகொள் காலனுக் கென்விடை சொல்லுவார்?
குவலய வாழ்வினிலே
நெறியில் நின்றிறை வன்பதம் உன்னியே
நீதமோ டிருப்பாரேல்
செறியும் நன்றெனச் சொல்பவன் அருணையில்
ராம்சுரத் குமார்தேவே. 363

(13—11—1981)

(எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

வான நாடரும் அறியொ ணாப்பொருள்
மறைகள் நான்கினும் உறைத ரும்பொருள்
ஞான மேவிய அன்ப ருக்குநல்
நாட்ட மீந்திடும் ஒருப ரம்பொருள்
ஈன வாழ்வினில் நெஞ்சு நைந்துதன்
இருப தத்தினை நினைப வர்க்கருள்
மேன லப்பொருள் இன்ன தென்றறி
வித்த கன்திரு ராம்சு ரத்குமார். 364

பாசம் நீங்கியே உண்மை ஞானமாம்
பரப்பி லேஉளம் நாட்டு மன்பர்கள்
நேசம் வைத்திடும் அருணை மேவிய
நீதன், மெய்த்துற வதனைப் பூண்டவன்,
ஆசை யால்வரும் மாந்த ருக்கருள்
அளித்து வாழ்பவன்; சாந்த மூர்த்தியாம்,
தேசு பெற்றவன், செய்ய நெஞ்சினன்,
செம்மல் யோகிராம் சுரத்கு மாரனே. 365

மார னம்பினை மழுங்க வைத்தவன்;
மனமெ னும்பொலாப் பேய டக்கினோன்;
ஈர மாமருள் தோய்ந்த நெஞ்சினன்;
யாவ ரும்பணிந் தேத்தத் தான்ஒரு
சீரை சுற்றிய பிச்சைக் காரனைச்
செப்பு கின்றவன்; அருணை மாநகர்
ஆரு மன்பொடு சார நின்றவன்,
அடலு டைத்திரு ராம்சுரத் குமார். 366

தண்மை மேவிய பார்வை கொண்டவன்,
தாடி மீசைகள் வளர நின்றவன்,
கண்ணின் முன்வரும் அன்பர் கட்கெலாம்
கருணை யோடுநல் லுரைகள் சொல்பவன்,

எண்ணி எண்ணியே இராமன் நாமத்தை
இயம்பும் தன்மையான்; யோக சித்திபெற்
றண்ணு கின்றவன் அருணை மாநகர்
அவிரும் ஞானியாம் ராம்சு ரத்குமார். 367

மங்கை மார்களை அன்னை யாகவே
மனத்திற் கொண்டவன்; ஆசை அற்றவன்;
துங்க மார்தரு குழந்தை போலவே
தோன்றும் நன்னகை குலுங்க நிற்பவன்;
மங்க லந்தரும் ராம நாமத்தை
மனத்தி லென்றுமே நினைத்தி ருப்பவன்;
சங்க ரன்திருக் கோயில் மேவிய
தலஅண் ணுமலை ராம்சுரத் குமார். 368

மாயை என்பதை மறியப் பார்த்தவன்;
மனத்தி லேஎழும்ஆசை என்பதோர்
பேயை வீட்டியே இன்பம் மேவினன்;
பிச்சைக் காரனென் றேத னைச்சொல்வான்;
ஆயைப் போலவே அன்பு செய்பவன்
அப்ப னைப்போல அருள்கொ ழிப்பவன்
சேயைப் போலவே சிரித்து நிற்பவன்
சீரண் ணுமலை ராம்சு ரத்குமார். 369

ஆடை தூயதாய் இல்லை ஆயினும்
அகம்நல் தூயதாய் அமைய நிற்பவன்,
ஆடும் செய்கையைப் பன்னுள் மறப்பினும்
அவன்றன் பால்மணம் வீசு கின்றதால்;
கூடும் அன்பர்கள் துன்பம் போக்கவே
கூறும் வாசகம் உரைத்து வப்பவன்;
நாடு நன்கறி திருவண் ணுமலை
நண்ணும் ஞானியாம் ராம்சு ரத்குமார். 370

செல்வ மெத்தனை சேர்த்தும் பயனில்லை;
சீவன் போய்விடும் அந்த வேளையில்
வெல்லும் காலனை மேவச் செய்கலா
விரகு பெற்றவர் உண்மைச் செல்வர்கள்;
கல்லென் நெஞ்சத்தை உருக வைத்திறை
காலைப் பற்றுமின் என்று சொல்பவன்
அல்லல் யாவையும் நீக்கும் அருளையில்
அவிரும் யோகியாம் ராம்சு ரத்குமார். 371

வீரத் தால்பகை வோரை வெல்பவர்
வீர மோர்பெரு வீர மாகுமோ?
பாரத் தேகத்தி னின்றும் உயிரினைப்
பற்றிப் போகவே காலன் வந்திடின்
தீரத் தோடவன் முன்னர் நின்றிங்குச்
செல்லா துன்தொழில் என்று செப்புவார்
வீரர்க் குட்பெரும் வீர ராம்என்பான்
மேன்மை சேர்தவன் ராம்சு ரத்குமார். 372

அஞ்சி அஞ்சியே நாள்க ழிப்பவர்
அடரும் காலன்முன் என்ன செய்குவார்?
நெஞ்சி லென்றுமே ஈசன் நற்பதம்
நிறுத்தி மற்றவை சேர்க லாதுறின்
அஞ்ச வேண்டிய தில்லை யாம்;அங்ஙன்
அடல்பெற் றோர்களே ஞானி யாவரே;
விஞ்சு மிந்தநல் உண்மை ஓர்ந்துநீர்
விளங்கு மென்பவன் ராம் சுரத்குமார். 373

சமயம் பற்பல உள்ள ஆயினும்
சார்ந்தொன் றைப்பற்றிச் சாத கம்செயின்
அமையும் சாந்திநன் னிலத்து லாவலாம்;
அன்பைக் கொண்டுபந் தத்தை நீக்கலாம்;

சுமையென் றிந்தப்பொய்த் தேகத் தைஎண்ணித்
தூய தாகிய ஞானஉ டலத்தைக்
கமையி னேடுபெற் றூர்பவர் இன்பத்தைச்
காண்கு வாரென்பான் ராமசு ரத்குமார். 374
(13–11–1981)

(எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

ஆசை அற்றவன், மோகம் அற்றவன்,
அன்பி லேகுழைத் தினியசொல்
பேசும் வித்தகன், குழந்தை போல்பவன்,
பேணு வார்தமக் கினியவன்,
தூசு நீங்கினன், துரியம் மேவினன்,
சுகசொ ரூபத்தை உணர்ந்தவன்,
ஏசி னர்களைப் பரவு வார்தமை
ஏற்ப வன்ராம சுரத்குமார். 375

எந்த நேரத்தும் இராமன் நாமமே
இதயம் வைப்பவன்; உலகினில்
பந்த பாசங்கள் முற்றும் அற்றவன்,
பாட்டி னல்உளம் குளிருவான்,
கந்தை யாயினும் வெள்ளை யாயினும்
கனிவி லேஉடுத் திருப்பவன்,
சிந்தை யொன்றிய செய்கை யுள்ளவன்
சித்தன் ராம சுரத்குமார். 376

சீவர் யாவர்க்கும் அன்பு செய்பவன்;
சிறியன் யானெனச் சொல்பவன்;
ஆவ லோடுவந் திறைஞ்சு வார்களுக்
கமுத நன்மொழி பேசுவான்;

பாவ காரிகள் வந்தி றைஞ்சினுல்
பரிவி லன்புசெய் திருப்பவன்,
யாவ ராயினும் குளிர நோக்குவான்;
இலகும் ராம சுரத்குமார். 377

தவர்கள் நாடுறும் அருணை மாநகர்
தங்கி வாழ்பவன்; சிரிப்பினுல்
எவர்க ளாயினும் மயங்க வைப்பவன்;
எண்ணம் ராமன்பால் நண்ணுவான்;
கவரும் ஐம்பொறிக் கட்ட றுத்தவன்;
காமம் போக்கிய வீரனும்;
உவமை யொன்றிலாப் பொருளை நாடுவான்,
உயர்ந்த ராம சுரத்குமார். 378

கண்ணி லேஒளி பெற்ற வன்,சொலும்
கடின வார்த்தைஇல் லாதவன்;
எண்ணம் யாவையும் இராமன் பாலுற
என்றும் சாந்தத்தைத் துய்ப்பவன்;
மண்ணி லாததன் மேனி தூய்மையாய்
வாய்க்க நிற்பவன், அருணையில்
அண்ணு வார்தமக் கன்பு செய்திடும்
அண்ணல் ராம சுரத்குமார். 379

மாயை என்னும்அப் பாம்பைக் கொன்றுமேல்
வாய்த்த சாந்த நிலத்தினில்
மேய வாழ்வினன்; இராமன் பேர்சொலி
விருப்பு டன்குதித் தாடுவான்;
தாயைப் போலன்பு காட்டு வான்;வரும்
தாபம் யாவையும் போக்குவான்;
சேயைப் போல்நகை செய்தி ருப்பவன்;
தேவன் ராம சுரத்குமார். 380

குப்பை கூளங்கள் சூழக் காகிதம்
குவிந்தி ருப்பவும் தூய்மையில்
தப்பி லாவகை நிற்ப வன்;மொழி
தண்மை யாகவே பேசுவான்;
இப்பி றப்பன்றி மற்றோர் சன்மத்தை
எய்தி டாத பெருந்தவன்,
அப்ப ணிந்தவன் சார்அண் ணுமலை
யதனில் ராம சுரத்குமார். 381

உள்ளத் தென்றுமே பிரம ஞானம
தோங்கி நிற்பவன்; உலகியல்
வெள்ளத் தேநின்றும் அமிழ்தல் செய்கலா
வித்த கன்;பெருந் தவத்தினன்;
கள்ளப் போலிகள் போல்இ லாதவன்;
காமம் என்பதை வீட்டினன்;
அள்ளல் நல்வயல் அருணை மாப்பதி
அமரும் ராம சுரத்குமார். 382

கோலம் பார்த்தவர் சற்று மெய்ந்நிலை
குறிக்க லாகலார்; அவனுடைச்
சீலம் கண்டவர் பெரிய ஞானியாச்
செப்பி வந்து வணங்குவார்;
நீல மேனியன் இராமன் நாமமே
நித்தம் சொல்லிக்கூத் தாடுவான்;
ஆல கண்டன்வாழ் அருணை மாநகர்
அவிரும் ராம சுரத்குமார். 383

நினைக்க லாகலாப் பரம்பொ ருள்நெஞ்சில்
நிற்க வைத்துயர் சித்தனும்;
வினைக்க லாமெலாம் முற்றும் நீக்கிய
வித்த கன்;மிகச் சுத்தனும்;

கலைக்கும் மாயையின் வலிமை போக்கிய
கண்ணி யன்மிகத் திண்ணியன்;
அலைக்கு நேர்தரும் ராம் சுரத்குமார்
அருணை மாநகர் வாழ்வனே. 384

(கட்டளைக் கலிப்பா)

காசை யேபெரி தாக நினைந்திடும்
காசி னிக்குள் இறையருள் மேன்மையை
மாசி லாத வகையில் உணர்த்திடும்
வள்ளல் நற்றவ யோகம் நிரம்பினான்;
தேசு பெற்றவன் அண்ணு மலைப்பதி
திகழு கின்றவன்; எக்கண மேனும்தன்
வாசி போலவே ராமன்றன் நாமத்தை
மனத்தி லெண்ணுவான் ராம சுரத்குமார். 385

மாயைப் பேயின் வலியை அடக்கினான்;
மலங்கள் போக மிகவும் முடக்கினான்;
சேயைப் போலச் சிரித்து மகிழ்பவன்;
சிறிய எண்ணங்கள் சற்றும் இலாதவன்;
தாயைப் போலத் தயையிற் சிறந்தவன்;
தந்தை போல அறிவுரை சொல்பவன்;
நாயை அன்புடன் கொஞ்சிக் களிப்பவன்;
நாமம் ராம சுரத்குமார் காண்மினே. 386

கண்டு போல இனிய மொழிபவன்;
கண்டு தந்துபால் தந்து களிப்பவன்;
அண்டு வார்கள் மனத்துயர் போகவே
அமுத மாகிய சொற்கள் விரிப்பவன்;
மிண்டு செய்யும் பொறியை அடக்கினான்;
வேதம் என்பது மேம்படு நூலென்பான்;
எண்டி சைக்கும் பராவும் புகழினன்;
இருந்த வத்தினன் ராம சுரத்குமார். 387

காசி மாநகர் கண்டு களித்தவன்;
கங்கை யின்கரை மேவி உலாவினுன்;
ஆசி லாதவர் ஆகிய ராமதாஸ்
அடியை மேவி வணங்கி மகிழ்ந்தவன்;
தேசு பெற்ற திருமுகம் கொண்டவன்;
சிரிப்பி லேஎவர் தமையும் மயக்குவான்;
ஆசில் மாபதி யாகும்அண் ணுமலை
அதனில் வாழ்பவன் ராம சுரத்குமார். 338

பிச்சைக் காரன் எனத்தனைச் சொல்பவன்;
பெரிய ஞானம் எனும்உயர் செல்வத்தன்
இச்சை சற்றும்இல் லாதவன்; வந்தவர்க்
கினிய நன்மொழி பேசி உவப்பவன்;
கொச்சை யாந்தமிழ் பேசுவான்; ஆங்கிலம்
கூடும் இந்தியி லேஉரை யாடுவான்;
நச்சு வார்க்கினி யான்அரு ணைப்பதி
நண்ணி னுன்உயர் ராம சுரத்குமார். 389

எந்த நேரத்தும் ராமனை உள்ளத்தில்
இருக்க வைத்தவன்; காமம் அகற்றினுன்;
சொந்த மாகஓர் பொருளும்இல் லாதவன்;
சொருப மின்னதென் றேயறிந் தாழ்பவன்;
சந்த மார்தரு பாடலில் இன்பத்தைச்
சார்ந்து நிற்பவன்; அருணை வளம்பதி
வந்து வாழ்பவன்; ஞானியர் போற்றிசெய்
மாதவத்தினன் ராம சுரத்குமார். 390

மங்கை மார்களைத் தாய்போல் நினைப்பவன்;
மாடை தன்னையே மண்போல் கருதினுன்;
அங்கை தூக்கியே அஞ்சல் அருள்பவன்;
அரிய தாடியும் பாகையும் கொண்டவன்;

செங்க ரத்திஞல் பாலே அளிப்பவன்;
சினமென் கின்றதைச் சீறி அடக்கிஞன்;
எங்கு மாய்நிற்கும் அப்பர மாத்மனே
இதயம் வைத்தவன், ராம சுரத்குமார். 391

பாலர் வந்து பணிகுவர்; மங்கையர்
பரிவி ஞேடு வணங்குவர்; பண்புடைச்
சீலர் வந்து தொழுகுவர்; பாவலர்
சேர்ந்து பற்பல பாவினேப் பாடுவார்;
கோலம் பற்பல காட்டியே நிற்கிருன்;
குதூகலித்து மகிழ்ந்து சிரிக்கிருன்;
ஆலம் தன்னே அமுதென ஆக்கியோன்,
அருணே மாநகர் ராம சுரத்குமார். 392

வேத னேப்படு நெஞ்சினர் வந்திடின்
வேது தன்னேக் கொடுப்பவன் போலவே
சீத நன்மொழி பேசி நலம்செய்து
செம்மை யாகிய நன்னெறி காட்டுவான்;
போத மெய்ப்பொருள் இன்னதென் றேயறி
பொற்பி ஞன்; தீக் குணங்கள் அகற்றிஞன்;
வேத நான்கினும் சொல்லிய மெய்ப்பொருள்
மேவு முள்ளத்தன் ராம சுரத்குமார். 393

காண வந்து வணங்கி எழுபவர்
கருத்தை உன்னியே நன்மையைக் காட்டுவான்;
பூண லுற்றதோர் பாகை உடையவன்;
பொற்பு மேவிய அக்கநன் மாலேயன்;
பேண லுற்றவர்க் கன்னேயைப் போல்பவன்
பிஞ்ஞு கன்திருப் பாதத்தை உள்ளத்தே
மாண வைத்தவன் அண்ணு மலேப்பதி
வாழும் யோகியாம் ராம சுரத்குமார். 394

காயும் கோபம் அடக்கிப் பொறையினைக்
கலன தாகவே பூண்டு சிறந்தவன்;
மாயை என்பதன் வல்லமை போக்கியே
மனத்திற் சாந்தம் நிலாவிய தன்மையன்;
தாயைப் போலவும் தந்தையைப் போலவும்
தவத்தை மேவிய சற்குரு வாகவும்
மேய யாவர்க்கும் நன்மையைச் செய்குவான்;
மேவும் யோகியாம் ராம சுரத்குமார். 395

மூன்று மாமலம் தம்மை அரிந்தவன்;
மூளும் மாயையை வேரொடு கல்லினன்;
ஆன்ற வர்சொலும் அவ்வுரை யாவையும்
அற்பு தப்பய னுள்ளன என்பவன்;
தோன்று கின்றன யாவையும் ஈசனின்
தோற்ற மாமெனக் கண்டு களிப்பவன்;
பூன்ற ஞானத்தைப் பெற்றவன்; சீலமே
பூண்டு நிற்பவன் ராம சுரத்குமார். 396

காம மென்னுமப் பாம்பை அழித்தவன்;
காசி லாசை சிறிதுமில் லாதவன்;
சேம மாகிய மெய்ப்பொரு ளைஉளம்
தேக்கி நிற்பவன்; தேசு நிரம்பினன்;
ஓமெ னும்பொருள் தன்னை உணர்ந்தவன்;
ஒன்று மெய்ப்பொருள் என்ன உரைப்பவன்;
வாம பாகத்தில் அம்மையை வைத்திடும்
வள்ளல் வாழரு ணைப்பதி ராமனே. 397

ஆண்ட வன்திரு நாமத்தைச் சொல்லியே
அமுத முண்டவன் போல மகிழ்பவன்;
நீண்ட தாடி புனைவன்; பாகையை
நித்தம் தன்சிரத் தேதரிக் கின்றவன்;

பூண்ட ஆடை அழுக்குடை யாயினும்
புனித மேயவன் திருவுரு ஆகுமால்,
காண்டற் காம்திரு அருணையில் வாழ்தரும்
கண்ணி யங்கொளும் ராம சுரத்குமார். 398

பொன்னும் மாதரும் மற்றுள யாவையும்
பொத்திப் பொத்தியே ஆசையால் கொள்பவர்
மின்னும் மின்னலாம் வாழ்வை உவக்கிறார்;
மேலை நாளினிற் காலற்கென் சொல்லுவார்?
என்னச் சொல்லியே உண்மையைக் காட்டுவான்;
ஏக னாகிய அப்பொருள் பற்பல
மன்னும் ரூபத்தில் காணுவ தென்பவன்
மாத வத்தினன் ராம சுரத்குமார். 399

காலம் போய்விடும்; காலனும் எய்துவான்;
காம மாதிய போக்குவார் காலன்றன்
கோலம் கண்டு பயப்படு வாரலர்;
கூடும் அன்பினில் நீடிய வீரராம்;
சீலம் ஈதெனக் கண்டவர் உய்குவார்;
சேற்றி லேபுரள் கின்றவர் போலவே
ஞாலப் பற்றினில் நிற்பவர் உய்கலார்;
நாடு வீரென்பான் ராம சுரத்குமார். 400

ஐயம் பற்பல கொண்டு மயங்கியே
அரிய தாம்பொருள் இன்னதென் றோர்கிலா
தெய்தும் வாழ்வை அவமே கழிப்பவர்
இறுதி வந்திடின் என்செய்வர்? ஈசன்றன்
மொய்ம்ம லர்ப்பதம் உள்ளத்தில் வைத்தென்றும்
மூளும் அன்பை வளர்ப்பவர் உய்குவார்,
மெய்யி தாமென்று சொல்லுவான், அருணையில்
மேவும் யோகியாம் ராம சுரத்குமார். 401

(16–11–1981)